www.padippakam.com




படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# தொட்டில் தொடங்கி தொடுவானம் வரை

(நாட்டுப்புறப் பாடல்கள் தொகுப்பு)

தொகுப்பாசிரியர்
முனைவர். கே.ஏ. குணசேகரன்

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட்.,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை-98.

படிப்பகம்

www.padippakam.com

**THOTTIL THODANGI THODUVAANAM VARAI**
(Tamil Folk Songs)

Compiled by
**Dr. K.A. Gunasekaran M.A., Ph.D.,**

முதல் பதிப்பு : அக்டோபர், 2000.

Code No. : A-1094

ISBN : 81-234-0681-9

**விலை : ரூ.64.00**

ஒளிஅச்சு : ஹைடெக் கிராஃபிக்ஸ், சென்னை.

அச்சிட்டோர்: Aiyanar Offset, Chennai - 600 106. ✆ 620 8913



படிப்பகம்

www.padippakam.com

# பதிப்புரை

அறிவியல் கண்டுபிடிப்புகள் - தகவல் தொடர்பு சாதனங்களை நவீனப்படுத்தியுள்ளன. நாட்டின் பல குக்கிராமங்களுக்கெல்லாம் போக்குவரத்து வசதிகள் பெருகிவிட்டன. மக்களின் பண்பாடுகளையும் பழக்க வழக்கங்களையும் பெருமளவில் தகவல் தொடர்பு ஊடகங்கள் மாற்றிவிடுகின்றன. தமிழ் மொழி உச்சரிப்புகள் பாணிகள் மாவட்டந்தோறும் மாறுபட்டாலும் அவர்கள் பேசுவது தமிழேயாகும். கோவை, மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் வாழும் மக்கள் பேசும் பாணி வேறானாலும் அவர்கள் பேசும் மொழி ஒன்றேயாகும். கிராம மக்களின் பண்பாட்டையே மாற்றிவரும் நவீன அறிவியல் கண்டு பிடிப்புகள் பெருகிவிட்ட இந்நாளில் அவர்கள் வாய்மொழி இலக்கியமாக, ஏட்டில் எழுதாத காவியமாக, நாட்டுப்புறப் பாடல்கள் விளங்கி வருகின்றன. தமிழின மக்களின் மாண்புகளை, அவர்களது பண்பாடுகளை வளர்ந்து வரும் 'மீடியாக்கள்' முழுவதுமாக மாற்றிவிட முடியாது என்பது தெரிந்த உண்மை. ஆனால் அவற்றையும் நவீன அறிவியல் கண்டுபிடிப்புகள் வளர்க்க முன்வர வேண்டும். நாட்டுப்புறப்பாடல்கள் நம் முன்னோர்கள் நமக்களித்த சொத்து. ஏடறியாமல் எழுத்துவகையறியாமல் தமிழ் மக்கள் இருந்த போதே அவை உருவாக்கப்பட்டன. அவை தொன்மையானவை என்பதில் ஐயமில்லை.

அறிஞர்களின் ஆராய்ச்சிப் படிப்புக்கு இலக்காகியுள்ள இந்த நாட்டுப்புறவியல் முனைவர் பட்டம் பெறுவதற்கும் மட்டுமல்லாமல் அக்கலையினை வளர்த்தெடுக்கவும் பாதுகாக்கவும் வேண்டும். நாகரிகமடைந்த மக்களுக்கு அவற்றை வெளிப்படுத்தவும் வேண்டும். இவற்றில் சுவையான செய்தி என்னவென்றால் நாட்டுப்புறக் கலைகளின்பால் ஈடுபாடு கொண்டு பேராசிரியர்களும் நாட்டுப்புறக் கலைஞர்களாகிவிடுகின்றனர். அவர்களில் பேராசிரியர் டாக்டர் **கே.ஏ. குணசேகரன்** அவர்களும் ஒருவர். அவரும் நாட்டுப்புறக் கலைஞராகிவிட்டார் என்பது அவரது 'தன்னானே' இசைக்குழு

படிப்பகம்

www.padippakam.com

உணர்த்துகிறது. நாட்டுப்புற மண்ணிலிருந்து உருவான அவர், அவர் சார்ந்த மண்ணின் மக்களைப்பற்றியும், அவர்களுடைய மாண்புகளைப் பற்றியும் நூலெழுதியும், ஒலிநாடா வெளியிட்டும் வானொலி, தொலைக்காட்சி போன்ற தகவல் தொடர்பு சாதனங்களின் மூலமும், இசை நிகழ்ச்சிகளை நடத்தியும் தொண்டு செய்து வருகிறார்.

இந்நூலில் இடம் பெற்றுள்ள பாடல்கள் 70, 80-ம் ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்டவை. பாடல்களைப் பாடிய கலைஞர்களின் பெயர் வயது, ஊர் ஆகியவற்றையும் அந்தப் பாடலின் அடியில் தெரிவித்துள்ளார். நாட்டுப்புற பாடல்களைப் பாடிக் காண்பித்த மண்ணின் மைந்தர்கள் 18 வயது முதல் 70 வயது வரை உள்ளவர்கள்.

இந்த நாட்டுப்புற மன்னர்கள் எந்தக் கல்லூரியிலும் சென்று படிக்கவில்லை. இத்தொகுதியில் அடங்கியுள்ள நாட்டுப்புறப் பாடல்கள் மக்களின் தமது வாழ்க்கைப் பட்டறையில் வார்த்தெடுக்கப்பட்டவை.

விற்பனை நோக்கத்தில் இல்லாமல் நாட்டுப்புறக் கலை வளர வேண்டும் என்ற நல்லெண்ணத்திலும் கல்வி நிறுவனங்களில் இந்நூலுக்கு நல்ல வரவேற்பு இருக்கும் எனக் கருதியும் **தொட்டில் தொடங்கி தொடுவானம் வரை** என்ற நூலை எமது **நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம்** வெளியிடுகிறது.

- **பதிப்பகத்தார்**



படிப்பகம்

www.padippakam.com

# கிரீடம்

இன்றையத் தமிழ் இசையின் மூலத்தையும் தமிழ்க் கவிதையின் பிறப்பிடத்தையும் கண்டுகொள்ள நாடோடிப் பாடலிடம்தான் போக வேண்டும் நாம். இவைகளின் தாய்வீடு இதுதான். நாடோடிப் பாடல்களை இப்படி ஒரு புத்தகத்தில் பார்த்து - வசனம் போல் - படித்து மகிழ நினைப்பது மாங்கனியைப் படத்தில் எழுதி "ருசி" பார்ப்பது மாதிரியான ஒரு அசட்டுக் காரியம்தான். இந்தப் பாடல்களை நீங்கள் அந்தந்த மண்ணின் மக்களிடம் போய் பாடச் சொல்லிக் கேட்க வேண்டும். உயிருள்ள அழகிய மீன் நீந்தும்போது பார்த்து மகிழ்வது எப்படி; அதைக் கருவாடாகக் காண்பது எப்படி!

ஒரு காலத்தில் காடுகளில் பூத்து மணம் பரப்பிக் கொண்டிருந்த பூச்செடிகளைக் கொண்டுவந்துதான் நாம் இப்போது நந்தவனமாகவும் பூந்தோட்டமாகவும் ஆக்கிக் கொண்டிருக்கிறோம். அருமை நண்பர் **கே.ஏ. குணசேகரன்** ஒரு மாபெரும் பூந்தோட்டத்துக்குச் சொந்தக் காரராக விளங்குகிறார்.

இந்தப் பாடல்கள் பிறவியிலேயே அவருடைய ரத்தத்தில் ஊறியவைகள். எப்படிப்பார்த்தாலும் அவருடைய மண்டைக்குள்ளே இவ்வகைப் பாடல்களில் ஏதாவது ஒன்று புகைந்து, ஊதுபத்தி போல மணத்துக் கொண்டே இருக்கும். ஜமாவோடு அவ்ா வந்து பாடத் தொடங்கி விட்டால் நம்மோட உடம்பும் மனசும் நம்மை அறியாம லேயே ஆட்டம்போட ஆரம்பித்துவிடும் தாளத்துக்குத் தக்கபடி. இப்படி மனதை அள்ளும் ஒருவித்தை மந்திரவாதியின் மந்திரக்கோல்போல் அவரிடம் இருக்கிறது. காட்டில் மடிகூட்டிப் பருத்தி சேகரிப்பது போல தமிழ்நாட்டின் பல பகுதிகளுக்கும் போய்த் தேனீயின் சுறுசுறுப்போடு இந்தப் பாடல்கள் அனைத்தையுமே சேகரித்துக்கொண்டு வந்திருக்கிறார் மனுசன்.

படிப்பகம்

www.padippakam.com

ஞாயப்படி இதுகளெல்லாம் ஒரு புத்தகமாக வராமல், பாடியவர் களின் குரலிலேயே "கேசட்"டுகளாகத்தான் வந்திருக்க வேண்டும்; பழக்க தோசம் இப்படி வந்துவிட்டது.

மக்களிடம்போய் இப்பாடல்களைச் சேகரிப்பது என்கிறது அவ்வளவு லேசுப்பட்ட காரியமில்லை. நானும் கொஞ்சகாலம் அலைந்து திரிந்தவன் என்கிறதை வைத்துத்தான் சொல்லுகிறேன் இதை. அப்படிப்போய் அலைந்து திரிந்தவர்களுக்குத்தான் தெரியும். இதோட அருமை.

இப்படிச் சேகரித்து வெளிக்கொண்டுவந்த புத்தகங்களிலிருந்து நோகாமல் தொகுத்தே புத்தகம் போட்டுவிடுகிற ஆத்துமாக்களும் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். அவைகளைத் தங்களுடைய பாட்டுப் போல் சினிமாப்பாட்டாகவும் எழுதி சம்பாதிச்சவர்களும் உண்டு. நம்ம தமிழ் ஆட்களில்தான் எத்தனை வகை என்கிறீர்கள்! ஈ கடிக்கா மல் தேன் எடுப்பவர்கள், தவிச்ச மொசல் (முயல்) அடிக்கிறவர்கள், நனைஞ்ச கோழி பிடிக்கிறவர்கள், இப்படி இப்படி; சும்மா சொல்லப் படாது.

தமிழில் முதல் முதலில் இந்தப்பாடல்களைச் சேகரிக்க வேண்டும் என்கிற புத்தி தமிழனுக்கு வரலை; ஒரு வெள்ளைக் காரனுக்குத்தான் வந்தது. அதும்பிறகு ஒரு வங்காளிக்காரனுக்கு வந்தது.

ஏன் நம்மவனுக்குத் தோணலை?

"ஹெ, இதெல்லாம் ஒரு பாட்டோட சேர்த்தியா; கவிதையோட கூட்டா" என்கிற மதக்கம்தான். அதோட எலக்கண சுத்தம் இல்லியே! எவஞ் சீந்துவான் இதெ?!

ஆக, தமிழில் மெத்தப் படித்த படிப்பாளிகள் இதைக் கைவிட்டார்கள். சங்கீதக்காரன்களும் கைவிட்டான்கள். மிக நீண்ட நாட்களாக இவைகள் அனாதரவாக, தாம்பிறந்த மண்ணின் காற்றினாலேயே சஞ்சாரம் பண்ணிக் கொண்டிருந்தன.



படிப்பகம்

www.padippakam.com

எவர்கள் கைவிட்டால் என்ன; புனுகு, காடெல்லாம் மணக்கும். யாரையும் கேட்டுக்கொண்டு அது மணப்பதில்லை.

புனுகுப் பூனையின் விரைப்பகுதியில் உள்ள மிகச்சிறிய பையில் புனுகு நிறைந்தவுடன் அதுக்கு அரிப்பு எடுக்கிறது. எங்கேயாவது கொண்டுபோய் சொறசொறப்பான பாறையில் தேய்க்கிறது. அப்படித் தேய்க்கும் போது வெளிப்படும் மிளகு அளவு புனுகுதான் அப்படிக் காடெல்லாம் மணக்கிறது. அந்த மணத்தை முகர்ந்துகொண்டே அதைத்தேடி பெண் பூனை வருகிறது அதனுடன் இணை சேர.

நம்முடைய உடம்பில் தேய்த்து இன்புற எப்படி புனுகுப்பூனை புனுகை உற்பத்தி செய்யவில்லையோ அதே போல் நாம் படித்து இன்பமுற இப்பாடல்களை இந்த மக்கள் நமக்கென்று உண்டாக்க வில்லை. அவர்களுக்காக அவர்களால் உண்டாக்கப்பட்ட இந்தச் செல்வங்களை அவர்கள் புண்ணியத்தில் நாமும் கொஞ்சம் அனுபவிக்கிறோம்.

இந்தப் பாடல்களை அவர்கள் இயற்றிய அயனான வர்ணமெட்டுக்களிலேயே கேட்கவேண்டும் நாம். கலப்பட மெட்டுக் களில் கேட்டே பழக்கப்பட்டு விட்டோம். ரசிகமணி டி.கே.சி சொன்னது போல, நாம் "தாமரைப் பூவைக்கூட மடங்க மடங்க இஸ்திரி போட்டுத் தேய்த்து" வைத்துக் கொள்ளத்தான் பிரியப் படுகிறோம்.

நாடோடிப் பாடலின் மொழிப் பிரயோகம், அது அந்த மக்களுக்கே கைவரப் பெற்றது. வர்ணனைகளும் அவர்களுக்கே உரியது.

* * *

அந்தப் பொண்ணுக்குப் பிடித்தமான ஒருவன்; பெயர் பொன்னுச்சாமி. தோட்டத்தில் கமலை இறைத்துக் கொண்டிருக்கிறான். அதை அவள் பாடலில் எப்படிச் சொல்லுகிறாள் என்று பாருங்கள்:



படிப்பகம்

www.padippakam.com

*"பூசார மரத் தோட்டம்*
*பொன்னுசாமி இறைக்கும் தோட்டம்*
*அந்நா கேக்கு கமலைச் சத்தம்*
*அன்னக்கிளி சத்தம் போல"*

தோட்டத்தை, எந்தத் தோட்டம் என்று குறிப்பிட ஒரு பெயர் இருக்கும். பூவரசு மரத் தோட்டம். கமலை இறைக்கிறவர்களுக்கும் மாட்டுக்கும் நிழல்தர ஒருவரிசை பூவரசு மரங்கள் வைப்பதுண்டு. அதனால் அந்தப் பெயர். இது ஊர்க்காரர்கள் வைத்தது. இவள் வைத்த பெயர்:

*"பொன்னுசாமி இறைக்கும் தோட்டம்"!*

சதா அங்கேயிருந்து கமலை இறைக்கும் சத்தம் கேட்டுக் கொண்டே இருக்கிறது அவளுக்கு. (இறைக்காத போது கூட கேட்டுக் கொண்டே இருக்கும்!!!)

ராத்திரிகளில் நிலாவிலுங்கூட கமலை இறைக்கிறது உண்டும். இவள் படுக்கையில் படுத்திருக்கும்போதும் அந்தச் சத்தம் நிஜ மாகவே கேட்டிருக்கிறது. கூனைவடம் ராட்டில் உருண்டு செல்லும்போது ராட்டு எழுப்பும். சத்தமும் வால் கயிறு உருளையை உருட்டும் போது எழும் ரண்டு சத்தங்களும் இணைந்து ஒரு இசையை எழுப்புகிறது அவளுள். அந்த சத்தத்துக்கு உவமையாக எதைச் சொல்ல?

*"அந்நா கேக்கு கமலைச் சத்தம்*
*அன்னக்கிளி சத்தம் போல"*

அன்னக் கிளி என்று ஒரு பறவை உண்டா! நாம பார்த்ததில்லை. நாம என்ன அவளுந்தான் பார்த்ததில்லை. அதனாலென்ன (நம்மிடங்கேட்டால் ஒரேபோடில் "அந்தச் சத்தத்துக்கு ஈடு இணையே கிடையாது சார்" என்று எதையாவது சொல்லித் தொலைப்போம்; நாம படிச்ச படிப்பு அப்படி) அவள் சொன்ன "அன்னக்கிளி சத்தம் போல" என்று சொன்னதுதான் ரொம்பச் சரி; அதில்தான்



படிப்பகம்

www.padippakam.com

அந்தப் பாடலின் உசுர் இருக்கிறது: பாடலை நாம மாறி மாறி, வசனத்துலேயே சொல்லிப் பார்த்தாலுங்கூட, அது நம்மை என்னமோ பண்ணுகிறது. அந்தப் பெண்ணாக நம்மை நினைத்துக் கொண்டு கொஞ்சம் சொல்லிப் பாருங்கள்:

*"பூசார மரத்தோட்டம்*
*பொன்னுச்சாமி இறைக்கும் தோட்டம்*
*அந்நா கேக்கு கமலைச் சத்தம்*
*அன்னக்கிளி சத்தம் போல"*

**கி. ராஜ நாராயணன்**

**புதுச்சேரி.**



படிப்பகம்

www.padippakam.com

# சுருக்கக் குறி விளக்கம்

| | | |
|---|---|---|
| தொ.ஆ. | - | தொகுப்பு ஆசிரியர் |
| த.நா.பு.பா | - | தமிழக நாட்டுப்புறப் பாடல்கள் |
| கா.வி.க. | - | காதில் விழுந்த கவிதைகள் |
| நா.பு.பா. | - | நாட்டுப்புறப் பாடல்கள் சமூக ஒப்பாய்வு |
| ஏ.எ.க. | - | ஏட்டில் எழுதாக் கவிதைகள் |
| இ.த.பா. | - | இளைய தம்பி பாலசுந்தரம் |
| ம.மா.நா.பா. | - | மட்டகளப்பு மாவட்ட நாட்டார் பாடல்கள் |
| சு.ச. | - | சு. சண்முக சுந்தரம் |
| ம.மா. | - | மதுரை மாவட்டம் |
| மா. | - | மாவட்டம் |
| த.நா.பா. | - | தமிழக நாட்டுப் பாடல்கள் |
| நா.பா.கா.த.வாழ். | - | நாட்டுப்புறப் பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல் |
| ப.சு.மு.மா. | - | பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் (தற்போது சிவகங்கை மாவட்டம்) |



படிப்பகம்

www.padippakam.com

# காணிக்கை

பாடல்கள் பாடியும்
தகவல்கள் தந்தும்
துணை செய்த தமிழக நாட்டுபுற மக்களுக்கும்
மண்ணின் பாடல்களை
மக்களிடம் திரும்பக் கொண்டு செல்ல
என்னோடு கடந்த பத்து ஆண்டுகளாகத்
தமிழகத்தின் பல்வேறு அரங்குகளில்
துணைநின்ற எனது மதிப்பிற்குரிய
மகத்தான நாட்டுப்புறக் கலைஞர்களுக்கும்
இந்நூல் காணிக்கை...

**கே.ஏ. குணசேகரன்**


படிப்பகம்

www.padippakam.com

# முன்னுரை

"கிராமியப் பயணம்" செல்வதென்றால் மனதுக்குள் ஏகக் கொண்டாட்டமாக இருக்கும். பாட்டிமார்களிடமும், தாத்தாமார் களிடமும் நிறையப் பேசிப் பேசிக் கடைசியில் பாடல்கள் பாடச்செய்து எழுதிக் கொள்வதுமுண்டு. சில வேளைகளில் பதிவு செய்து கொள்வதுமுண்டு. பாடல்களின் கருத்துக்கள் எவ்வளவு முக்கியம் என்று உணருகிறேனோ அந்த அளவுக்குப் பாடல்களின் மெட்டுக்களைக் குறித்துக் கொள்வதுமுண்டு. சில வேளைகளில் மனனம் செய்து கொள்வதுமுண்டு.

எனது கிராமிய இசைக்குழுவின் நிகழ்ச்சிகளை அடிக்கடிக் கேட்டவர்கள் மீண்டும் அவர்கள் ஊர்த்திருவிழாக்களுக்கும், கல்லூரி விழாக்களுக்கும் அழைப்பதுண்டு. அவர்கள் எனது கலைக்குழுவில் (புதிய) அறிமுகம் செய்விக்கப்படாத பலவிதமான கிராமிய இசைப்பாடல்களை எதிர்நோக்குவது வழக்கம். இந்தத் தேவையின் அடிப்படையில் கிராமங்களில் சென்று பாடல்களைச் சேகரிக்கும் பணியை இன்றளவும் தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறேன்.

பாடல்களை சேகரிக்கும் காலத்தே கிடைக்கும் களப்பணிச் செய்திகள் பல உண்டு. எனது களப்பணி நினைவுகளை வாய்ப்பு ஏற்படும் போது பதிவு செய்ய உள்ளேன். வானொலிகளிலும், டெலி விசன்களிலும், என் கலைக்குழு பங்கெடுத்துக் கொண்டதோடு பல்வேறு மேடைகளிலும் பாடிய பல்வேறு வகை நாட்டுப்புறப் பாடல் களைத் தொகுத்து இந்நூலில் வழங்கியுள்ளேன். "அக்கினி ஸ்வரங்கள்" என்ற ஒரு நூல் ஏற்கெனவே வந்திருப்பினும் விரிந்த நிலையில் விளங்கும் பல்வேறு களப்பாடல்களையும், எனது பி.எச்.டி. பட்டத்திற்காக கிராமங்களில் சென்று திரட்டிய பல பாடல்கள் ஆய்வேட்டில் இடம் பெறாத பாடல்கள் பலவற்றையும் இந்நூலில் தொகுத்து வழங்கியுள்ளேன்.



படிப்பகம்

www.padippakam.com

பல்வேறு சமயங்களில், பல்வேறு நபர்களிடம், பல்வேறு இடங்களில் கிடைத்த இந்த நாட்டுப்புறப் பாடல்கள் பல்வேறு வகைப்பட்டனவாகும். இவற்றை முறைப்படுத்தித் தர முனைந்ததன் விளைவாகவே தாலாட்டுப்பாடல்கள், தொழிற்களப்பாடல்கள், திருவிழாப்பாடல்கள், காதல் பாடல்கள், திருமண விழாப் பாடல்கள், ஆட்டப் பாடல்கள், எழுச்சிப் பாடல்கள் எனத் தொகுத்து உதிரிப் பூக்களால் ஒரு கதம்பமாலை உருவாவது போல பல்வேறு வகைப் பாடல்களை முறைப்படுத்தித் தொகுத்து இத்தலைப்பில் வழங்கியுள்ளேன்.

"தொட்டில் தொடங்கி சுடுகாடுவரை" என இப்பாடல்களின் தொகுப்பு நூலுக்குத் தலைப்பிடலாமா? கையில் கிடைத்த எழுச்சி மிகு பாடல்கள் உரக்க சிந்திக்க வைத்தன. மக்கள் படைத்த இந்தப் பாடல்களில் எழுச்சிப் பாடல்களும் மக்களால் உருவாக்கப்பட்டவை. இவற்றை மனதில் எண்ணி "தொட்டில் தொடங்கி தொடுவானம் வரை" எனத் தலைப்பிட்டேன். ஆம், இந்த மக்கள் தான் அந்த நெடு வானத்தையும் தொடுவானமாக்கும் சக்தி படைத்தவர்கள். இந்தத் தலைப்பில் சாதாரண மக்கள் படைத்த இந்தப் பாடல்களைத் தொகுத்து வழங்குவது பொருத்தமானதாகும். காலமெல்லாம் களங்களில் விலை மதிக்க முடியாத வியர்வை நீரைச் சிந்தும் விவசாயத் தொழிலாளர்கள் உருவாக்கிய இந்தப் பாடல்கள் யாவும் அந்த வியர்வை மனிதர்களின் வியர்வையைப் போல உன்னதமானவை, உயர்வானவை, உண்மையானவை. இந்த மகா மனிதர்களை முதன்மையாக வைத்தே இப்பாடல்களின் வைப்பு முறையும் இங்குப் பின்பற்றப்பட்டுள்ளது. மலையின் மக்களின் பாடல்கள் ஒவ்வொரு வகையிலும் முதன்மையாக இடம் பெற்றுள்ளன.

## தாலாட்டுப் பாடல்கள்

தாலாட்டுப் பாடல்களில் உறவுமுறைப் பெயர்கள் அடிக்கடி சுட்டப் பெறுவதைக் காணலாம். மனித உறவுகள் மகத்தானவையாகும். தனி மனிதனாக, இந்த சமூக அமைப்பல்ல வேறு எந்த



படிப்பகம்

www.padippakam.com

சமூக அமைப்பிலும் வாழ முடியாது. இனக் குழுக்களாக இருந்து கால வளர்ச்சியின் பயனாய் இன்றும் உறவுமுறைகள் கடைப் பிடிக்கப்பட்டு மரபுகள் காக்கப்பட்டு வருகின்றன.

சாமியை விளித்துப்பாடும் தாலாட்டுப்பாடல்களானாலும் உறவுமுறைப்பெயர் இடம் பெறும் முறைமையினைப் பல தாலாட்டுப் பாடல்களில் காண முடியும்.

தாலாட்டுப் பாடல்களில் உறவுமுறைப் பெயர்கள் சுட்டப் படுவதோடு உறவுமுறையாளர்களால் செய்யப்பட வேண்டிய சடங்கு முறைகளும் கூடவே சொல்லப்படுவதும் கவனிக்கத் தக்கதாகும்.

பெண் குழந்தை பிறந்தாலும், ஆண் குழந்தை பிறந்தாலும் ஆண், பெண் என்ற வேறுபாடு இன்றி சீராட்டப்பெறுவதைத் தாலாட்டுப் பாடல்களில் காண முடிகிறது. பெண்களுக்கு சீதனம் கொடுத்து மாள முடியாதே என்ற காரணத்தால் ஆண் குழந்தை யையே எதிர்பார்க்கும் இன்றைய சமூகத்தில் இந்தத் தாலாட்டுப் பாடல்கள் வழி அன்றைய சமூகத்தில் பெண் குழந்தையும் ஆண் குழந்தைக்கு நிகராக மதிக்கப்பட்ட போக்கினைக் காண முடிகிறது.

இசை அமைப்பு முறை வட்டாரங்களுக்கு வட்டாரம் வேறுபடு கின்றன. ராராரோ ராரிரோ, ரோ ரொ ரொ ரொ, ரிரிரிரீ என்றெல்லாம் வகை வகையாக இசைக்குறிப்புகள் அமையும் விதங்களைத் தாலாட்டுப் பாடல்களின் வழியேயும் காண முடிகிறது.

தாலாட்டுப் பாடல்களில் சொல்லப்படும் செய்திகளைக் கொண்டு அவர்களின் வாழ்க்கைத் தரங்களையும், உறவுமுறைச் செல்வாக்குகளையும் உணர வாய்ப்பேற்படுகிறது.

எளிமையான சொற்களால் நீண்ட நேரம் பாடப்படக்கூடிய தாலாட்டுப் பாடல்கள் பெண்களிடம் மட்டும் விளங்குகின்றன. தாலாட்டுப் பாடல்கள் சாதிக்குச் சாதி, மதத்துக்கு மதம், வட்டாரங் களுக்கு வட்டாரம், வேறுபட்டனவாகின்றன. இவை உளவியல் பார்வையிலும், மொழியியல் அடிப்படையிலும், சமூகவியல் பார்வை ரீதியிலும் சாதிய ரீதியிலும் ஆராய்ந்து பார்க்கப்பட வேண்டியவை யாகும்.



படிப்பகம்

www.padippakam.com

## தொழிற்களப் பாடல்கள்

1. தேயிலை தோட்டத்திலே - அய்யா
சென்று சென்று மாயுறார் - அய்யா
நாயரே என்ன சொல்வேன் - அவர்
நாசமடைந்து தேகமழியுறார்
கட்ட உடையுமில்லே
கங்காணியார்களும்
மங்கையும் அழுகிறார். (தேயிலை)

2. கால்செருப்பு கட்டுவோம்
காரியமா வீரியமா வேலை செய்யுவோம்
தோல்களைச் செப்பனிட்டு வித்து வருவோம் - நல்ல
தோல் செருப்புக்கு பெல்ட்டுத்தான் கட்டுவோம்
மேலான சாதியின்னு விளம்பிடுவாங்க
அவுங்க இடுப்பிலே எங்க பெல்ட்டை கட்டிடுவாங்க.

உழைப்பாளிகளின் உணர்வுகளை இந்த வரிகளால் உணர முடிகிறது.

1. மின்னத்தி ஏருக்காரா
மொதலாளி பண்ணக்காரா
மாட்டை வெரட்டாதடா - எம்
மயிலு வந்து சேரட்டுமே
நடக்காத மாட்டோட
நாம்படும் பாட்டோட
ஈரப் புளுங்களை வச்சிக்கிட்டு - எம்
பொண்டாட்டி என்ன பாடு படுகிறாளோ

2. ஒத்த பனையோரம்
உழுகிற மச்சானே
சோறுதிங்க நீங்க வாங்க
சொளகுப் பூ நாந்தாரேன்

உழவுப் பாடல்கள் இவ்வாறு உளவியலோடு நடப்பியலைப் பேசுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

1. "மேகம் கருக்குதடி
மின்னிருட்டுக் கம்முதடி
மின்னிருட்டுக் கம்முதடி
பாவச்செடித் தூருக்குள்ளே
ஏண்டக்குமுக்கு டிக்குத் தாளம் - இப்போ
பாதை தெரியலடி.
ஏங்கடேக்கு டிக்குத் தாளம்"

2. "கடல நல்ல வெலையாச்சுன்னா
கருப்பாயி ஒங்காதுக்குத் தான்
கம்ம(ல்) பண்ணிப் போட்டிடுவேன்"

கடலை மூட்டைப்பாரம் ஏற்றிக் கொண்டு செல்லும் வண்டிக்காரனின் பாடல் வரிகள் இவை.

வயற்களங்களிலும், ஏனைய தொழிற்களங்களிலும் பாடும் ஆண்கள், பெண்கள் ஆகியோரின் பாடல்களில் வாழ்க்கையின் மிச்சங்களும் எச்சங்களும் வெளிப்படுகின்றன.

உழைப்புகள், உழைப்புக்கான கூலிகள் இவற்றின் அடிப்படையிலேயே வாழ்க்கை அமைகின்றது. வாழ்க்கைச் செய்திகள் உழைப்பாளர்களின் பாடல்களில் எவ்வாறு வெளிப்படு கின்றன என்று அறிவதோடு கூலி விவசாயிகளின் வாழ்க்கைப் பிரச்சினைகளையும் அவர்கள் பாடல்கள் வழியே அறிய முடிகின்றது.

## திருவிழா

நமது நாட்டுப்புறங்களில் நடைபெறும் திருவிழாக்களில் பல்வேறு தரப்பட்ட மக்களின் கலாச்சாரங்கள், பண்பாடுகள் ஆகியவற்றைக் காணலாம். நேரிடையாகவோ, மறைமுகமாகவோ நமது கிராமப்புறங்களில் நடைபெறும் திருவிழாக்கள் வேண்டப்படாத சில பழக்க வழக்கங்களையும் புதுப்பித்துக்கொள்ளத் (Renewal) துணை நிற்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com

ஒரு கிராமத்தில் நடைபெறும் திருவிழாவுக்கு அக்கம் பக்க முள்ள உற்றார், உறவினர்கள் அனைவரும் அழைக்கப்படுவது மரபு. கிராமங்களில் நடைபெறும் விழாக்களில் சாமிக்குப் பாரம்பரியமான பொறுப்பாளர்கள் சிலர் இருப்பர். இவர்கள் மட்டுமே கோயில் விழா, கோயில் வருமானம், கோயில் சார்ந்த வேறுவகைப் பொறுப்புகள், முன்னுரிமை போன்ற பலவற்றைத் தீர்மானிப்பவர்களாக உள்ளனர். அந்தத் தனிப்பட்டவர்களின் சாமிகள், சாதிப்பிரிவுகள் சார்ந்த நிலையில் கொண்டாடப்படுகின்றன. திருவிழாக்கள் சாதி மதங்களைப் புதுப்பித்துக் கொள்ள வாய்ப்பேறபடுத்தத் துணை நிற்கின்றன.

திருவிழாக்களில் பரம்பரைபரம்பரையாகக் கோவிலுக்கு வெளியே வசிக்கும் கொட்டுக் (மேளதாளம் வாசிப்போர்) கொட்டும் கிராமியக் கலைஞர்கள், கோவில் உள்ளே சென்று கால முறைப்படி வாசிக்கும் செவ்வியல் (Classical) வாத்தியக் கலைஞர்கள், பூசாரிகள் (வேளார் இனத்தவர்) கோவில் நிர்வாகிகள் (வாழ்க்கைத்தரம் உயர்ந்த மேலினத்தார்) எனப் பாகுபாடுகள் ஆண்டு தோறும் நிகழ்த்தப்பெறும் திருவிழாக்களில் காண முடிகின்றன. இது ஒருபுறம்.

மறுபுறம், மனித உறவுகளைப் புதுப்பித்துக் கொள்ள இத்திரு விழாக்கள் பயன்படுகின்றன. பல்வேறு ஊர்களிலிருந்து வரும் உற்றார் உறவினர்கள் சந்தித்துக் கொள்ள இத்திருவிழாக்கள் துணை நிற்கின்றன.

திருவிழாக்களில் விடிய விடிய கிராமிய ஆட்டங்கள், கூத்துகள் போன்ற பல கலை நிகழ்ச்சிகள் நடைபெறுவதுண்டு. தங்கள் கலை களையும் கலைத்திறன்களையும் வளர்த்துக் கொள்ள இத்திரு விழாக்கள் வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கின்றன.

திருவிழாப்பாடல்களில் சாமி, சாமிதாளம், சாமி வழிபடல், சாமியிடம் முறையிடல், சாமியிடம் வேண்டுதல், சாமி வருணனை, சாமிக்கான படையல், சாமியை வழிபட் அழைத்தல், விழாமுறை, விழாக்களம், மக்கள் பங்கு போன்ற பல்வேறு செய்திகளை அறிய முடிகிறது. இதன் வழியே கிராமியப் பண்பாட்டுச் செய்திகளை அறிய முடிகிறது.



படிப்பகம்

www.padippakam.com

காதல்

1. "கடலக் கொல்ல ஓரத்திலே
காடப் புறா ரெண்டு நிக்க - அந்தக்
காடப்புறா கலஞ்சொடனே
கலங்குதம்மா எம்மனசு"

2. "கொக்குக்குத்தான் கண்ணி வச்சேன் தன்னே னன்னானே
குளத்தோரம் குத்தி வச்சேன் தன்னே னன்னானே
கொக்குபடும் கண்ணியிலே தன்னே னன்னானே
கனமச்சான் பட்டியல்லோ தன்னே னன்னானே

3. காசுக்கில்லே பணத்துக்கில்லே
கண்ட போட்ட துண்டுக்கில்லே - ஒங்க
அருமைக் கொணத்துக் குல்லே
ஆசை கொண்டேன் ஒங்க மேலே

4. ரோட்டோரம் வீட்டுக்காரி
ரோசப்பூச் சேலக்காரி
நிக்கட்டுமா போகட்டுமா - மொறைச்சு நிக்கும்
மொறைப் பொண்ணே!
தொட்டாக்கப் பட்டுக் கிடுமா?

"அக்கா படிக்கிறது பி.எஸ்சி., ஆனாத் தெரியாது ஏ.பி.சி., நேத்து ராத்திரி எம்மா" என, அக்கா அம்மா என்ற உறவு முறைப் பெயர்களைச் சொல்லிக் கொச்சைப்படுத்திடும் இன்றைய திரைப்படப்பாடல்களிடையே கிராமியப் பாடல்களை அறிவது நன்று. கிராமியப் பாடல்களில் காதல் வெளிப்பாடு பண்பாட்டு முறையோடு (முறைப்பையன், முறைப்பெண்) இளைஞர்களிடத்தே விளங்குவதை அவர்களது பாடல்கள் வழி, காண முடிகிறது.

முக்கல்களும் முனங்கல்களும் இல்லாத ஒரு காதல் பாடலை இன்றைய தமிழ்த் திரை'' ' ங்களில் கேட்பது அரிதாகிறது.



படிப்பகம்

www.padippakam.com

நகரங்களில் விளங்கும் பொழுதுபோக்குப் பூங்காக்கள் காதல் களங்களாக விளங்குகின்றன. கிராமங்களில் தொழிற்களங்கள், காடுகள், சோலைகள், ஆகியன காதற் களங்களாக அமைகின்றன.

காதல் வெளிப்படும் கிராமியப்பாடல்களில் சங்க இலக்கியக் காதல் கோட்பாடுகளை ஒருங்கிணைத்துக் காண முடியும். நயம் பாராட்டுரைத்தல், "பசலை நோய் படுதல்" "அலர் உண்டாதல்" போன்ற பலவற்றினை கிராமியக்காதல் பாடல்களில் காணலாம். தலைவன், தலைவி, பாங்கன், பாங்கியர், ஆகியோர் சங்க காலக் காதல் துறையில் இடம் பெறுகின்றனர். சாதாரண மக்களிடையே உருவாகும் காதலுக்கும் 'தோழன், தோழி ஆகியோர் இடம் பெறுகின்றனர். உவமைகளாலும், உருவகங்களாலும் காதலை வெளிப்படுத்தும் முறைகளையும் கிராமியப்பாடல்களில் அறியலாம். காதல் புறாக் களைக் கொண்டு காதல் வெளிப்படுத்தும் முறையினையும். "கன்னி மனதைக் கொக்குவலை" யாக உருவகம் செய்விப்பதும் மேற்சொன்ன காதல் பாடல்களிலிருந்து எடுத்துக் காட்டுகளாகக் கொள்ளலாம். சங்ககாலத் தமிழ்க் காதல்களில் விளங்கும் கூற்று முறைகளை நாட்டுப்புறக் காதல் பாடல்களிலிருந்தும் அறிய முடியும்.

## திருமணவிழாப் பாடல்கள்

உறவு முறையாளர் கல்யாண வாழ்த்துப்பாடல்கள் பாடுவது வழக்கம். கல்யாண நாளின்போது பாடும் இப்பாடல்கள் பெரும்பாலும் தனி ஒருவராலே பாடப்படுவதுண்டு. மைத்துனர், மைத்துனி, கொழுந்தன், கொழுந்தியாள், மாமனைக் கட்டிக் கொள்ளும் உறவு முறையாளர்களாக இருப்பார்களேயானால் பாடும் பாடல்கள் இருவர் பாடிக் கொள்வதாக அமையும். இப்பாடல்களில் மாப்பிள்ளை, பெண் ஆகிய மணமக்களைக் "கிண்டல்" "கேளிக்கை" செய்து பாடுவது மரபு. மாப்பிள்ளை வீட்டார் சார்பாகப் பாடுவோர் பெண்ணைக் கேலி செய்வதும் பெண் வீட்டார் சார்பாகப் பாடுவோர் மாப்பிள்ளையைக் கேலி செய்வதுமாகப் பாடல்களின் பொருள்கள் அமையும்.



படிப்பகம்

www.padippakam.com

1. ஆயிரம் லச்சத்துல அட்டிய மாலை
அவளிருப்பாளே ஜோராக
ஆத்தோரம் அவளுக்கு மணிமேடை
அவளிருப்பாளே தோழி மாரோட
கண்ணா நலுங்கிட வா
சாமி நலுங்கிட வா

2. கல்யாணம் கல்யாணம்
காருடைய கல்யாணம்
புண்ணியமாப் போகுமின்னு
பூடி பண்ணிப் போட்டு வச்சார்
தருமமாப் போகுமின்னு
தாலி பண்ணிப் போட்டு வச்சார்
.......... .......... .......... ..........
திரு மாங்கலியம் கட்டுமுன்னே
நல்ல நாள் என்பார்கள்
.......... .......... .......... ..........
ஆலியை போல் தளச்சி
மூங்கி போல் வேரோடி
எந்நாளும் வாழ்ந்திருப்பார்

3. எங்களண்ணன் சாப்பிடும்தட்டு
ஆயிரருபா வெங்கலத்தட்டு
எங்கள் அண்ணி சாப்பிடும் தட்டு
அரக்காசு ஈயத்தட்டு

4. மாமரத்துச் சோலையிலே
எங்களண்ணன் மான் வேட்டை யாடையிலே
மாமரத்துக் கீழே நின்னு
மயங்கினதும் நீங்கதானா!

இந்த வண்ணம் அமையும் பாடல்கள் கூட்டுக்குரல்களாகப் பாடிய பாடல்களிலிருந்து சற்று வளர்ந்த நிலை எனக் கூறலாம். "நகுவசை பாடல்கள்" என்றும் சொல்லப்படும் இப்பாடல்களில் (Satire) அங்கத உணர்வுகள் நிறைய வெளிப்படுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

இந்திய வடமாநிலங்களில் இவ்வகைப்பாடல்களின்போது ஆட்டங்கள் ஆடிக்கொள்கின்றனர்.*

வாழ்வின் ஏக்கங்கள், வாழ்ந்ததன் எச்சங்கள் ஆகிய செய்திகள் கல்யாண வாழ்த்துப்பாடல்களில் இடம்பெறும். திருமண வாழ்த்துப் பாடல்களும் வட்டாரங்களுக்கு வட்டாரம், சாதிக்குச்சாதி, மதத்துக்கு மதம் என வேறுபாடுகள் கொண்டு விளங்குகின்றன. இசை, வட்டார வழக்குகள், பொருள்கள், பொருள்களை வெளிப்படுத்தும் பாங்குகள் ஆகியவை திருமண வாழ்த்துப் பாடல்களில் அறிய உள்ளவை ஆகும்.

## ஆட்டப் பாடல்கள்

ஆட்டப் பாடல்கள், ஆட்டமில்லாத பாடல்கள் எனப்பிரித்து அறியலாம். வசனமுள்ள ஆட்டப்பாடல்கள் வசனமற்ற ஆட்டப் பாடல்கள் என வகைப்படுத்தி ஆட்டப்பாடல்களைக் காண முடியும்.

| | |
|---|---|
| *குறவன் குறத்தி ஆட்டம்*<br>*ராசாராணி ஆட்டம்*<br>*கருப்பாயி ஆட்டம்* | *வசனமுள்ள ஆட்டப் பாடல்கள்* |
| *கும்மி ஆட்டம்*<br>*ஒயில் கும்மி ஆட்டம்*<br>*ஒயில் ஆட்டம்*<br>*தேவராட்டம்* | *வசனமற்ற ஆட்டப்பாடல்கள்* |
| *சேவாட்டம்*<br>*கோலாட்டம்*<br>*காவடி ஆட்டம்*<br>*ஆலி நடனம்*<br>*மயில் நடனம்*<br>*மந்தி ஆட்டம்* | *பாடல்களற்ற ஆட்டங்கள்* |

---

* ஒரிஸ்ஸாவில் நடைபெற்ற நேரு இளைஞர் மையங்களின் தேசிய ஒருமைப்பாட்டு (இளைஞர்) மாநாட்டில் நடைபெற்றபோது காஷ்மீரப் பெண்கள் கல்யாணப் பெண்ணையும் மாப்பிள்ளையையும் வைத்து அரை வட்ட வடிவில் நின்று கேலி செய்து அரைவட்ட அரங்கில் வந்து ஒவ்வொருவராய் ஆடிச் சென்றமையை அறிய முடிந்தது.


படிப்பகம்

www.padippakam.com

என்றபடி ஆட்டப்பாடல்களை வகைப்படுத்தலாம். ஒவ்வொரு ஆட்டங்களுக்கும் ஏற்பப் பாடல்கள் எவ்வாறு இசை அமைப் பினைப் பெற்றுள்ளன. பாடலடிகளுக்கும், இசை அமைப்புகளுக்கும் இசைக்கருவி வாசிப்பு முறைகளுக்கும், ஆட்ட அசைவுகளுக்கு முள்ள இணைவுத் தன்மைகள் எவ்வாறு என ஆய்ந்தறிய முடியும்.

ஆண்களாடும் ஆட்டப்பாடல்கள், பெண்கள் ஆடும் ஆட்டப் பாடல்கள் என்று வகைப்படுத்தி அறியவும் இடமுண்டு. பெண்கள் ஆட்டப்பாடல்களில் எவ்வாறான பிரச்சினைகள் வெளிப்படுகின்றன. அவை எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றன என்றும் இதே பார்வையினை ஆண்கள் ஆட்டப்பாடல்களிலும் செலுத்தி ஆய்ந் தறிய வாய்ப்புண்டு.

தனி நபர் ஆட்டப்பாடல்கள் (காவடி ஆட்டம்) குழுவினர் ஆட்டப்பாடல்கள் (கும்மி, ஒயில் கும்மி) என்றும், ஆணும் பெண்ணும், இணைந்தாடும் ஆட்டப் (குறவன் குறத்தி ஆட்டப் பாடல்கள்) பாடல்கள் என்றும் கூறுபடுத்தி பாடல்களை உளவியல் முறையில் ஆராய்ந்து பார்க்க இடமுண்டு.

ஆட்டப்பாடல்கள் பார்வையாளர்களை உள் வாங்கிய நிலையில் - அந்தந்த வட்டார மக்களது உணர்வுகளை உள் வாங்கிய நிலையில் - அமைவது இயல்பு. சில ஆட்டப்பாடல்கள் பயிற்சி வழி அதாவது அண்ணாவிமார்கள் வழி உருவாக்கப்பட்டு பயிற்று விக்கப்படுகின்றன. சில ஆட்டப்பாடல்கள் செவி வழியே பாரம் பரியமாகக் கேள்வி ஞானத்தின் வழி பாடப்படுகின்றன.

*"முந்தி முந்தி நாயகரே*
*முருக நல்லா சரஸ்வதியே*
*கந்தருக்கு முன் பிறந்த*
*கணபதியே முன்னடவாய்*
*ஊரே நல்லா வணங்கப் போறேன்*
*ஊராரே தஞ்சமின்னேன்*
*குருவ நல்லா வணங்கப் போறேன்*
*குருபாதம் தஞ்சமின்னேன்"*



படிப்பகம்

www.padippakam.com

"செங்கல் அடுக்கி சிறு வீடு கட்டி
சேவிக்கும் பெண்களே
வெத்தலைப் பெட்டிய
எடுத்தாங்க பெண்டுகா
வேணுமிங் கிறவுகளுக்குத்
தானம் பரிமாற
போடுங்க பெண்டுகா
பொன்னாலே திருக்குலவை"

முன்னது அண்ணாவியாரால் (குரு) பயிற்றுவிக்கப்பட்டு (ஏட்டில் எழுதப்பெறாமல்) பாடப்பட்ட ஆட்டப் (ஆடவர்) பாடல் ஆகும். பின்னது கேள்வி ஞானத்தின் வழியே பாடப்படும் பெண்களது கும்மி ஆட்டப்பாடல் ஆகும்.

ஆட்டப்பாடல்களில் சடங்குமுறைக்காக வேண்டி சாமி தளத்தில் அல்லது தொழிற்களங்களில் கூலி ஏதும் வாங்கப் பெறாமல் ஆடிப் பாடப்படும் பாடல்கள் சடங்குமுறைப் பாடல்கள் ஆகும். கூலி பெற வேண்டித் தொழிலாக ஆட்டங்களை ஆடிப்பாடும் பாடல்கள் தொழில்முறைக் கலைஞர்களால் பாடப்பெறுவனவாகும்.*

சடங்குமுறைக் கலைஞர்களின் ஆட்டப் பாடல்களுக்கும் தொழில்முறை ஆட்டக் கலைஞர்களின் பாடல்களுக்குமுள்ள வேறுபாடுகளை, ஒற்றுமைகளை அறிவதன் வழி சடங்குமுறைக் கலைகளிலிருந்து தொழில் முறைக்கலை வளர்ந்துள்ள உண்மையினை ஆய்ந்தறிய இயலும்.

## எழுச்சி மிகு பாடல்கள்

காலங்காலமாக உழைக்கும் கூலி விவசாயத் தொழிலாளிகள் உருவாக்கிய பல்வேறு பாடல்களில் கால வளர்ச்சியின் பயனாய்க் கருத்துள்ள பாடல்கள் பல எழுச்சி மிகு பாடல்களாக வெளிப்படக் காண முடிகிறது.

---

*காண்க : நாட்டுப்புறக் கலைஞர்கள் வாழ்க்கை நிலை எனும் ஆய்வுக் கட்டுரை (கே.ஏ. குணசேகரன்)



படிப்பகம்

www.padippakam.com

*சேலம் சிறைதனிலே எங்களை*
*பூட்டி முதல் போட்டாலும்*
*பூட்டை உடைத்திடுவோம் எங்கள்*
*கொள்கையை விட மாட்டோம்.*
*போலிசு வாசலிலே - எங்களப்*
*பூட்டி முதல் போட்டாலும்*
*பூட்டி தெறித்திடுவோம் - எங்க*
*போட்டிகள விடமாட்டோம்.*

*"மூனு மணிக்குக் கம்மியாக் கூட*
*மோட்டார் ஓட்டத் தண்ணியில்லே - அத*
*மூனா ரெண்டாப் பிரிச்சுப் பாத்தும்*
*முழு நெலத்துக்கும் பாயலே*
*மாட்டுக்குந்தான் ஓழவில்லே*
*மக்களுக்குந்தான் ஓணவில்லே*
*மாடா நாமப் பாடுபட்டும்*
*நம்ம நெலமே விடியலே"*

இவை போன்ற விவசாயப் பிரச்சினைகள், பெண்ணடிமைப் பிரச்சினைகள், "மரபு" என்பதன் பெயரில் நடைபெறும் தேவையற்ற கிராமியச் சடங்கு முறையும் அதன்வழி ஏற்படும். பல்வேறு பிரச்சினைகள் ஆகியவை இம்மக்களின் பல்வேறு வகைப் பாடல்களில் வெளிப்படுகின்றன. காலங்காலமாய்க் கூலி விவசாயிகளாக வாழ்ந்து வரும் மக்களிடையே இன்று விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது என்பதை இந்த எழுச்சி மிகுப் பாடல்கள் கோடிட்டுக் காட்டுகின்றன. நீண்டகாலமாகப் பேசப்படாமல், தீண்டப்படாமல் கிடந்த இம்மக்களின் கலை இலக்கியங்கள் இன்று எல்லாத் தரப்பு மக்களாலும் பேசப்படுகின்றன. வாழ்வியல் பிரச்சினைகளை, சமூகப்பிரச்சினைகளை நடப்பியலோடு சிந்திக்கத் தொடங்கியுள்ள இம்மக்களின் விழிப்புணர்வுகள் அனைவராலும் கவனிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொன்றுக்கும் ஒரு வளர்ச்சி உண்டு. இம்மக்களின் விழிப்புணர்வுகளுக்கும் ஒரு வளர்ச்சியுண்டு.



படிப்பகம்

www.padippakam.com

# நாட்டுப்புறப் பாடல்கள் சேகரிப்பின் தேவை

நவீன மயம் நகரங்களிலிருந்து கிராமங்களுக்கு மின்னல் வேகத்தில் புகுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. டெல்லியில் இந்திராகாந்தி இறந்த செய்தி உடனே இந்தியக் கிராமங்கள் தோறும் எதிரொலித்தது. செய்திகளின் எதிரொலிப்புகள் மக்களின் ஒப்பாரிப் பாடல்களிலும் பிரதிபலித்தன. கிராமியப் பாடல்களிடையே நவீனங்களின் தாக்கம் ஏற்பட்டு இயல்புநிலை குன்றிவிடுகின்றன. அந்தந்தக்கால கட்டத்தின் செய்திகள் அந்தந்தக் கால கட்டக்கலை இலக்கியங்களில் படிவது இயல்பு. இதன் வழியே இக்காலச் செய்திகள் கிராமியக்கலை இலக்கியங்களில் புகுவதோடு அக்காலக் கட்டங்களின் செய்திகள் மறைந்து விடுகின்றன. நாட்டுப்புறப்பாடல் கள் வழியே கால வரலாற்றுச் செய்திகளைப் பதிவு செய்து பரிணாம வளர்ச்சியினைப் பகுத்து ஆராய்ந்து பதிவு செய்து வைப்பது பின்வரும் சமூகத்துக்கு நாம் செய்யும் மகத்தான பணி ஆகும்.

10.2.1984
**உதக மண்டலம்**


படிப்பகம்

www.padippakam.com

1984-ல் முடித்த இந்த நாட்டுப்புறப்பாடல்கள் தொகுப்பினை ஒரு பதிப்பகம் வாங்கி 2 வருடம் வைத்திருந்தது. நூலாக்கம் செய்ய உள்ள தட்டச்சுப்படியினை வாங்கிச் சென்ற நண்பரிடமிருந்து திரும்பிப்பெற போதுமென ஆகிவிட்டது.

சில நூல்கள் உடனடியாக வெளிவரும் முக்கியத்துவத்தைச் சில பதிப்பகத்தால் புரியாமல் போவது வருந்துதற்குரியது ஆகும்.

இந்த இடைப்பட்ட காலத்தில் என்னால் சேகரித்து வைக்கப் பட்டிருந்த பாடல்கள் பல இத்துடன் ஆங்காங்கே இணைக்கப் பட்டுள்ளன.

நாட்டுப்புற ஆய்வறிஞர் நா. வானமாமலை அவர்களது "தமிழர் நாட்டுப் பாடல்கள்" களங்களுக்குச் சென்று நேரடியாகச் சேகரிக்கப் பட்டவையாக இல்லை. அவரே குறிப்பிட்டுள்ளபடி உதவியாளர்கள் வழியே அனுப்பப் பெற்று அவரால் பதிப்பிக்கப்பட்டுள்ளன. எனினும் இத்துறையில் முன்னோடியாக அவரை மதிக்கக் கடன் பட்டுள்ளேன். இங்கு என்னால் தொகுக்கப்பட்டுள்ளவை எனது நேரடிக் களப்பணியில் மக்களிடம் சேகரிக்கப்பட்டவையாகும்.

நண்பர் சு. சண்முகசுந்தரம் பல்வேறு நபர்களது சேகரிப்புப் பாடங்களின் தொகுப்பு நூல்களிலிருந்து பதிப்பிக்கப்பட்டதாக அவரது தமிழக நாட்டுப்புறப் பாடல்கள் நூலினில் கூறுவார். இவர்கள் தவிர ஏனையோருடையவை கள அனுபவ முயற்சிகளிலிருந்து வெளிவந்துள்ள நாட்டுப்புறப்பாடல்கள் தொகுப்பு நூல்கள் ஆகும்.

இங்கு கூறப்பட்டுள்ள பெரும்பாலானவர்களது நூல்களில் காணப்படும் நாட்டுப்புறப் பாடல்களை எனது களப்பணி வழியே சேகரித்துள்ள பாடல்களுடன் தொடர்புபடுத்தி ஆங்காங்கே அடிக்குறிப்பில் குறித்துள்ளேன்.



படிப்பகம்

www.padippakam.com

நான் 1984-ல் எழுதிய முன்னுரையை அப்படியே (முன்பகுதி) இந்நூலுக்கு வைத்துள்ளேன்.

எனது பிஎச்.டி., ஆய்வுக்காகக் களப்பணிகளில் என்னால் சேகரிக்கப்பட்ட பாடல்கள் பலவகைப்பட்டவை. எனது ஆய்வேட்டில் அவற்றுள் ஒருபகுதி இடம் பெற்றுள்ளன. மேடைக் கச்சேரிகளில் எனது கிராமிய இசைக்குழுவான "தன்னானே" குழுவினர் சில வகைப்பாடல்களைப் பாடியுள்ளனர். நானும் பாடியுள்ளேன். வானொலிகளிலும் டெலிவிசன்களிலும் "தன்னானே"* ஒலிப்பதிவு நாடா (கேசட்), "மண்ணின் பாடல்கள்" ஒலிப்பதிவு நாடா* ஆகியவற்றிலும், இடம்பெறாத மீதமுள்ள நாட்டுப் புறப்பாடல்கள் இத்தொகுப்பில் வெளிவருகின்றன.

தொகுக்கப்பட்டுள்ள நமது நாட்டுப்புறப் பாடல்களில் இன்னும் ஆய்வுகள் தொடரப்படாமல் உள்ளன. நம்மையும் நமது மண்ணின் கலை இலக்கியங்களையும் இன்னும் எத்தனை நாட்கள்வரை நாம் கவனிக்காமல் இருக்கலாம்? நம்மவர்களின் கவனப்பார்வை இன்று இத்துறைக்கு உடனடித் தேவையாக உள்ளது.

ஒருபக்கம் இசையையும் மறுபக்கம் பாடலின் உள்ளடக்க அடிகளையும் எப்படிக் களவு செய்து காசு ஆக்கலாம் எனப்பல நவீன வெகுசன ஊடகத்தாரின் பார்வை விழுந்திருக்கும் இன்றைய காலகட்டத்தில் நம்மவர்களின் கவனப்பார்வை அவசியமாயுள்ளது.

தட்டச்சு செய்திடத் துணை நின்ற உதகமண்டலத்தைச் சேர்ந்த தோழர் செல்வநாதன் மற்றும் தோழியர் "அஷ்ரவ்வுன்னிஸா" ஆகியோருக்கும் இந்நேரத்தில் நன்றி கூறக் கடன்பட்டுள்ளேன்.

புதுவைப் பல்கலைக் கழகத்தில் தற்போது சிறப்புநிலைப் பேராசிரியராகப் பணிபுரியும் கரிசல் இலக்கிய மூர்த்தி கி. இராஜநாராயணன் அவர்கள் இந்த நூலுக்கு அணிந்துரை தந்துள்ளார்.

---

* அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் - தமிழ் மாநிலக்குழு. * தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் - வெளியீடு 1988.



படிப்பகம்

www.padippakam.com

அவர்களுக்கும் எனது நன்றி எப்போதும் உண்டு. நண்பர் பேராசிரியர் திரு. நாகலிங்கம் மற்றும் எம்துறை ஆய்வாளர் விஷ்ணு தாசன் ஆகியோர்; ஏனைய நாட்டுப்புறப்பாடல்கள் தொகுப்பு நூல் களோடு ஒப்பிட்டு அடிக்குறிப்பு செய்திட நூல்கள் தந்தும், கையெழுத்துப்படி எடுத்திடவும் உதவியுள்ளனர் அவர்களுக்கும் எனது நன்றி உரித்தானது. பாடல்கள் பாடியும் தகவல்கள் தந்தும் துணை செய்த தமிழக நாட்டுப்புற மக்களுக்கும் மண்ணில் பாடல்களை மக்களிடம் திரும்பக் கொண்டு செல்ல என்னோடு கடந்த பத்து ஆண்டுகளாகத் தமிழகத்தின் பல்வேறு அரங்குகளில் துணைநின்ற எனது மதிப்புக்குரிய மகத்தான நாட்டுப்புறக் கலைஞர்களுக்கும் இந்நூல் காணிக்கை.

நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் நீண்ட காலம் வரை வைத்திருந்தது. நூல் வடிவம் பெற பல நிலைகளில் முயன்று 2000இல் அம்முயற்சி பலித்துள்ளது. ஒரு மாமாங்கம் கடந்துவிட்டபோதிலும் இந்த நாட்டுப்புறப் பாடல் தொகுப்பு இப்போது வெளிவந்துள்ளது குறித்து மகிழ்ச்சி. தகவலாளர் பட்டியல் ஒன்று சாதியப் பின்னணியுடன் தந்திருக்க வேண்டும். தலித்தியப் பார்வையில் இது தேவை. எனினும், தகவலாளர் விபரம் தரப்பட்டுள்ளது. தேவைப்படின் சாதிய விபரம் அறிய வாய்ப்புண்டு. 14 ஆண்டுகளுக்கு முன்பே இந்நூல் வெளிவந்திருக்குமேல் நாட்டுப்புறவியல் துறைக்குக் கூடுதல்துணை செய்திருக்க வாய்ப்பமைந்திருக்கும். என்.சி.பி.எச். நிறுவனத்துக்கும், இரா.அய்யா அவர்களுக்கும் எனது நன்றிகள் என்றுமுண்டு.

**தோழமையுடன்**
**கே. ஏ. குணசேகரன்**
15.1.2000.



படிப்பகம்

www.padippakam.com

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | தாலாட்டுப் பாடல்கள் | 1 |
| 2. | விளையாட்டுப் பாடல்கள் | 18 |
| 3. | தொழிற்களப் பாடல்கள் | 31 |
| 4. | சடங்குமுறைப் பாடல்கள் | 68 |
| | 4.1. கும்மிப் பாடல்கள் | |
| | 4.2. பேயாட்டப் பாடல்கள் | |
| 5. | தொழிற்கலைப் பாடல்கள் | 112 |
| 6. | காதல் பாடல்கள் | 151 |
| 7. | கல்யாண வாழ்த்துப் பாடல்கள் | 164 |
| 8. | வாழ்த்துப் பாடல்கள் | 168 |
| 9. | ஒப்பாரிப் பாடல்கள் | 173 |
| 10. | மாரடிப்பு ஆட்டப் பாடல்கள் (சடங்குமுறை - தொழில்முறை) | 205 |
| 11. | எழுச்சிமிகு பாடல்கள் | 216 |




படிப்பகம்

www.padippakam.com



# தாலாட்டுப் பாடல்கள்

படிப்பகம்

www.padippakam.com



# படுகர்களின் தாலாட்டுப் பாடல்கள்

டாரோ டாரோ டாராரோ

படுக மொழி : ஒறகு ஒறகு நின்ன அவ்வே பந்தியா ஒறுக
தமிழ் மொழி : உறங்கு உறங்கு உன் அம்மா வருவாள் உறங்கு

2. ஆலு தந்தியா ஒறகு
பால் தருவாள் உறங்கு
டூரோ டூரோ டூராரோ

3. நின்ன அப்ப பண்ணன ஒறகு
உன் அப்பா வருவார் உறங்கு

4. மிட்டாய் தண்ணன ஒறகு
மிட்டாய் தருவார் உறங்கு

5. அவ்வ பேடா ஒறகு
அழுக வேண்டாம் உறங்கு

6. ஒறகு என்ன எண்ணே ஒறகு
உறங்கு என்னுடைய பெண்ணே உறங்கு

7. அல்லி நோடு இல்லி நோடு கொல்ல பண்ணா
அங்கே பாரு, இங்கே பாரு விகாரமான ஆள் வாறான்

8. ஒறகு ஒறகு நின்ன அவ்வே பந்தியா ஒறகு
உறங்கு உறங்கு உன் அம்மா வருவாள் உறங்கு

படிப்பகம்

www.padippakam.com


9. அவ்வே செத்தலே பலா அவ்வே பந்தியா
அம்மா இறந்து விட்டால் இரண்டாவது
அம்மா வருவாள்.

10. கஞ்சிக உறுத்து தந்தியா
கஞ்சிக எனும் விதையை வறுத்து வருவாள்

11. கீரை உறுத்து தந்தியா
கீரை விதையை வறுத்து வருவாள்

12. ஒறகு என்ன எண்ணே ஒறகு
உறங்கு என்னுடைய பெண்ணே உறங்கு

13. அடித்தரெ பிச்சமரி, அடித்தரெ கும்மா மரி
கதவைத்திற பூனை வருது, கதவைத் திற
ஆந்தை வருது

தமிழாக்கத் துணை: ஆர். செல்வி,
பழைய அருவங்காடு - நீலகிரி மாவட்டம்

படிப்பகம்

www.padippakam.com



# இருளர்கள் பாடல்

லாலி லாலி லா லா
லாலி லாலி லா லா
மதுரைக் கரை நீரோ
மல்லன் கொழுந்தோ - நீ
நீரை எறச்சி வெளையாடு
மல்லன் கொழுந்தா
சேல மரத்துக்கிட்டே
வெத்தலை தூவி வெளையாடு லாலீ
லல்லி மரத்துக்கிட்டே
வெத்தலை தூவி வெளையாடு லாலீ
லல்லி மரத்துக்கிட்டே
மல்லன் கொழுந்தா
ஊஞ்சலிட்டுத் தூக்கி நீ வெளையாடு லாலி
மல்லன் கொழுந்தா
ஆண்புள்ளே பொறந்தாக்கா
மல்லன் எனப் பேரோ
பொம்புள்ளே பொறந்தாக்கா
குஜ்ஜின்னு பேரோ
எந்த பஸ்ஸில் போனணும்னா
கண்ணாடி பஸ்ஸில் போகணுமே!

"மதுரக் கெரை நீரோ
மல்ல பாவா"
நீரு ரெச்சி வலடுகோ
மல்ல பாவா
சேல மார மிண்டே



படிப்பகம்

www.padippakam.com



*வெத்தல சூரவிட்டு வலடுகோ*
*லல்லி மார மிண்டே*
*மல்ல பாவா*
*மாலு தூங்கி வலடுகோ*
*மல்ல பாவா*
*ஆனு புள்ளே புட்டினாக்கி*
*குஜ்ஜிண்டி எக்கு கோ*
*ஏது பஸ்ஸு ஒரு கொண்ட்றாக்கி*
*கனடி பஸ்ஸு ஒருகோ*

எஸ். மாதவன்; வயது 38, 11-7-86 இருளர் குடியிருப்பு- மசினகுடி.
தமிழாக்கம் கே.ஏ. குணசேகரனின் "நீலகிரி மலையின
மக்கள் ஆட்டங்கள்" தமிழ் பல்கலைக் கழகம்,
தஞ்சை வெளியீடு நூலில் காணலாம்.

---

"மதுரெ கெரெ நீரோ ரங்க பாவா" என்னும் 2 அடிகள் தமிழக நாட்டுப்புறப் பாடல்கள் ப. 328 இருளர் பாடல்கள் என சண்முகசுந்தரம் குறிப்பிடுவார்.

---

"ஜுஜ்ஜிஜி ஜிஜ்ஜி மெத்தே - கண்ணே" என இசுலாமியரது தாலாட்டுப் பாடலில் இடம் பெறுவதுண்டு. தமிழக நாட்டுப்புறப் பாடல்கள் - டாக்டர் சு. சண்முகசுந்தரம் ப.141

படிப்பகம்

www.padippakam.com


# தாலாட்டுப் பாடல்

பச்ச நிறம் வள்ளி - என் கண்ணே
பகல நிறம் செய்வானை
சோதி நிறம் சொக்கராம் என் கண்ணே
சொன்ன வரம் தந்தவராம்

தெக்கே திருப்பதியாம் என் கண்ணே
அதுக்கும் தெக்கே இராமேஸ்வரம்
கிழமேற்குப் பார்வையிலே என் கண்ணே
கிளப்பி வந்த சூரியனாம்

பாக்குப் பதிங்கலமாம் என் கண்ணே
பச்சரிசி முக்கலமாம்
தேங்கா இருநூறாம் என் கண்ணே
இளந் தேங்கா முன்னூறாம்

நடுக் கடலாம் சமுத்திரமாம் என் கண்ணே
நாலாயிரம் தென்ன மரம்
அதுலே அட காக்கும் எண் கண்ணே
அஞ்சுதலை நாகராம்
அஞ்சாமப் பூவெடுக்கும் என் கண்ணே
அருச்சுனராம் உங்களம்மான்

கண்ணக் கரிக்குதுன்னு - என் கண்ணே
காசுக்கு நல்ல எண்ணெய்
தெங்காஞ்சி எண்ணெக்கு என் கண்ணே
சீட்டெழுத்திப் போட்டாக
சீட்டெழுதிப் போட்டாலும் என் கண்ணே
சீக்கரமாச் சேராதுன்னு

படிப்பகம்

www.padippakam.com



வாயாலச் சொல்லியில்லோ என் கண்ணே
வர வழைப்பார் நல்ல எண்ணெய்

தங்கப் புளிய மரம் என் கண்ணே
தனி வயிரம் தாம்பாளம்
தனிச்சுப் பரிமாரும் என் கண்ணே
தருமராம் உங்களம்மான்

"பச்சை நிறம் வள்ளி
பவள நிறம் தெய்வானை
சோதி நிறம் வேலவரு
சொன்ன வரம் தந்தாரே" *

பொன்னுப் புளிய மரம் - என் கண்ணே
புது வயிரம் தாம்பாளம்
புடுச்சுப் பரிமாரும் என் கண்ணே
புண்ணியராம் உங்களம்மான்

மானைக் கண்டேன் கானலிலே என் கண்ணே
மயிலக் கண்டேன் கோயிலிலே
தேனக் கண்டேன் காணலிலே என் கண்ணே
ஒன்னப் போல செலயக் கண்டேன் கோயிலிலே

வள்ளியினா வள்ளியவள் - என் கண்ணே
மான் வயிற்றில் பிறந்த வள்ளி
வள்ளி அழகுக்கும் என் கண்ணே
வலதுபுறம் தேன் மணக்கும்
கொண்டை அழகுக்கும் என் கண்ணே
வேலவர் குற வேசம் கொண்டவராம்

ஓடுனா வள்ளி ஒளிஞ்சாளாம் மலஞ்சருகே
தேடுனார் வேலவரு என் கண்ணே
வள்ளி திருமுகத்தைத் தான் பாக்க

* என தாலாட்டுப் பாடலடிகளாக ப.105இல் தமிழர் நாட்டுப் பாடல்களில் இடம் பெறக் காணலாம்.

படிப்பகம்

www.padippakam.com



பாரைய்யா மலை மேலே - என் கண்ணே
அழுகுதய்யா ஒன் கொழந்தை
சொல்லுமய்யா வயித்தியரே என் கண்ணே
சொப்பமான மருந்துகளை

மருதத் திருவிழாவாம் - என் கண்ணே
மயிலாரே வாகனமாம்
மயிலே வரவழைக்க என் கண்ணே
மஞ்சள் விளையாட

குன்னக்குடி திருவிழாவாம் - என் கண்ணே
குயிலாலே வாகனமாம்
குயில வரவழைக்க என் கண்ணே
குழந்தை மக விளையாட

ஏலக்காக் காகிதமாம் என் கண்ணே - ஒங்க
இளையம் மான் தோட்டத்திலே
ஜாதிக்காய் காய்க்குதம்மா என் கண்ணே - ஒங்க
தாய் மாமன் தோட்டத்திலே*

கண்ணான கண்ணுக்கு என் கண்ணே
கண்ணுறக்கம் இல்லையின்னு
கண்ணனூரு மாரியம்மன் என் கண்ணே
கண்ணுறக்கம் தந்தாக

பொன்னான பொன்னுக்கு - என் கண்ணே
பொய்யுறக்கம் இல்லையின்னு
புதுமையுள்ள மாரியம்மர் என் கண்ணே
பொய்யுறக்கம் தந்தாக

---

* "ஏலரிசியும் கிராம்பும் இளங்கொடிக்கால் வெத்திலையும் சாதிக் களிப்பாக்கும் சங்கு வெள்ளைச் சுண்ணாம்பும் அத்தனையும் கொண்டு உன்னை அறிய வந்தார் அம்மான் மார்" இராமநாதபுரம் வட்டார மென்னந்தி கிராமத் தாலாட்டுப் பாடல் என முகவை இராஜ மாணிக்கம் அவர்களது "காதில் விழுந்த கவிதைகள்" எனும் நூலில் (ப.151) காண இயலும்.

படிப்பகம்

www.padippakam.com



ஆரைய்யா வேலவரே - என் கண்ணே
ஆய குரல் உதறது
மாயமுள்ள சுந்தரியை என் கண்ணே
மாவையிட ஊதறாக

காணிக்கை கொண்டு - என் கண்ணே
கடைத் தெருவே போகயிலே
மாணிக்கப் பிச்சையினு - என் கண்ணே
மடிப்பிச்சை தந்தாக

யாரைய்யா நாரதரே - என் கண்ணே
வந்த சேதி சொல்லுமய்யா
வேலவருக்கு வள்ளி ஒன்னை
விவாகம் பண்ண வந்தேன்
முருகனுக்கு வள்ளி ஒன்னை
முகூர்த்தம் பாக்க வந்தேன்

தவமணி அம்மாள் - 45 வயது, சேத்தூர் மாரந்தை
பசு.மு.மாவட்டம். 14.3.82.

***

என் அண்ணன் மார்கள் ஐவரைய்யா - என் கண்ணே
பொல்லாத கோவக் காரர்
உயிர் தப்ப வேணுமின்னா - என் கண்ணே
ஓடுமய்யா நாரதரே

வேலவர்க்கு வள்ளி ஒன்ன - என் கண்ணே
விவாகம் பண்ணாவிட்டா
வேலும் பிடிப்பதில்லை - என் கண்ணே
விபூதி பூசுவதில்லை
பூணூலைத் தான் பிடித்து - என் கண்ணே
போட்டாராம் பெருஞ்சபதம்

மலடி புலுங்களிலே - என் கண்ணே
ரெண்டு மானு வந்து மேயிதுன்னு

படிப்பகம்

www.padippakam.com



மாதாளம் கொப் பொடிச்சு - என் கண்ணே
மான் வெரட்டப் பிறந்த கண்ணா

இராசிப் புலுங்களிலே - என் கண்ணே
எருது வந்து மேயி துன் னு
எருக்கலங் கொப்பொடிச்சு - என் கண்ணே
எருது வெரட்டப் பிறந்த கண்ணா

பச்சை நிறக் காகிதமாம் - என் கண்ணே
பரம்பக் குடி வாயிதாவாம்
கோட்டைத் திறந்த விட்டு - என் கண்ணே
குருச்சியிலே ஒக்காந்து
சர்ச்சியோடு வாதாடும் - என் கண்ணே
தருமராம் ஒங்களம்மான்

செகப்பு நிறக் காகிதமாம் - என் கண்ணே
சிங்கப்பூர் வாயிதாவாம்
செல்லாத வாயிதாவை - என் கண்ணே
செயிச்சு வரும் உங்களம்மான்

சௌந்தரம் - 25 வயது, கண்ணமங்கலம்,
பசு.மு. மாவட்டம், 19.2.78.

***

வங்காளப் பச்சியெல்லாம் - என் கண்ணே
வயலிறங்கி மேயி துன் து
சிங்கார வில்லெடுத்து என் கண்ணே
தெறிக்கப் பிறந்த கண்ணா

"ராரிக்கு ராரி வந்தாள் என் கண்ணே"
ராமருக்கு சீதை வந்தாள்
ஜோதிக்கு ஜோதி வந்தாள் என் கண்ணே
சொக்கருக்கோ மீனா வந்தாள்

சித்தா று வத்தியில்லோ - என் கண்ணே
சி று கடலும் பாதி வத்தி

படிப்பகம்

www.padippakam.com



*வத்தாத பொய்கையிலே என் கண்ணே*
*வந்த மதி நீயோ*

*வெள்ளி நெல வெரிக்க என் கண்ணே*
*விடிவிளக்கும் நீண்டெரிய*
*சாம வெளக்கெரியும் என் கண்ணே*
*தாய்மாமன் வாசலிலே.*

பாப்பா - 35 வயது, கடம்பாகுடி, இராமநாதபுரம் மாவட்டம், 10.3.73.

***

ஐயங்கார் : *ஆராரோ ஆராரோ ஆராரோ ஆரிரரோ*
*ஆரிரரோ ஆராரோ ஆரிரரோ ஆராரோ*

ஐயர் : *ஆராரோ ஆராரோ ராரிராரி ராராரோ*
*சீராரும் எங்கள்குல சிகாமணியே ராராரோ*
*ஆராரோ ஆராரோ ஆரமுதே ஆராரோ*

பிள்ளை : *ராரிக்கோ ராரி மெத்தை*
*ராமருக்கோ பஞ்சு மெத்தை*

செட்டி : *ராராரோ ராரிரரோ ராராரோ ராரிரரோ*
*ராரிக்கோ ராரிமுத்து*
*ராமருக்கோ பஞ்சுமெத்தை*

நாயுடு : *ஆராரோ ராரிரரோ - என் கண்ணே நீ*
*ஆரிரரோ ஆராரோ*

கள்ளர் : *ராராரோ ராரிரரோ - கண்ணே*
*ராரிரரோ ராராரோ*

அரிசன் : *ராராரோ ராரிரரோ - கண்ணே*
*ராரிரரோ ராராரோ*

வி. சரஸ்வதி வேணுகோபால் "நாட்டுப்புறப் பாடல்கள்" - சமூக ஒப்பாய்வு (இந்நூலின் முன்னுரையோடு தாலாட்டு இசை, பாடல் அடி இவற்றைப் பொருத்தி எண்ணிப் பார்க்க இது இங்கு தரப்பட்டுள்ளது.)

படிப்பகம்

www.padippakam.com



ஆராரோ மகனே ஆரிரரோ
கண்ணே நீ ஆரிரரோ ஆராரோ
மகனே நீ ஆரிரரோ ஆராரோ

சங்கரன் அருளினாலே - வந்துதித்த
பாலா நீயும் - இந்த
ஜக தலம் ஆண்டிட வந்தாயோ கண்ணே
பள்ளிக்கு நீ செல்லும் போது
கண்ணே நீ செல்லும் போது

பாலர்கள் அடித்தாரானால் கண்ணே
பழி போட்டு மகனே வாங்கிடுவேன்
பிள்ளை இல்லாக் குறை தீர்க்க
பெருமையாய் வந்துதித்த கண்ணே
பரம சிவன் அருளினாலே எங்களுக்கு
பகலவனாய் வந்துதித்த பாலா

ஆராரோ... ஆரிரரோ...

பாலாமணி - 32 வயது, திருவில்லிப்புத்தூர்,
காமராசர் மாவட்டம், 2.9.81.

***

வாசலிலே வன்னி மரம் - என் கண்ணே
உங்க வம்சங்க ராஜ குலம்
ராஜ குலம் பெத்தெடுத்த என் கண்ணே
ரெத்தினமே கண்ணுறங்கு

தெருவெல்லாம் தென்ன மரம் - என் கண்ணே
தேசமெல்லாம் ராஜ குலம்
ராஜ குலம் இந்திரருக்கு என் கண்ணே
ஆசை மருமகளாம்

ராராரோ ராரிரரோ - என் கண்ணே ஐயா ராரிரரோ ராராரோ ப.141 தமிழக நாட்டுப்புறப் பாடல்கள் ராரரோ ராராரே - என் ராரி கண்ணே ராராரோ ப.141 தமிழக நாட்டுப்புறப் பாடல்கள்

படிப்பகம்

www.padippakam.com



பட்டெடுத்தா தொட்டி கட்ட - என் கண்ணே
பகலம் எடுத்தா காது குத்த
துயிலெடுத்தா தொட்டி கட்ட - என் கண்ணே
தூது சொல்லி ராராட்ட

பாட்டாலே தொட்டியாம் - என் கண்ணே
பகலக் கொடிக் கயிறாம்
முத்தாலே ஆபரணம் என் கண்ணே
முகம் பாக்க வந்த கண்ணா.

சீராக் குமரருக்கு - என் கண்ணே
சிறு வயிறு நோகுதுனு
வாறா மருத்துவச்சி, என் கண்ணே
மகிழப்பூத் தேரேரி

மானா மதுரையிலே என் கண்ணே
மணிச் சலங்கை விக்கிதுனு
வாங்கித் தரலையின்னு என் கண்ணே
தேங்கி நீ அழுத கண்ணா

"மானா மருதலிங்கம் - என் கண்ணே
மாமரத்துச் சொக்கலிங்கம்
தானாத் தவசுலிங்கம் என் கண்ணே
தனுசுக் கொடிப் பூவுலிங்கம்"

மாமாங்கம் ஆடியில்லோ - என் கண்ணே
மருதக் கடலாடி
சொக்கட்டான் ஆடியில்லோ என் கண்ணே
சூதாட வந்த கண்ணா

மாமாங்கம் ஆடியில்லோ - எங்கண்ணே
மருதக் கடிலாடி

படிப்பகம்

www.padippakam.com



சொக்கட்டான் காயாடி - எங்கண்ணே
சோவி வகுந்தாடி

தவளைக் குலவை பாட - எங்கண்ணே
தாழம்பூ பூ மலர
வண்டாடச் செடி மலர - எங்கண்ணே
வையகத்தார் கொண்டாட

கொல்லங்குடி கருப்பாயி அம்மாள் - 48 வயது, கொல்லங்குடி,
பசு.மு.மாவட்டம், 1.4.74

***

*காக்கா கருதறுக்க
கட்டெறும்பு சூடடிக்க
மாமன் பொலி அளக்க
மச்சினங்க கோட்டை கட்ட

கடலத் திடலாக்கி
கண்ணீர முத்தாக்கி
வேப்பெண்ணெய் நெய்யாக்கி
விக்க வந்த பாலகனோ

---

மானா மதுரைலிங்கம் - நான் பெத்த செல்லம், மாமதுரை சொக்கலிங்கம், தானா வளர்ந்தலிங்கம் - நீ, தனிக்கோடி ராமலிங்கம். "நாட்டுப்புறப் பாடல்கள் - சமூக ஒப்பாய்வு" - வி. சரசுவதி. ப. 20

---

"மலைக்கு மகாலிங்கம், மாமதுரைக்குச் சொக்கலிங்கம், தானா வளர்ந்த லிங்கம், தனிக்கோடி ராமலிங்கம்", என ஏட்டில் எழுதாக் கவிதையில் (ப.36)இல் இடம்பெறும்.

---

* "காக்காய் கதிரறுக்கக், கட்டெறும்பு சூடடிக்க, மாமன் பொலி தூற்ற, மைத்துனமார் கோட்டை கட்ட!" எனும் தாலாட்டுப்பாடல் அடிகள் செ. அன்னகாமுவின் "ஏட்டில் எழுதாக் கவிதைகள்" எனும் நூலில் (ப.79) இயந்துவரக் காண இயலும். (பிள்ள - பிள்ளை)

படிப்பகம்

www.padippakam.com



நடுக் கடலாம் சத்திரமாம்
நாலொரு தென்ன மரம்
அதில அடகாக்கும்
அஞ்சு தலை செந்நாகம்
அஞ்சாமப் பூவெடுக்கும்
அர்ச்சுனரே ஒங்க அம்மான்

தாழை ஒரு மடலாம்
தாழை பூத்தாலும் ஆயிரமாம்
தாழையிலே பூவெடுக்கும்
அர்ச்சுனரும் ஒங்க அப்பா

பின்ன ஒரு மரமாம்
பின்ன பூத்தாலும் ஆயிரமாம்
பின்னயிலே பூவெடுக்கும்
புண்ணியராம் ஒங்களப்பா

......................................

பிள்ள - பிள்ளை

மீனாட்சி - 42 வயது, கீரமங்கலம், புதுக்கோட்டை
மாவட்டம், 3.5.81.

***

ராரா ராரோ ராரிரரோ - என் கண்ணே
ராராரோ ராரிரோ

பேரை உரைத்தாக்கா
பெரு விலங்கு பூட்டிடுவேன்

1. "அத்தை அடித்தாளோ - உன்னை, ஆமணக்குத் தண்டாலே" பாட்டி, மாமி, தமையன், ஆச்சி என உறவுமுறையாளர்களைக் கூறிப்பாடல் அமையும். பக். 82-83 "தாலாட்டு" தமிழண்ணல்

2. "மாமன் அடிச்சாரோ, மல்லிகைப்பூச் செண்டாலே, அத்தை அடிச்சாளோ, அரளிப்பூச் செண்டாலே" எனும் தாலாட்டுப் பாடலடிகள் "ஏட்டில் எழுதாக் கவிதை"களில் இடம்பெறக் (ப.82) காணலாம்.

படிப்பகம்

www.padippakam.com



முத்தை அடித்தாரோ - என் கண்ணே
அமுதூட்டும் கையாலே (ராரா ரி ராரி ராரோ)

மாமன் அடித்தாரோ - என் கண்ணே
மையிடும் கண்ணாலே

சாரதா - 25 வயது வடவள்ளி, கோவை, 4.4.86.

***

ஆரீ ஆரீ ஆரோ ஆரா
ஆரி ராரி ராசி முத்து ராஜாங்க ஆண்ட முத்து
தூரி தூரி தூரி முத்து

எங்கண்ணே நீ துரமார்கள் ஆண்ட முத்தோ
பாண்டி படி முத்தோ
பாட்டனார் ஆண்ட் முத்தோ
முத்தான முத்துவ எங்கண்ணே

நீ முதலாய் விளைந்த முத்தோ
நீ ஆயிரமுத்துல நீ ஆராய்ந்து எடுத்த முத்தோ
தொண்ணூறு முத்துல நீ
துளைந்து எடுத்த ராணி முத்து
நீ முத்து விலை மதிக்க முப்பது பேர்
உன் மாமன்
பாட்டனார் எல்லையிலே கண்ணய்யா
உனக்கு பட்டு வந்து விக்குதுன்னோ

---

3. "அம்மா அடித்தாளோ - கண்ணே, அமுதூட்டும் கையாலே, மாமன் அச்சானோ - கண்ணே, மல்லியப்பூச் செண்டாலே" என நா. வானமாமலையின் பாடல் தொகுப்பு நூலான "தமிழர் நாட்டுப்பாடல்கள்" எனும் நூலில் (ப.132) இடம்பெறும்.

---

4. "மட்டகளப்பு நாட்டார் பாடல்" எனும் ஆய்வு நூலின் பின் இணைப்பில் இளைய தம்பி பாலசுந்தரம் (ப.374)இல் "மாமி அடிச்சாளோ மை தீட்டுங்கையாலே"... என குறித்துள்ளார்.

படிப்பகம்

www.padippakam.com



பட்டு விலைமதிக்க பத்துபேர்
உன் மாமா
மாமன் கொடுத்த ஆட்சி - உனக்கு
மலை தாண்டி மேய்ஞ்சு வரும்
ஓடி முடிக்க வாடா - உனக்கு
ஒருகால் செலம்பு உதிர

கண்ணா சிறு செலம்பு கால் அழுந்தும்னு சொல்லி
வெள்ளி சிறுசெலம்பு - விறல் அழுந்தும்னு சொல்லி
பொன்று சிறு செலம்பு கண்ணா
- உன் பொறுத்திவிட்டார் உன் மாமா

"கண்ணான கண்ணுக்கு கண் திட்டியோ பட்டுத்தின்னு
பட்டால் திரைகட்டி பார்க்க வந்தார் - உன் மாமா"*

வெள்ளை - 19 வயது, திருப்பூர், கோவை மாவட்டம், 4.8.86

***

திண்ணை மொழுகி
திருநெல்வேலிப் பாய்விரிச்சு
இருந்து கணக்கெழுதும்
இந்திரரோ உன் மாமன்!

சவுக்கை மொழுகி
சாதிலிங்கப் பாய் விரிச்சு
சாஞ்சு கணக்கெழுதும்
சந்திரரோ உன் மாமன்!

காக்காய் கதிரறுக்க
கட்டெறும்பு சூடடிக்க
மாமன் பொலிதூற்ற
மைத்துனமார் கோட்டை கட்ட!

*"கண்ணான கண்ணாருக்கு - அழகு கண்டே ஒரு. கண்ணூறும் இல்லாமல்" (ப.90) "தாலாட்டு" தமிழண்ணல்

படிப்பகம்

www.padippakam.com



*உயர்ந்த தலைப்பாகை*
*உல்லாச வல்லவட்டு*
*சபையடக்கிப் பேசிவரும்*
*சமத்தரோ உன் மாமன்!*

*"பாய்ச்சகக் கயிறும்*
*பலநாயும் சங்கிலியும்*
*வேட்டைக்கே போராக*
*வீரப்புலி உன் மாமன்!*

*காட்டைக் கலைச்சு*
*கடிநாயை ஏவலிட்டு*
*வேட்டைக்கே போய் வருவார்*
*வீரப்புலி உன் மாமன்!"**

*பன்றி படுமோ?*
*பதினெட்டு மான் படுமோ?*
*சிங்கம் படுமோ? என் கண்ணே உன்*
*சின்னம்மான் வேட்டையிலே - (ஆராரோ)*

துரைராணி - 28 வயது, கிருஷ்ணராஜபுரம், மானாமதுரை,
பசு.மு. மாவட்டம், 7.3.85

---

"காட்டை கடிச்சு கடிநாயை முன்னேவிட்டு, வேட்டைக்குப் போறாக உன் வீரப்புலிஅம்மான்மார்!, பன்னி படுமாம், பல கலை மான்கள் படுமாம்!, சிங்கம் புலி படுமாம் உன் சின்ன அம்மான் வேட்டையிலே!" காதில் விழுந்த கவிதைகள் (ப.142) நூலில் காண்க.

படிப்பகம்

www.padippakam.com



# விளையாட்டுப் பாடல்கள்

படிப்பகம்

www.padippakam.com



# இருளர் விளையாட்டுப் பாடல்கள்

லாலி லாலி லாலா
லாலி லாலி லாலா

வள்ளி வள்ளி வள்ளி
வனந்தனிலே வள்ளி
கிள்ளி கிள்ளி கிள்ளி
வள்ளிக் கிழங்கெடுப்போம்
காடு வெட்டி வள்ளிக்
கல்லுப் பொறக்கி வள்ளி
மூங்கில் வெட்டி வள்ளி

செயா, குஞ்சப்பனை, கோத்தகிரி, நீலகிரிமாவட்டம்

லாலி லாலி லாலா
லாலா லாலே லாலா

மதுரக் கெர நீரோ
(மதுரைக் கரை நீரோ)
மல்ல பாவா
(மல்லன் மச்சான்)
நீருரெச்சி வலடுகோ
(நீரெரச்சு விளையாடவோ)

குடுமன் - வயது 58, கோளிக்கரை, மாமரம் அஞ்சல்,
கோத்தகிரி வட்டம், நீலகிரி மாவட்டம்
(தமிழில் கே.ஏ. குணசேகரன்,)

---

"மதுரெ கெரெ, நீரோ ரங்க பாவா" எனும் பாடலடிகள் இருளர்கள் பாடுவதாக (காதல் பாடல் ப. 328) சு. சண்முகசுந்தரம் - தமிழக நாட்டுப்புறப் பாடல்களில் குறிப்பிடுவார்.



படிப்பகம்

www.padippakam.com



## இருளர் பாடல்கள்

லலா லாலி லாலி லாலே
லலா லாலி லாலி லாலே

காரமடை போன பாவா
கரும்பு ஜல்லே வங்கி வருகோ பாவா
பண்ண ரேக்கே போற பாவா
பேரு வெத்து வருகோ பாவா
பேருருக்கே போன பாவா
பொரிகைடல சூரே விடுகோ

லலா லாலி லாலி லாலே
லலா லாலி லாலி லாலே

ஏ து தோட்டா சேகுண்டாக்கி
மாமரத் தோட்டா சேகோ பாவா
மாமரத் தோட்டா போனா
அஜ்ஜ நேத்து பாக்கோ பாவா
மாமா வெத்தலே டக்கே
அடிமடிவே வருகுது கொந்தி
மாமா நோட்டுப்பணா
மேல் ஜேப்பில் வருகுது பாவா

மேற்கண்ட பாடலின் தமிழ் மொழிபெயர்ப்பு
**கே.ஏ.குணசேகரன்**

***

லலா லாலி லாலி லாலே
லலா லாலி லாலி லாலே

காரமடை போற பாவா
கரும்புத் தட்டை வாங்கி வா பாவா
பண்ணாரிக்கும்போற பாவா
பெயர் சூட்டி வணங்கி வா பாவா

படிப்பகம்

www.padippakam.com



பேருருக்குப் போற பாவா
பொரி கடலை சூரையிட்டுக் கும்பிடு

லவா லாலி லாலி லாலே
லவா லாலி லாலி லாலே

எந்தத் தோட்டத்தில் வேலை செய்வே
மாமரத் தோட்டத்தில் வேலையா பாவா
காலடி பார்த்துப் போ பாவா
மாமரக் கடை வெத்தலை வாங்கி
அடி மடி வச்சு வாறா கொழுந்தியா
மாமரத் தோட்டத்துப் பணம்
மேல் சட்டைப் பையிலே வச்சு வந்திரு பாவா

வெள்ளை - 55 வயது, கோளிக்கரை, நீலகிரி மாவட்டம்.

படிப்பகம்

www.padippakam.com



முக்காட்டுக் கா்ரி
முளியலங்காரி
ஓம் முக்காட்டை நீக்கி
முகம் பாக்க வேணும்

நா. ராமலிங்கம், 20 வயது, கண்ணமங்கலம்,
பசு.மு.மாவட்டம், 15.3.80.

***

ஆல் மரஞ்சோலை
ஆக்கி உங்கப் போகையிலே
புங்க மரச் சோலை
பொங்கி உண்ணப் போகையிலே
பொழுதொழு நாச்செல்லும்

வராத விருந்தாளி
வந்துட்டாக
வரகாஞ்சோறு
ஆக்கியிருக்கேன்.

ஏசம்மாள் - 40 வயது, புலியடிதம்மன்,
இராமநாதபுரம் மாவட்டம், 10.2.80.

***

அவுகவுக வூட்டுலே
அவரக் காயுஞ் சோறும்
புள்ளப் பெத்த வூட்டிலே
புளியங்காயும் சோறும்

கிரேஸ். - 30 வயது, துகவூர்,
பசு.மு.மாவட்டம், 13.2.86.

***

பச்சை பச்சை முருங்கக்காயாம்
பாடரங்கா முருங்கக் காயாம்
முருங்கக் காயத் தின்னுபுட்டு - இன்னும்
முனுபுருசன் கேக்குறாளே!

கே.ஏ. சத்தியபாலன் - 28 வயது, சேத்தூர் மாரந்தை,
பசு.மு.மாவட்டம். 9.3.87.

படிப்பகம்

www.padippakam.com



# குருவிக்காரன் பாட்டு

டியோ டியோ
டியோ டியோ
டியோ மைனா டியாலோ

காட கவுதாரி மைனா வாங்கலையோ ஆயாலோ
வாங்கிப்பாரு நல்லா ருந்தா சும்மா தாறேன் ஆயாலோ

பால மணி பச்சமணி வாங்கலையோ ஆயாலோ
குருவி மணி கோணி ஊசி வாங்கலையோ ஆயாலோ
வாங்கிப் பாரு நல்லா ருந்தா சும்மா தாறேன் ஆயாலோ

கருப்பையா - 40 வயது, இடைக்காட்டூர்,
பசு.மு.மாவட்டம், 12.2.80.

***

மாரியாத்தா கோயிலிலே
மல்லியப் பூ ரொம்ப
மல்லியப் பூ புடுங்கப் போனா
மாரியாத்தா எங்கே?

நாகநாதர் கோயிலிலே
நாகப்பாம்பு ரொம்ப
நாகப் பூ புடுங்கப் போனா
நாகநாதர் எங்கே

ஏசுநாதர் கோயிலிலே
எள்ளுப்பூவு ரொம்ப
எள்ளுப்பூவு புடுங்கப் போனா
ஏசுநாதர் எங்கே

அன்ன புஸ்பம் - 42 வயது, துகவூர்,
பசு.மு.மாவட்டம். 9.2.78.

படிப்பகம்

www.padippakam.com



மு.பா : ஒரு கல்லெறியவே

பி.பா : ஒரு கல்லு சோரவே

மு.பா : ஒன்று நூறு ஆயிரங்கரி

பி.பா : ஆடவே கிளியாடவே

மு.பா : ஆடவே கிளியாடவே

பி.பா : அம்பலத்திலே ஏறவே

மு.பா : அம்பலத்திலே ஏறும் கிளி

பி.பா : ஆகாசம் பறக்கவே

மு.பா : நாலு காலு எறியவே

பி.பா : நாலுகல்லுஞ் சோரவே

மு.கா : ஆடவே கிளி பாடவே

பி.பா : அம்பலத்திலே ஏறவே

கொழந்தையம்மாள் - 18 வயது, வடக்கு சமுத்திரம்,
பசு.மு. மாவட்டம் 8.7.90.

***

(இவ்வாறு பத்துமுறை பாடுவர்) - மு.பா : முன் பாட்டாளர் - பி.பா : பின் பாட்டாளர்

படிப்பகம்

www.padippakam.com



# நீலகிரி மலையின இருளர் விளையாட்டுப் பாடல்கள்

வட்டத்தின் வெளியில் நிற்பவர்
சங்கிலி முங்கிலி
கதவத் தெற
கை கோத்து நிற்பவர்
நான் மாட்டேன்
வேங்கைப் புலி

| | | |
|---|---|---|
| வ.வெ.நி | : | ஆட்டுக் குட்டியக் கண்டீங்களா? |
| கை.கோ.நி | : | ஆமா |
| வ.வெ.நி | : | எங்கே |
| கை.கோ.நி | : | தோட்டத்திலே |
| வ.வெ.நி | : | வரலாமா வரக் கூடாதா |
| கை.கோ.நி | : | வரலாம் |

## முந்திரிக்காய் விளையாட்டுப் பாடல்

| | | |
|---|---|---|
| வ.வெ.நி. | : | கொளை கொளையா முந்திரிக்காய் |
| வட்டத்தில் அமர்ந்திருப்போர் | : | நெறைய நெறையாக் கொண்டு வா |
| | | கொளை கொளையா முந்திரிக்காய் |
| | | நெறைய நெறையாக் கொண்டுவா |

வ. வெ. நி.: வட்ட வெளி நிற்பவர்; கை.கோ. நி.: கை கோர்த்து நிற்பவர்.

படிப்பகம்

www.padippakam.com



## கண்ணா மூச்சி விளையாட்டுப் பாடல்

முந்திரிப் பழமே
மெல்ல வந்து கிள்ளிப் போ
ஆப்பிள் பழமே
மெல்ல வந்து கிள்ளிப் போ
மல்லிகைப் பூவே
மெல்ல வந்து கிள்ளிப் போ
கொய்யாப் பூவே
மெல்ல வந்து கிள்ளிப் போ

***

## கும்மி விளையாட்டுப் பாடல்

வள்ளி வள்ளி வள்ளி (வள்ளி)
வனந்தனிலே வள்ளி (வன)
கிள்ளி கிள்ளி கிள்ளி (கிள்ளி)

வள்ளிக் கிழங்கெடுப்போம் (வள்)

காடு வெட்டி வள்ளி (காடு)
கல்லுப் பொறுக்கி (கல்)
கல்லுப் பொறுக்கி (கல்)
மூங்கில் வெட்டி வள்ளி (மூங்)
முள்ளுப் பொறுக்கி (முள்)

1. 4. பொம்மி, மாதன் (பள்ளி மாணவி, மாணவர்) 9, 11 வயது, - பொக்காபுரம், நீலகிரி மாவட்டம் 3.3.86.

2.3. சாந்தி, மின்னி - 12,11 வயது, குஞ்சபனை, நீலகிரி மாவட்டம், 3.2.86.

(அடைப்புக் குறிக்குள் தொடங்கும் முழுவரியையும் பின் பாட்டாகப் பிற சிறுமிகள் பாடுவார்கள். முன் பாட்டாளர் தனி ஒரு சிறுமியாக இருப்பாள்).

படிப்பகம்

www.padippakam.com



கருப்புக் கம்பிளி
ஒசரச் செருப்பு
கம்புங் கையோட - இந்த
கருவக் கொம்பை வளைப்பதற்கு
அருவாக் கையோட
போயலச் சருகு
வெத்தலப் பையி
அதுவுங் கையோட
பனை மட்டை பாதச் செருப்பு
அதுவுங் கையோட

இட்டன்னா பெருங்குட்டின்னா
கிடைக்கு ரெண்டு ஆடு கேட்டது
கேடு கெட்ட முட்டாளை
ட்ரிய்யோ ட்ரிய்யோ

சிட்டு - 65 வயது, கண்ணமங்கலம், பசு.மு.மாவட்டம் 3.2.78.

***

நட்டா பட்டியாம் நடுப்பட்டி செம்பட்டி
நாயங்க பேசுற வடபழஞ்சி
முத்தான சொல்லுக்கு மொதச் சொல்லு சொல்லுமாம்
முத்துவர்ணம் பெற்ற வடபழஞ்சி

கக்கனக் கம்மாயாம் கருந்தண்ணி செந்தண்ணி
கருது நிக்குது தண்ணிக்குள்ளே
கருதப் பாத்திட்டுக் கைய நெரிப்பாளாம்
காரியக் காரியாம் செல்லையம்மா

புதுக்கலையம் பொதும்ப வச்சு
பூவாள ரெண்டு மலரும் வச்சு
கொண்டை பெருத்தவ செல்லையம்மனுக்கு
கொண்டு வாங்க கொட மல்லியப்பூ

புத்தடிப் பாம்பு புதுப்பாம்பு செம்பாம்பு
பூலோகத்தில் பிறந்த நல்ல பாம்பு

படிப்பகம்

www.padippakam.com



அருந்தப் பாம்பு கடிச்ச தென்னு
அள்ளித் தெளித்தாளாம் செல்லையம்மா

காரு போறதப் பாருங்கம்மா
காரு மோதிப் போறதப் பாருங்கம்மா
காருக்குள்ளிருக்கிற செல்லியம்மனுக்கு
கடுக்கான் மின்னலைப் பாருங்கம்மா

மோட்டார் போறதைப் பாருங்கம்மா
மோட்டார் மோதிப் போறதப் பாருங்கம்மா
மோட்டாரில் இருக்கின்ற செல்லையம்மனுக்கு
மோதிர மின்னலைப் பாருங்கம்மா

நாகம்மாள் - 21 வயது, வடபழஞ்சி, மதுரை மாவட்டம் 3.2.83.

சைக்கிள், ரயில் என கற்பனை கட்டிப்பாடுவதுண்டு. (கிளித்தட்டு (பெண்கள்) விளையாட்டு)

படிப்பகம்

www.padippakam.com



# தொழிற்களப் பாடல்கள்

படிப்பகம்

www.padippakam.com



காடுவெட்டிக் கல்லுப் பொறக்கணும்
ஏலேலம்படி ஏலம்
கம்புதிணை விதைச்சிரணும்
ஏலேலம்படி ஏலம்

மேடுவெட்டி முள் பொறுக்கி
ஏலேலம்படி ஏலம்
மொந்தைத் திணை விதைச்சிரணும்
ஏலேலம்படி ஏலம்

மலையோரம் மலை நாகன்
ஏலேலம்படி ஏலம்
மகன் கண்டால் சீறிடுமே
ஏலேலம்படி ஏலம்

செடியோரம் செடி நாகம்
ஏலேலம்படி ஏலம்
மகனக் கண்டா சீறிடுமே
ஏலேலம்படி ஏலம்

காடுவெட்டிக் கல்லுப் பொறக்கணும்
ஏலேலம்படி ஏலம்
மூங்கில் வெட்டி முள்ளுப் பொறக்கணும்
ஏலேலம்படி ஏலம்

வள்ளி வள்ளி வனந்தனிலே
ஏலேலம்படி ஏலம்
கிள்ளிக் கிள்ளிக் கெழங்கெடுக்கணும்
ஏலேலம்படி ஏலம்

***

மசனீயம்மா மசனீயம்மா
மங்காத தாயே மசனீயம்மா

லாலா லாலி லாலே லாலே
லாலா லாலி லாலே லாலே

படிப்பகம்

www.padippakam.com



காரமடை போற பாவா
கரும்புத்தட்டை வாங்கி வாவா

பண்ணாரிக்குப் போற பாவா
புள்ளைக்குப் பேரு சூட்டி வாவா

பேருருக்குப் போற பாவா
பொரிகடலை சூரைபோட்டு வாவா(லா)

மாமரத் தோட்டத்திலே வேலை பாவா
காலடி பாத்துப் போயா பாவா

மாமரக் கடை வெத்தலை வாங்கி
அடிமடியில் வச்சு வாயா பாவா

மாமரத் தோட்டத்துக் கூலிப்பணம்
மேல் சட்டைப் பையில வச்சு வாவா

லாலா லாலி லாலே லாலே
லாலா லாலி லாலே லாலே.

மாதன் - இருளர் குடியிருப்பு, மசினகுடி, நீலகிரி மாவட்டம்.
(இருளர் மக்களிடம் சேகரித்தப் பாடல்கள் 1985 - 87
காலங்களில் களப்பணி மேற்கொண்ட போது
தொகுக்கப்பட்டவை)

***

கண்ணாடி வளையலிட்டு
கருதறுக்கப் போற தங்கம்
கண்ணாடி மின்னலிலே
கருதறுப்புப் பிந்துதடி

கருக்கருவா தோளில வச்சு
கருதறுக்கப் போற தங்க
கருக்கருவாக மின்னலிலே
கருதறுப்புப் பிந்துதடி

கருத்தச் சேல கட்டி
கடல கொண்டு போற தங்கம்

படிப்பகம்

www.padippakam.com



கடல வெல சொன்னையின்னா
கடகம் பண்ணிப் போட்டுருவேன்

ஊதாச் சேல கட்டி
உப்பு கொண்டு போற தங்க
உப்பு வெல சொன்னையின்னா
உடுப்பு வாங்கித் தந்திருவேன்

குப்பியம்மாள் எனும் மாரியம்மாள் - கீழ்க்குறுமலை,
கோவை மாவட்டம்.

***

சாய மலை மேலே
சாஞ்சி நிக்கும் திருகுகள்ளி
திருகுக்கள்ளி பூவெடுக்க நான்
திரியிறேனே சில காலம்

கேர்க்கம் பூவு
தன்னி தெளிக்க
தவள முட்டுக்கு
தண்ணி தெளிக்க

குப்பன் - ஈசரத்தட்டு, அமராவதிமலை,
உடுமலை பேட்டை(வழி) கோவை மாவட்டம்.

***

கண்காணி கண் மேலே
கணக்குப் புள்ளே ரோட்டு மேலே
நேரம் பாத்து வேலைகளை
நெனவு கெட்ட கங்கானி

ஆசக்கிளி வளத்து
அக்கறையில் மேயவிட்டு
அந்த மேச்ச பத்தாதுன்னு
ஒண்டுதே சொத்திலே

கூழையன் - 60 வயது, ஆடலூர், பளியர் இனம்

படிப்பகம்

www.padippakam.com



ஓடக் கெடச்சாலும்
தேடக் கெடைக்கலே
தேடக் கெடச்சாலும்
ஓடக் கெடைக்கலே

சீமன் - 45 வயது, காந்திபுரம்,
கொடைக்கானல், அண்ணா மாவட்டம்.

***

பளியர், புலையரை தம்மை விட மதிப்புள்ள இனம் என மதிக்கின்றனர். பளியர், புலையர் ஆகிய இரு இனத்தவரிடமும் இசைக்கருவிகள் ஒருமித்தே காணப்படுகிறது. இரு இனத்தாரும் நல்லுறவு கொண்டுள்ளனர். பெண் எடுத்துக் கொள்வதோ கொடுத்துக் கொள்வதோ இவர்களிடையே இல்லை.


படிப்பகம்

www.padippakam.com



## மண் சுமத்தல் - தொழிற்பாடல்

ஒரு தட்டு ஏலே லோ மண்ணெடுத்து
குழு : ஏலம்மா ஏலோ...
மண்ணெடுத்து
குழு : ஏலம்மா ஏலோ
உருட்டி விட்டேன் ஏலேலோ தங்கரோடு
குழு : ஏலம்மா ஏலோ
தங்கரோடு
காக்காயிக்கு ஏகலோ கண்ணுவலி
குழு : ஏலம்மா ஏலோ...
கண்ணு வலி
குழு : ஏலம்மா ஏலோ
கணவருக்கு ஏலேலோ என்னம்மோ ஏதோ
சம்பா நல்லா ஏலேலோ பயிரப்பாரு
குழு : ஏலம்மா ஏலோ
பயிரப்பாரு
குழு : ஏலம்மா ஏலோ
சமஞ்ச பொன்னு ஏலேலோ ஒடம்மைப்பாரு
மாட்டுக்கு ஏலேலோ மண்டை வலி
குழு : ஏலம்மா ஏலோ
மண்டை வலி

படிப்பகம்

www.padippakam.com



குழு : ஏலம்மா ஏலோ

மனவிக்கு ஏலேலோ என்னம்மோ ஏதோ
மண்ணெடுக்கும் ஏலேலோ நேரத்திலே

குழு : ஏலம்மா ஏலோ

நேரத்திலே

குழு : ஏலம்மா ஏலோ

மாமியார ஏலேலோ கண்டேனடா
மாமி சேதிய ஏலேலோ கேட்டதற்கு

குழு : ஏலம்மா ஏலோ

கேட்டதற்கு

குழு : ஏலம்மா ஏலோ

மச்சியவள் வயசுக்கு வந்துட்டாளாம்

முத்து - 40 வயது, முதுகுளத்தூர்,
இராமநாதபுரம் மாவட்டம், 3.1.80.

படிப்பகம்

www.padippakam.com



# ஏற்றப் பாடல்

(1 பிள்ளையார் - எண்ணி நூறு எண்ணாமல் நூறு 1 பிள்ளையார் 200 மரம். 1 பிள்ளையார் கூலி 4 ரூபாய் 2 பேர் நின்று இறைப்பது மரபு)

ஆண்டவனே காவல்
ஆதரிக்க வேணும் - நீ
ஆதரிச்சையானால்
அஞ்சொடப்பேன் தேங்காய்
முனியய்யா காவல்
முன்னரிக்க வேணும்
முன்னடந்தையானால்
முனொடப்பேன் தேங்காய்
கோனையய்யா காவல்
பன்னிருவா வொன்னு
பன்னிருவா 2, 3, 4, 5, 6, 7
பன்னிருவானெட்டு
பன்னீரும் செம்பும்
தண்ணீரும் தந்தாம்
பதினொன்னும் பாடி
பன்னண்டே போறோம்
பதினாலும் பாடி
பதினஞ்சும்பாடி
பத்தாது மானே
வத்தாது பொய்யை
ஏலமிட்ட தண்ணி
கோலமிட்டுப் பாய
இருபதிகால் ஒன்னு

முனியன் - 45 வயது, தெற்கு மாரந்தை, பசு.மு.மாவட்டம், 18.2.80.

படிப்பகம்

www.padippakam.com



# ஏற்றம் இறைத்தல்

"ஓரான கண்ணே
ஒரு வெள்ளம் வர வேணும்"*
வெளைய வேணும் நாடு
ஓடாத மானே
ஒழிங்சிருப்பான் வேடன்

ஈரான கண்ணே
இருபதிகால் ஒண்ணு
இருந்து குளி பொண்ணு
எல குந்த நேரம்
நா எறைக்கும் தண்ணி
மூணுங்கரை சேர

முப்பதிகால் ஒன்னு
முந்தின குருதை
சென்றது மருதை
முக்காட்டுக் காரி
முக்குத்தியத் தாடி

நாலிலே பதிவு
நாப்பதிகால் ஒன்னு
நாட்டிலே ஒருத்தி
தேட்டிலே சமத்தி
நாலுங்கரை சேர
நாட்டரசன் கோட்டை
நல்லராசன் காவல்

* "வெள்ளைப் பிள்ளையாரே! வெள்ளம் வரவேணும் - நாளை வெள்ளம் வந்தா நானுடைப்பேன் தேங்கா!" (ப.103) - ஏட்டில் எழுதா கவிதைகள் - அன்னகாமு.

படிப்பகம்

www.padippakam.com



அஞ்சிலே பதிவு
அம்பதிகால் ஒன்னு
அம்பெடுத்தா பொண்ணே
ஆளடந்து வாறான்
அம்பு தச்ச புண்ணு
ஆறலையே இன்னும்

ஆளுங்கரை சேர
அறுபதிகால் ஒன்னு
ஆறுக்கடி சோறு
கொண்டு வந்து பாரு
திண்டு பாப்போம் கண்ணே
எம்புட்டுத் தொலைவு

ஏழிலே பதிவு
எழுத்தாணிக் கள்ளன்
எடுத்தாண்டி நாட்டை

எட்டுங்கரை சேர
எம்பதிகால் ஒன்னு
எண்ணளவில் வேணும்

தொன்னூற்று கால் ஒன்னு
தோளி மமல ராசன்
தோனை யினஞ்சேவல்
தோப்புக் குள்ளேவாடி
கொப்பொடிஞ்ச மாங்காய்

காப்பணமாம் நூறு
சேந்திருச்சு பாரு
சேந்த ரெண்டு பேர்க்கும்
முடிஞ்சிருச்சு நூறு

சின்னாண்டி - 40 வயது, குமாரவேலூர்,
இராமநாதபுரம் மாவட்டம், 10.9.80.

படிப்பகம்

www.padippakam.com



# தொகையறா

முன்னம் பிள்ளையவர்
முத்து முனியப்பா
முப்பூசை வாங்கும் இருளாயி
தன்னோடும் பிள்ளையவர்
சந்திர வீரைய்யாவே
தளைக்கவே கும்மிப் பாட்டுரைக்க

அன்னரத்னம்பிள்ளை
சொல்லுரத்னம் கூட
ஆதிரத்னம் பிள்ளை
சோதிரத்னம்
இத்தனை பெண்களும் கூடிக்கிட்டு
முப்பூசைக்கும்மியும் பாட்டுரைக்க

அஞ்சு கோடி மரம்
தங்க விலாசங்க
அந்தாத் தெரியுது நாகூரு
நாகூர் மீரா ஆண்டவன் துணை
நாடியத் தொட்டு சலாம் வாங்க
நாகநாதர் கோயிலு
மேல்புறம் கீழ்புறம்

நானாங்கு பக்கமும் ஊருணியும்
கீழ்புறமும் ஊருணியும் - நல்ல
கிருபையுள்ள நைனாரும்
அவிச்ச நெல்லு
மொளப் பரப்பி

ஆக்குன சோறும் நஞ்சாகிக்
கண்ணாத் தாபோலத் தெய்வமுண்டு
காரணம் காட்சிகள் தப்பாமே
தோரணம் கிடக்குது வாசலிலே

சந்திவீரக் கோனார் - 60 வயது, முத்துப்பட்டி, பசு.மு.மாவட்டம், 19.2.82.

படிப்பகம்

www.padippakam.com



# மாடு மேய்த்தல்

ஒத்தக் கொம்பு மூளி எருமெ
ஓரத்திலே ஒதுங்குது
கல்லக் கொண்டு எரிஞ்ச பத்துனா
காத வழி ஓடுது

மாடுமே போனாலென்ன
மறுமலையும் பாஞ்சாலென்ன
நீ குளிக்கும் பொய்கையிலே
நீராட்டிப் போவேனம்மா

மாடு மேய்க்கும் பையனென்று
மனசிலேயும் எண்ணாதே - ஒன்ன
வச்சு வாழ மாட்டமானின்னு
வருத்தப்பட்டு நில்லாதே

மானத்தை வில்லா
வளைப்பவன் தாண்டி
மதுர வையக்கரத் தண்ணியெல்லாம்
கண்டவன் தாண்டி.

உதவி: தங்கைய்யா - 32 வயது, மேல உரப்பனூர்,
மதுரை மாவட்டம், 10.3.79.

படிப்பகம்

www.padippakam.com



# ஆடு மேய்த்தல் - பாடல்

ஆடு அஞ்சாறு மேக்கிற
கஞ்சப்பக் கோனாரே
கருத்தக் கோனாரே
அடி அதிலேயும் ரெண்டாடு
ராத்திரிப் போயிருச்சு ட்ரிய்யோ, ட்ரிய்யோ

எட்டாடு மந்தையடா கோயிந்தா - ஒரு
பொட்டையாட்டக் காணாமடா கோயிந்தா - என்
பொண்டாட்டி கண்டாள்னாக் கோயிந்தா
திண்டாட்டுப் படுவேண்டா - கோயிந்தா

முருகன் - 32 வயது, பாலமேடு, மதுரை, 3.7.83

# உழவுப் பாடல்

(முன்) மின்னத்தி எருக்காரா
மொதலாளி பண்ணக்காரா
மாட்டை வெரட்டாதடா - எம்
மயிலு வந்து சேரட்டுமே

நடக்காத மாட்டோட
நாம் படும் பாட்டோட
ஈரப்புளுங்கலை வச்சுக்கிட்டு - எம்
பொண்டாட்டி என்ன பாடுபடுறாளோ

ஒத்தா பனையோரம்
உழுகிற மச்சானே
சோறுதிங்க நீங்க வாங்க
சொளகுப் பூ நாந்தாறேன்

படிப்பகம்

www.padippakam.com



அஞ்சு கலப்பை கட்டி
ஆவரம்பூ மேக்க கட்டி
பத்து மயிலக் காள - அய்யா
பறக்குதிப்போ நஞ்சையிலே

முன்னேரு முன்னேரு
மூணாம் தனதேரு
காட்டியே உழுகிறவரு
கருத்த தொரை நல்லாளு.

தங்கராசு - 37 வயது, சின்னத்துகவூர்,
பசு.மு. மாவட்டம் 8.7.80.

# வண்ணான் தொழிற்களப் பாடல்

கஞ்சி ஊத்துங்க ஆத்தாமாரே
கழுத பத்த நேரமாச்சு

சோறு போடுங்க ஆத்தாமாரே
தொறைக்குப் போக நேரமாச்சு
சமுக்காளம் போடுங்க சாமி

குமுக்கா வெளுத்து வாறேன்
வண்ணானும் வண்ணாத்தியும்
பேசிக் கண் சிமிட்டிக்

கண்டு மிகுந்து வண்ணாத்தி வந்தாளே
வண்ணாத்தி கண்ணாத்தா வந்தாளே

வண்ணானும் வந்தானே
வண்ணான் மகன் சின்னானும் வந்தானே

வேலி வெறகெடுத்து வெள்ளாவித் தீ மூட்டி
அனலு அடிக்குதுன்னு
அழுகுறாளே அருங்குயிலா

ராக்கப்பன் - 35 வயது, கலங்காதான் கோட்டை,
பசு.மு. மாவட்டம் 4.4.82.

படிப்பகம்

www.padippakam.com



# மலை உடைப்பு பாடல்

சிங்கப்பூரு பட்டுடுத்திச்
சேந்த நகை மூணும் போட்டு

சுத்தியலக் கையிலெடுத்துச்
சீமான முன்னவிட்டுக்

கஞ்சிக் கலையம் கொண்டு
கல்லொடைக்க வாறதெப்போ

உச்சி மலையிலே
உளி அடிக்கும் ஆசாரி

சத்தம் போட்டு நீங்க அடிக்க சாதம் கொண்டு
நான் வாறேன்

கல்லை வகுந்து கரு மலைக்கு நூல் போட
கல்லும் செலையாகும் கருமலையும் நேராகும்

ஆல மரத்தோரம் அம்மி கொத்தும் ஆசாரி
அறிவோட கொத்துங்க அன்புள்ள ஆசாரி

சந்திரன் - 32 வயது, நாராயணத் தேவன் பட்டி,
கம்பம், மதுரை மாவட்டம், 3.2.80.

படிப்பகம்

www.padippakam.com



# வண்டிக்காரன் பாடல்

ஓ ஓ ஓ ஓ...

பச்ச பச்ச கிளியப் போல
பருவமுள்ள வெள்ளையம்மா
கேப்பாரு பேச்சக் கேட்டு டக்கு முக்கு டிக்குத் தாளம் - இந்த
கிளிய மறந்துட்டியே எண்கடேக்கு டிக்குத் தாளம்

"மாடு ரெண்டும் மயில வெள்ளை
மணிக ரெண்டும் தஞ்சா வூரு
குப்பி ரெண்டும் கும்பகோணம் எண்டக்கு முக்கு டிக்குத்தாளம்
- இப்பக்
குலுங்குதடி சாலப் பாதை ஏங்கடேக்கு டிக்குத்தாளம்"*

"சந்தனக் கும்பாவிலே
சாதம் போட்டு உன்கையிலே
ஒன்னே நெனக்கையிலே எண்டக்கு முக்கு டிக்குத்தாளம்
- இப்ப
உண்கிறது சாதமில்லே ஏங்கடேக்கு டிக்குத்தாளம்"**

பள்ளம் மேடு நெறஞ்சிருக்கு
பாரம் ரொம்பக் குவிஞ்சிருக்கு
பாவச் செடித் தூருக்குள்ளே எண்டக்கு முக்கு டிக்குத் தாளம்
- இப்ப
பாதை தெரியலேடி ஏங்கடேக்கு டிக்குத்தாளம்.

வேலுக் கோனார் - 48 வயது, சங்கரன் கோவில்,
திருநெல்வேலி, 3.2.82.

*"மாடு ரெண்டும் மதுரை வெள்ளை, மணிகள் ரெண்டும் திருநெல்வேலி, குப்பிரெண்டும் கும்பகோணம், குலுங்குதேடி ரோட்டுவழி" (ப.141) "ஏட்டில் எழுதாக் கவிதைகள்" செ. அன்னாகமு

**"சந்தனக் கும்பாவிலே, சாதம் போட்டு உண்கையிலே, உங்களை நினைக்கையிலே, உண்ணுறது சாதமில்லே" (ப.245) நா.வா.தொகுத்த - தமிழர் நாட்டுப் பாடல்களில்.

படிப்பகம்

www.padippakam.com



# நாற்று நடுகை

ஊருக்குப் போவாக...
கட்டுப் பூ வாங்கவாக
உள் நாட்டுக் கூத்திக்கு உடுத்தி மண மிட்டு
அசலூரு கூத்திக்கு அள்ளி மணமிட்டு
பக்கத்துக் கூத்திற்கு பகிர்ந்து மணமிட்டு
மிச்சப் பூவை கட்டிச் சுருட்டி

கொண்டை உண்டாக்கி
நண்டு பட்டுக் கிட்டு
கருவாடு சுடுமின்னே
புள்ளியப் புடிமின்னா
முன்னே நடவுன்னா
பூக்குடுத்தாகியெல்லாம்
முதலுக்கே வேணுமின்னா

திருச்சி மிதியடியாம் - அவருக்கு
கீபெல்லாம் பார்வையாம்
தாங்கி நடப்பாகளாம்
தாசித் தெருக்களிலே

குத்தி குத்தி மகனா
குடிப் பொண்டாட்டி ரெண்டும் போக
அவரும் கூத்திக்கு தோடு கொடுப்பாரு
அம்பலக் கூத்திக்கு சம்பளம் கொடுப்பாரு
அவரு தொடையிலே உருளும்
மாவாளக் கூத்திக்கு
தொடையிலே செந்நெல்
வெளஞ்சு அறுக்கிறேன் பாரு (ஓ.....)

படிப்பகம்

www.padippakam.com



ஒத்தருக்கு ஒரு மகனாம்
உருண்ட முளியாம், தெரண்ட செவப்பாம்
ராஜ குலமாம்
தெய்வப் பொறப்பாம்
வெத்தலையப் போட்டுட்டா
கழிச்சிப்ப கூத்திக
கையேந்தி நிப்பாக (ஓ....)

சின்னப்பொன்னு - 30 வயது, உறுதிக்கோட்டை,
இராமநாதபுரம் மாவட்டம். 4.3.82.

# நடவு பாட்டு

மானத்து மீன வாவென்று உழைச்சு
மயிலோடு கெண்டைய சிலாவங்கு செய்து
கோலாக் கெண்டை கடுங்கெண்டை செங்கெண்டை
கூறி வந்து விக்க வந்த தேசத்துப் பெண்டுகளா
போடுங்கடி பெண்டுகளா
பொண்ணா திருக்குலவை

மருதைக்குப் போவாக
மான் வேட்டையாடுவாக
தானும் கொலஞ்சு
சதுரமும் அடி
மண்ணும் மரமும்
மயிர்க் கூந்தலாடி
குத்தித் தோண்டுமாம் கண்ணப் பறிக்குமாம்
குத்தாமத் தோண்டுமாம் கல்லங்கைய நீட்டி
கல குத்தப் போனவுக பிலி குத்தி வருவாக
குத்து வெளக் கேத்திக்
கிலுங்காமச் சோறிடுங்க (......)

தான்கு மரக் கலமாம்
தலை தெரியாத் தானியமாம்

படிப்பகம்

www.padippakam.com



தாங்கி அளப்பாக
தருமரோட பண்ணையிலே (......)

"வெள்ளி மரக்காலவாம்
வெளை மதியாத் தானியமாம்
வீசியளப்பாக
வீமரோட பண்ணையிலே"

தெருக் கூட்டி மணப் பரப்பி
தென்னப் பாய் விரிச் சொனத்தி
வாருக வாருக கட்டுக் கெழத்தி
வின்னத்தா வாருக பொண்ணுத் தவிடு
பெத்த ஆத்தா வாறாக அழகாப் பரிசல் கொண்டு
அம்மாங்க வாறாக மரக்காப்பரிசம் கொண்டு
சிறுசோடு சிறுசாப் பொறந்த
பெண்ணுதங் கையும் வாறாக (......)

***

ஆலஞ்சரு கரிச்சு......
அருகருகா பொங்கலிட்டு
பூரித்து எழுவாக எங்க கெணத்தடியான்
முனியப்பா பூமி கிடு கிடுங்க
போடுங்கடி பெண்டுகளா
பொண்ணு திருகொலவை

வீச்சக் கயறுகளாம்
வெளி நாயும் சங்கிலியும்
வீச்சலருகி விட்டா
வெள்ளி மலைப் போய்ச் சேரும் (ஓ பூகுலு)

"கதிர் எடுத்து அடிக்கையிலே, கை வளையல் கலகலங்க, மரக்கா எடுக்கையிலே, மன்னர் மலைச்சிட்டாராம்" (ப.135) ஏ.எ. கவிதைகள் - அன்னகாமு

படிப்பகம்

www.padippakam.com



பாச்சக் கயறுகளாம்
பல நாயும் சங்கிலியும்
பாச்சல் அருகி விட்டா
பழனிமலை போய்ச் சேரும் (ஓ பூகுலு)

அண்டா வெளக்கி ஆயிர மீன் காலா தூக்கி
விழுந்தாரை வெட்டுனா
வீரம் எங்கே போகுமின்னு (......)

நடந்தாரை வெட்டி
நாலுகோட்டை நாட்டை தொடுவாக (......)

சின்னப்பொன்னு - உறுதிக்கோட்டை,
தேவக்கோட்டை - 21.2.80.

***

1. ஏலோ ஏலோ ஏலேலோ அடி ஏலோ ஏலோ
பின்பாட்டு: சபாஸ்
அடி ஏல ஏலோ
பின்பாட்டு: சபாஸ்
ஏலோ ஏலோ ஏலேலோ அடி ஏலோ ஏலோ
பின்பாட்டு: சபாஸ்

2. வண்டியிலே ஏலேலோ அடி தங்கக் கதிர்
பின்பாட்டு: அமாமா
பின்பாட்டு: தங்கக் கதிர்
பின்பாட்டு: ஆமாமா
வலது பக்கம் ஏலேலோ அடி சாட்டக் கம்பு
பின்பாட்டு: ஆமாமா

3. எந்நியாரம் ஏலேலோ அடி போகும் வண்டி
பின்பாட்டு: ஆமாமா
பின்பாட்டு: போகும் வண்டி
பின்பாட்டு: ஆமாமா
எங்கே போய் ஏலேலோ அடி இறக்கும் வண்டி
பின்பாட்டு: ஆமாமா

படிப்பகம்

www.padippakam.com



4. தங்குறது ஏலேலோ விலதல்லா குளம்
பின்பாட்டு: சபாஸ்
பின்பாட்டு: தல்லா குளம்
பின்பாட்டு: சபாஸ்
தூங்குறது ஏலேலோவில் திருப்பத்தூரு

5. காலையிலே ஏலேலோ வில குடிச்ச கஞ்சி
பின்பாட்டு: ஆமாமா
பின்பாட்டு: குடிச்ச கஞ்சி
பின்பாட்டு: ஆமாமா
காண்குறது ஏலேலோ எந்த நேரம்
பின்பாட்டு: ஆமாமா

6. மாலையிலே ஏலேலோ வில மரிக் கொழுந்து
பின்பாட்டு: சபாஸ்
பின்பாட்டு: மரிக்கொழுந்து
பின்பாட்டு: சபாஸ்
மணந்திருமா ஏலேலோ வில மனசுக்குள்ளே
பின்பாட்டு: சபாஸ்

மாரி - 47 வயது, மாவிலங்கை, பசு.மு.மாவட்டம். 4.3.79.



படிப்பகம்

www.padippakam.com



# கதிர் அறுவடைப் பாடல்

"சொல்லி நல்ல னானனே
அடிச்சருவா னானனே
சுலட்டுதம்மா நெல்கதிரை தன்னே னானே னானே
அறந்தாங்கியாம் னானனே"*
பட்டணமாம் னானனே
அதுக்குத் தெக்கே வைரிவயல் தன்னே னானே னானே
வைர வயல் னானனே
ரோட்டுல தான் னானனே
வச்சிடுங்க பந்தயங்க னானனே
நகர நல்ல னானனே
திருவிழாவாம் னானனே
நாதசொரம் வேடிக்கையாம் தன்னே னானனே னானே
நாதசொரம் னானைனே
பாக்கப் போனா னானனே
கிணறு வெட்டி னானனே
சாஞ்ச மரம் ஏத்துப் போட்டு னானனே
ஏத்தெரைக்கும் னானனே
கருத்தப்பய னானனே
கருத்தப்பய னானனே
எந்தப் பொண்ணு தேவை ஒனக்கு சாலையிலே னானனே

"வெள்ளிப் பிடியருவா, விடலைப் புள்ளை கையருவா, சொல்லி அடிச்சருவா, சுழற்றுதடி நெற்கதிரை" - (ப.134 ஏ.எ. கவிதைகள் - அன்னகாமு)

படிப்பகம்

www.padippakam.com



போற பொண்ணு னானனே
சாயச் சேலைக்காரி வேணும் னானனே
வீதியிலே னானனே
கிணறு வெட்டி னானனே
வெள்ள மரம் ஏத்துப் போட்டு தானனே னானே னானே
ஏத்தெரைக்கும் னானே னானே
செவத்தப் பய னானே னானே
எந்தப் பய தேவை ஒனக்கு தானனே னானே னானே
வெள்ளச் சீல னானனே
பொண்ணு வேணும் னானனே
பொன்தாலி கட்டவேணும் தன்னே னானே னானே
கடலக் கொல்ல னானனே
ஓரத்துல னானனே
காடப் புறா ரெண்டு நிக்கு தன்னே னானே னானே
காடப் புறா னானனே
கலஞ்சொடனே னானனே
கலங்குதம்மா எம்மனசு தானனே னான னானே
சோளக் கொல்ல னானனே
ஓரத்திலே னானனே
சோடிப் புறா ரெண்டு நிக்கு தன்னே னானே னானே
சோடிப் புறா னானனே
கலஞ்சொடனே னானனே
சோருதம்மா எம்மனசு தன்னே னானே னானே
அருகருகா னானனே
கடுக்கானிட்டு னானனே
ஆன மேலே போற பையா தானனே னானே னானே
அண்ணாந்து தான் னான னானே
பாக்காதைய்யா னானனே

படிப்பகம்

www.padippakam.com



அறஞ்சுடுவேன் கன்னத்திலே தானனே னானனே னானே
கொத்துக் கொத்தா னானனே
கடுக்கானிட்டு னானனே
குதிரை மேலே போற பையா தானனே னானே னானே
குறுகுறுன்னு னானனே
பாக்காதைய்யா னானனே
குடுத்துடுவேன் கன்னத்திலே தன்னே னானேனானே
மல்லியதான் னானனே
முல்லரும்பாம் னானனே
மலராத காயரும்பாம் தன்னே னானே னானே
மலந்து நல்ல னானனே
மணக்குதம்மா னானனே
மகாநாட்டுக் கூட்டத்திலே தன்னே னானே னானே
செம்புகதான் னானனே
முல்லரும்பாம் னானனே
மலராத காயரும்பாம் தானனே னானே னானே
பக்கத்திலே னானனே
படரும் மல்லி னானனே
பண்பான் புதுக்கோட்டை தானனே னானே னானே
மஞ்ச நல்ல னானனே
குதிரை கட்டி னானனே
மக்களோட பறக்குமாம் தானனே னானே னானே
சின்னச் சின்ன னானனே
சீசாவிலே னானனே
சேத்துவச்சேன் சினிமாப்பொட்டு தானனே னானே
னானே
சேந்துச்சோ னானனே
சேரலையோ னானனே

படிப்பகம்

www.padippakam.com



சின்னப் பூவாம் நெத்தியிலே தானனே னானனே
னானே

வண்ண வண்ண னானனே
சீசாவிலே னானனே
வாங்கி வச்சேன் சினிமாப் பொட்டு தானனே னானே
னானே

வச்சேனோ னானனே
வக்கலையோ னானனே
வண்ணமுக நெத்தியிலே தானனே னானே னானே
பொன்னருவா னானனே
என்னருவாள் னானனே
குருக்கு மணிக் கருக் கருவா தானனே னானே னானே

ராமன் - 38 வயது, விராலிமலை, புதுக்கோட்டை, 17.11.83.

படிப்பகம்

www.padippakam.com



# வண்டி ஓட்டிப் பாடல்

எஞ்சினு வண்டிகளாம்
இருபுறமும் சூட்சியமாம்
மாடில்லாம போகுதடி
மாய வெள்ளக்காரன் வண்டி!

தன்னாலே போகுதில்லே,
சாதி வெள்ளக்காரன் வண்டி

"வண்டி வருகுதடி
வாடிப்பட்டி மந்தையிலே
தந்தி வந்து பேசுதடி
சமய நல்லூர் டேசனிலே!"

இந்த இருட்டுக்குள்ளே
எளந்த முள்ளுக் காட்டுக்குள்ளே
சண்டாள ரயிலு வண்டி
சத்தம் போட்டு போகுதில்லே!

கருப்பாயி - 50 வயது, மேலக்குடியிருப்பு, கொல்லங்குடி,
பசு.மு.மாவட்டம். 4.4.82.

***

வய்க்கப் படப்புப் போல
வருகுதடி ஏரப்பிளான்
பறக்குஞ் சத்தம் கேட்டவுடன்
பதறுதடி எம் மனசு!

"வண்டி வருகுதடி" எனும் 4 அடிகள் அவ்வாறே இடம்பெற்றுள்ளன. (ப.163 ஏ.எ. கவிதைகள் - அன்னகாமு.

படிப்பகம்

www.padippakam.com



பத்து மயில் தூரத்திலே
பறக்குதடி ஏரப்பிளான்!
செத்தாப் பிழைப்பானோ - இந்தச்
சீமை வெள்ளக்காரன் மகள்!

காளி - 48 வயது, நாட்டரசன் கோட்டை, பசு.மு.மாவட்டம். 4.4.82.

***

மானங் கிடு கிடுக்க
மத்தளங்களோசை யிட
பூமி கிடு கிடுங்க
போகுதடி மோட்டார் வண்டி!

மோட்டர் வண்டி களாம்
முன்னெயொரு சூட்சிய மாம்
சூட்சியத்து மேலிருந்து
சுத்துரானாம் தொரை மகனும்!

"கடலூரு முலையிலே
கூலிக்கேரு முகையிலே
படைச்ச கடவுள்போல
பறக்குதடி மோட்டார் வண்டி!"

முந்தியொரு காலத்திலே
மோட்டாரைக் கண்டதில்லே
கலியுக நாளையிலே
கண்ட தெல்லாம் காருதானே!

காளி - நாட்டரசன் கோட்டை, பசு.மு.மாவட்டம், 13.1.81.

---

"கூட்டலூரு சாலையிலே" எனும் 4 அடிகளும் (ப.163) ஏ.எ. கவிதைகளில் இடம் பெற்றுள்ளன.

படிப்பகம்

www.padippakam.com



# படகோட்டிப் பாடல்

மருந்தும் மயக்கமடி
மையிடுவார் மாப்பிள்ளைக்கு
மாப்பிள்ளைக்கு வாச்சவள்
பொண்டாட்டி தீந்த கள்ளி
கல்லால செஞ்சதுவும்
எள்ளாரம் கரையலையே
காட்டுவா சாகுலையே
காரணத்தைச் சொல்லுங்களேன்
சொல்லப் பொறுக்குதில்லே
சோம குல சோமவள்ளி
வள்ளி என்ற பெண் பிள்ளைக்கு
வலது புறம் இடது தேமல்
தேமல் அழகியாளே
தென் கூந்தல் பாண்டியரே
ஈமானோ சீமானோ
தீவிலுள்ள சுல்த்தானோ
சுல்த்தான் படை வருது
சுத்தி நில்லு காவலரே
கார் களை வென்ற சிங்கம்
கலிமா பகர்ந்த நபி
விரிவுடையோன் ஆள நபி
அவர் கலிமா தேமதுரம்

படிப்பகம்

www.padippakam.com



தேனே கலயத்திலே
தினை மாவும் பொட்டியிலே
பெட்டி விலை சொன்னையானால்
சொன்ன வெலை நான் தருவேன்.
நான் வருவேன் சாமத்திலே
நாய் கொலையாமே
வெத்தலைக்குச் சண்டை வந்து
விட்டெறிந்தார் வட்டு வத்தை (சுருக்குப்பை)
சண்டை வரப் போவுதைய்யா
சண்டாளா கைய விடு
கைய விடு என்ன நேசம்
கணவன் கண்டா வெகு மோசம்
மோச மிது மோசம்
மொய் குழலே மோசம்.

முத்து - 40 வயது, கன்னிராஜபுரம்,
இராமநாதபுரம் மாவட்டம், 4.2.78.

***

நல்லெண்ணெய் மோர் தயிரு
நாலு புட்டிச் சாராயம்
சரக் கேத்தி வரும் கப்பல்
கப்பலிலே ஒப்ப முண்டு
கடுதாசிப் சிப்பமுண்டு
சின்னப் பொண்ணே என்ன வேணும்
சேல வேணும் முடிக் கொள்ள
முடிக்கடி மாணிக்கத்தை
முத்த செட்டி காணப் போறான்
காசி பெரிய தலம்
காண வந்த ராமேஸ்வரம்

படிப்பகம்

www.padippakam.com



ராமேஸ்வரமும் கண்டேன்
ராமரோட பாதம் கண்டேன்
பாத்துட்டுப் போறியலே
பாவ மங்கே தீத்திராதோ
தீத்தக் கரைய வச்சான்
திரு நாள முன்ன வச்சான்
முன்னே ஒரு பஞ்சம் வந்து
மோசம் வந்து நேந்ததைய்யா
நேத்திக் கடன்கள் உண்டு
கொஞ்சமா போகாதடி
கொடுத்தாக் கொறையாதடி
வள்ளி மேலக் குத்தமில்லே
மயில விடு தெய்வானே
தேவானே தேவியரே
தேவன் பொண்டாட்டியரே
பாம்பன் ரயில் ரோடாம்
பழைய குப்பை மேடாம்
படிச்சுத் தந்த வாத்தியார்க்கு
பக்கத்திலே வீடாம்
கொடுத்தாக் கொறைவதில்லே
கொஞ்சமாப் போவதில்லே
இருக்கட்டும் பருக்கட்டும்
இன்னும் ரெண்டு மாசம் போகட்டும்
சங்கு முளி நாளையிலே
சமைத்தெடுத்த பைங்கிளியே
போட்டா செவக்குதில்லே
பொன் மயிலே ஓம் மயக்கம்
தென் கூந்தல் பாண்டியரே

படிப்பகம்

www.padippakam.com



பாண்டி என்ற பெண்களுக்கு
கரைக் கருவாட்டானம்
கைய விட்டாக் காணாம்
ஒன்னால சென்னப் பட்டினம்
ஊரை மறந்தேனடி
முகைய்தீன் சாகுலே
சாயக் கிடந்தொருவன்
சம்மானப் பாயெடுத்தான்
பாயிழுத்துக்கோ சூண்டி (கயிறு)
பருவான் அணைச்சுக் கட்டி
சாயலேத்தி சருகலேத்தி
சாமி கட்டும் புல்லிலேஞ்சி
புள்ளி ரவுக்கக் காரி
புட்டா போட்ட சேலக்காரி
சேலை நயமடியோ
சீமானோடி சந்தையிலே
சந்தியிலே நான் வாறேன்
சாலிப்பிலா ருவத்திலே
ஏலம்மா ஏலேலோ
கொடுத்தாலும் கொறைவதில்லே
கொஞ்சமேனும் போவதில்லே
போனன்னக்கி அங்கிருப்பேன்
பொதன் கெழமத் தங்கிருப்பேன்
தங்குறது இங்கேயடி
தரிக்கிறது வடமதுரை
மதுரைக்கு மேகிழக்கே
மாரியம்மன் தெப்பக் கொளம்
குளிக்கக் கொளமும் உண்டு
கும்பிடவும் கோயில் உண்டு

படிப்பகம்

www.padippakam.com



கோயில் செங்கமலை
எங்கே படித்த வித்தை
கற்ற கலிமாவில்
காவலுண்டு ஈமான்.,

காஜா - வயது 48; முத்து - வயது 40 -
கன்னிராஜபுரம், இராமநாதபுரம் மாவட்டம், 4.2.78.

***

அடிச் செருப்பாலே
ஆத்துக்கு அப்பாலே
அமைதியக் கெடுக்க வந்த
ஆம்பளைய அடிச்சுப் பத்து
பொறுமையக் கௌர வந்த
பொம்பளைய வெரட்டிப் பத்து

துரைச்சாமி - 38 வயது, மண்டபம்,
இராமநாதபுரம் மாவட்டம், 4.3.78.

***

அல்லாவோட பாவலிலே
ஆபத்தேதும் வாராமே
பேதங்கள் வாராமே
வாராமல் பாத்தருளும்
வள்ளல் பெருமானே
சூலான மாதத்திலே
சுந்தரனே பெற்றடுத்தாள்
பெற்று வளர்த்தாள்
பெரு வயித்துக் கள்ளனையும்

கள்ள மறவர் கூட்டம்
கண்டா எடுப்பார் ஓட்டம்
ஓடுனானே ஓடுனானே

படிப்பகம்

www.padippakam.com



ஓலப்பட்டிக் கக்கத்திலே
கண்டேன் ஒரு கனவு
கணவனுக்கு ஏற்காமே
ஏத்தம் கொடுக்குதில்லே
ஏனோ தெரியவில்லே
அறியாக் கொழந்தையிடம்
அரைப் பணத்தைக் கொடுப்பாக

கையாம் கையாம்
கிரெண்டைக் கையாம்
கைக்கும் மோதிரமாம்
மோதிரக் கைகளெல்லாம்
மொழியெல்லாம் நோவுதடா
நோக்கமெல்லாம் அங்கே
ஏத்தகாரா போடா
சண்டாளப் பாம்பு வந்து
மண்டாளம் போடுதடா
பதினெட்டுக் கோபுரந்தான்
படிக்குப் படிப் பூசை பண்ணி
பகவானோட வாதாடி - அந்த
பாவி கொடுமையை
பகவானறியலையே
நான் தெரிஞ்சு அறியலையே
திருப்பத்தூர் கோபுரந்தான்
சிலைக்குச் சிலை பூசை பண்ணி
சிவனோட வாதாடி - இந்த
சீதை கொடுமையை
சிவனும் அறியலையே அய்யா
குரல் விட்டு அழுகாம
கொட்டி விட்டேன் கண்ணீரை - அந்தக்

படிப்பகம்

www.padippakam.com



கோட்டைக்கும் அப்பாலே
கொடி மலைக்குப் பிற்பாலே - என்னப் பெத்த அம்மா
கொடி மலையில் உள்ளவுக
குடிக்கத் தண்ணியும்பார
கோதாதையா கண்ணீரை
குறுக் கணிச்சக் கண்ணீரும்பா -
வாயத் தொறக்காமே
வாய்விட்டு அழுகாம
வடிக்கிறேண்டி கண்ணீரை - நான்
வாடைக்கு அப்பாலே
வடகரைக்கும் பொறத்தாலே - அந்த
வடகரையில் உள்ளவுக
வாடின மாலையும் பார்
என்னப் பெத்த மாதா ஓடி வந்தா
மறு கண்ணீரில் தண்ணியல்லோ
மாதா கண்ணீரை
மறு கண்ணீரை
மறுக் கணிச்ச தோசமிப்பார்
சந்தனலிங்க மரம்
சதுரகிரி நெல்லி மரம்
குங்கும வில்லரோடு
கோதையாள் பஞ்சாயத்தை
தனியா வச்சுக் கேக்கணும்பார்
சங்கிலே இருந்து
சனி நாதன் கேட்டமுக
கொடி நாகம் கேட்டமுக
காகிதத்தில் கப்பல் செய்து
நாம் பெற்ற எம் மகளே
கடலிலே விட்டேனடா

படிப்பகம்

www.padippakam.com



கடலிலே விட்டேனடா
நாம் பெற்ற எம் மகளே
கரைய வந்து எப்ப சேரும் - நான்
மரத்திலே கப்பல் செய்து
மடுவிலே விட்டேனடா - அந்த
மடுவிலே விட்டானடா
மருகா வந்து எப்ப சேரும்
நாம் பெற்ற எம் மகளே
மருகா வந்து எப்ப சேரும்

அலியார் (35), முத்தலிபு (38), இபுராஹீம்(45),
சுந்தரம் (28), செபஸ்தியான் (31) கீழக்கரை,
இராமநாதபுரம் மாவட்டம் 3.3.81.

படிப்பகம்

www.padippakam.com



# "அம்மா" பாடல்

ஏலே தண்டு
அடடே தண்டா
பாசி நல்லா
பங்குனித் தேர்
ஏலையோ லோ ஏலையோலோ
வாறாய் அம்மா காத்த நிலா
காசி நல்லா விசிறி கொண்டு - ஏல ஏலேவோ
செம்பிலே செலையெழுதி
செவத்த மச்சான் - ஏல ஏலவோ
பேரு தளைக்க வேணும்
பெரிய குடி ஆகவேணும்
சங்கு நல்லா
சானாத்தி கை வளையல்
வாறாளே அம்மா
கந்தா கடம்பா
காட்சி அளிக்க வந்த
சங்கு கண்ட மோதிரம்
சமுகப் பூந்தானழ்
சங்கு முழங்குது
ராசாங்க மேலே
தம்பு முழங்கி வர
தாதர் குலம் பாடி வர
ஊசி நுழையாத காட்டுக்குள்ளே
உள்ளே நுழைஞ்சாண்டி பாதர் வெள்ளை

படிப்பகம்

www.padippakam.com



பாதம் பணிந்தேனே வெள்ளையம்மா
பணிவிடை செஞ்சேண்டி சக்கம்மாளே
சக்கம்மா வாக்குப் பளிக்க வேணும்
சண்டையில் வெற்றி அமைய வேணும் ஏல ஏலவோ*
ஏல தண்டு ஓமல தண்டு
அடடா தண்டு ஏலோ அடடா தண்டு
கொழும்பிலே கோப்பி
கூப்பிட்டு அம்மா மகளக் கேளு
பெத்த பேருமிட்ட நேத்தி என்ன
எங்கும் பரா பரா
ஏலோ பங்கு குல தெய்வம்
குருக்களோட மாலை வர
மாலை நல்லா பொருத்தமில்லே
மாமா மகள் அங்கே சொந்தமில்லே
சொந்தத்திலே ஏழு தண்ணி
சொக்குதடா அம்மா துரை முகத்தை
தொண்டியம்மா அங்கே வாறாளுன்னு
தூது வெலை அம்மா பட்டுடுத்தி
பட்டு எடுங்க தொட்டி கட்ட
பவனெடுங்க அம்மா காது குத்த
காலக் கடுக்குதம்மா
கடுங்கால நோகுதம்மா
ஓலேம்மா ஏலோ
ஓவேலம்மா ஏலோ

கோபால் (38), முனியாண்டி (31), பால்ராசு (28),
சுல்த்தான் (45) மணமேல்குடி, புதுக்கோட்டை மாவட்டம், 3.2.85

---

கட்டப்பொம்மு நாடகத்திலும், கட்டப்பொம்மு கதைப் பாடலிலும் பாடக் கேட்க முடியும்.



படிப்பகம்

www.padippakam.com



# சடங்குமுறைப் பாடல்கள்

4.1. கும்மிப் பாடல்கள்

4.2 பேயாட்டப் பாடல்கள்

படிப்பகம்

www.padippakam.com



# 4.1 கும்மி

பொட்டல பொட்டலப் பாருங்கம்மா
கொல்லுப் பொட்டலப் பாருங்கம்மா
கொல்லு வெளையிற காந்திபுரத்தில
கொமரி கும்மியக் கேளுங்கம்மா

சிந்திரி முந்திரியக் கண்டாங்கி
சின்னச் சிமிலிலில் வச்சடச்சு
எடுத்துடுத்தி மாராப்பூப் போடுது
ஏலேலே பாடுங்க சொக்க நாதா

"நிலவு நிலவு நல்ல நிலவுக்கு
நித்திரைக் காசை வைக்காதே
இந்த நிலவுக்கும் சந்தனப் பொட்டுக்கும்
தயவு தானுங்க ஞானப் பொண்ணே."*

அகரத்தாய் (திருமூர்த்தி மலை) - 20 வயது, காந்திபுரம்

*இந்த நிலவுக்கும் சந்தனப் பொட்டிற்கும் இப்படியா முழக் கொட்டுவது? (ப.165) "தமிழக நாட்டுப்பாடல்கள்" மா. வரதராசன்.

படிப்பகம்

www.padippakam.com



# நீலகிரி தோடர் பாடல்கள்

ஆஹா ஆஹா
தோடுவார் போத்தி
ஹிடுவோல் ஹோத்தி
கல்விலோ இஸ்தி
க்கிடுதார் நூட்தி

(தமிழில்)

நல்ல இடம் போகணும்
நல்ல உடை உடுத்தணும்
நாகரிகம் படைக்கணும்
நல்ல வாழ்க்கை வாழணும்

போதல் குட்டன் - 25 வயது, காந்தல் மந்து, 8.11.86

***

ஹோ ஹோ ஹோ ஹோய்
ஹோ ஹோ ஹோ ஹோய்
கொலாட் ஓஸ் வோஸ் பனி
கொன்னே நோட் நோஸ்ஸஸ் வனி
மோத்தத் தோட் ஒத்ஹ் தி
கொனர கேர் ஊட் தி

(தமிழில்)

ஹோ ஹோ ஹோ ஹோய்
ஹோ ஹோ ஹோ ஹோய்
ஆதி மொதலாக வந்தோமே
எருமை துணியால் வாழ்வோமே
கூட்டாய் இணைந்து வாழ்ந்திடவே
கும்பிட்டு எருமையைக் காப்போமே

லக்சம்மா - 48 வயது. மினிக் மந்து, 7.11.86.
(தமிழில் கே.ஏ. குணசேகரன்)

***

படிப்பகம்

www.padippakam.com



ஒரு மலை நாதா உச்சி மலை - நாதா
உச்சி மலை - நாதா
ஒசக்கேருக்கும் நாதா சாமி மலை
எந்த எந்த மலையைச் சுத்தி - நாதா
மலையைச் சுத்தி - நாதா
எறக்குவேனோ ஈசன் காவடிய (எதன்னே னன்னே)
ரெண்டு மல நாதா உச்சி மலை - நாதா
உச்சி மலை - நாதா
ஒசக்கேருக்கும் நாதா சாமி மலை
எந்த எந்த நாதா மலையை வேண்டி - நாதா
மலையை வேண்டி - நாதா
எறக்குவேனோ ஈசன் காவடிய (ஏ. தன்னே)
மூனு மல நாதா உச்சி மலை - நாதா
உச்சி மலை - நாதா
ஒசக்கேருக்கும் நாதா சாமி மல
எந்த எந்த நாதா சாமி வேண்டி -
சாமிய வேண்டி
எறக்குவேனோ ஈசன் காவடிய (ஏ தன்னே)
நாலு மலை நாதா உச்சி மல - நாதா
உச்சி மல
நாகமலை நாதா நம்ம மலை
நாகசாமி நாதா அருள வேண்டி - நாதா
அருள வேண்டி - நாதா
நாட வேணும் நாம எல்லோருமே.
ஆசாரத் திண்ணையிலே
ராசன் மகன் தூங்கையிலே - எங்க அம்மனிக்கு
குத்தாரம் பச்சையிங்க
விதம் விதமாக் குத்துங்க - எங்க அம்மினிக்கு
ஓடாத ஓட்டத்திலே - எங்க அம்மினிக்கு
ஓலப்பெட்டி கக்கத்திலே

மயிலா - 20 வயது, கீழ்க்குறுமலை,
(திருமூர்த்திமலை) கோவை மாவட்டம்.

படிப்பகம்

www.padippakam.com



மஞ்சப் பொறப்பு மல நூறு தேசம்
நேரான அய்யம் பாளையந்தாண்ட
ஆத்துமலையிலே சோறாக்கி
ஆவாரங்குச்சியில் கறி சமச்சு
தேக்க இலையிலே சோத்தப் போட்டு
தெகச்சு நிக்குது பூவலம்மா

காந்திப் பொட்டு கலகலங்க
கைவளைய ரெண்டு சோதிமின்ன
மேலுல மஞ்சள் மினுமினுங்க
மெல்லிய சீல தகத்தகங்க

பழனியம்மா - 48 வயது, காந்திபுரம்,
(புலையர் குடியிருப்பு), அண்ணா மாவட்டம்.

***

தன்னனன்னே னானனன்னே
தானே னானே னானே
அப்பனுக்கு முன் பிறந்த
யானை முகத்தானே - ஒன்ன
அடி பணிந்தேன் நானே - எங்க
அருமை சொல்லி கத படிக்க
அருள் புரி சீமானே

ஆரவள்ளி சூரவள்ளி
அழகு சுந்தர வள்ளி - என்
அருமைத் தங்கை செல்லி - நல்லா
அடிங்களம்மா கும்மி இப்போ
ஆத்தா பேரைச் சொல்லி

செல்லையம்மன் பிறந்த எடம்
மலையாளமாம் தேசம்
ஒளி மங்காத பிரகாசம் - அவ
கொண்டையில் மணக்குது பார்
கதம்ப மலர் வாசம்

படிப்பகம்

www.padippakam.com



கோயிலுக்குள்ளே குடியிருப்பாள்
கொழந்தை செல்லியாத்தா
மனம் கூசும் அவளைப் பாத்தா - நமக்குக்
கொறை தீர்க்க வந்திடுவாள்
கூவி நம்ம அழைச்சால்

ஆலயத்துக்குள்ளே இருப்பா
அழகு செல்லி ஆத்தா - மனம்
அஞ்சும் அவளப் பாத்தா - நமக்கு
அருள் புரிய வந்திடுவாள்
அன்பால் அவளை அழைச்சா

நெய்யூத்தி மாப்பிணைஞ்சு
நெட்டை நெட்டா வப்போம் - நாங்க
நெனச்ச வரம் கேப்போம் - அவ
நீராடி வெளிய வரும்
நேரத்தையும் பார்ப்போம்.

செல்வி - 22 வயது, வடபழஞ்சி, மதுரை மாவட்டம், 2.2.81

***

வாய்க் காக்கரையோரத்திலே
வன்னி மரம் ரெண்டு - கதம்ப
வாச மலர் உண்டு - அதிலிருந்து
மேல் பார்க்கும் அழகி
செல்லியும் உண்டு.

நாலுபுறக் கோபுரமாம்
வட பழஞ்சியாம் ஊரு - இந்த
நாடு எங்கும் பேரு - நம்மலை
வாழ வைக்கும் தெய்வத்துக்குச்
செல்லையம்மனாம் பேரு

வாஞ்சையுள்ள வடபழஞ்சியில்
வைகை பெரிய ஆறு - கோவில்
நாலுவாசல் பாரு - கும்மி
வகையாகப் பாடும் சந்தனுத்துக்கு
வடபழஞ்சியாம் ஊரு.

செல்வி - வட பழஞ்சி, 17.3.8?

படிப்பகம்

www.padippakam.com



தண்ணி ஊத்தி மாப்பெனஞ்சு
தட்டுத் தட்டாய் வப்போம் - நாங்க
தகுந்த வரம் கேப்போம் - தலை
ஒணத்தி வெளிய வரும்
தருணத்தையும் பாப்போம்

கொட்டுச் சத்தம் கொலவை கேட்டு
கோயில் விட்டு வருவா - நம்ம
கொறைகளையும் தெரிவா - அங்கே
கொழந்தையில்லாப் பேர்களுக்கு
கொழந்தை வரம் தருவா

மணியோசைச் சத்தம் கேட்டு
மலைய விட்டு வருவா - நம்ம
மனக் கொறையும் தெரிவா - மணமில்லாத
பெண்களுக்கு மாலை எடுத்துத் தருவா

ஆத்தோரம் வேப்ப மரம்
அழகாகப் பூக்கும் - அது
அடுக்கடுக்காய் காய்க்கும் - எலை
அவசரத்துக்கு வேணுமின்னா
ஆளு வந்து கேக்கும்

கொளத்தோரம் வேப்ப மரம்
கொல கொலயாய் பூக்கும் - அது
கொத்துக் கொத்தாய்க் காய்க்கும் - எலை
கொண்டு வந்து தின்பவர்க்கு
கொழந்த கவலை நீக்கும்

மந்தையிலே காத்திருப்பா
மாரி மகமாயி - அவ
மணி மந்திரத்தாயி - அவ
மந்திரத்தச் சொன்னப் போதும்
மருந்து இல்லா நோய்

படிப்பகம்

www.padippakam.com



தெப்பக் கொளம் காத்திருப்பா
ஒமையவளாம் தேவி - இந்தத்
தேசம் புகழும் தாயி - அவ
திரு நீரை அணிந்தவர்க்கு
தீருமில்லோ நோய்

கம்மாக் கரையோரத்திலே
கமுக மரம் ரெண்டு - கதம்ப
வாசமலர் உண்டு - அதிலிருந்து
மேல் பாக்கும் அழகி
செல்லியும் உண்டு.

சுந்தரவள்ளி - 40 வயது, கருமாத்தூர்,
மதுரை மாவட்டம், 3.3.82.

***

தன்னன்னே
முந்தி முந்தி விநாயகரே
முருக நல்ல சரஸ்வதியே
கந்தனுக்காகவே முன் பிறந்த
கணபதியே முன் வருவாய்

"மாலை மலந்ததப் பாருங்கம்மா
மாலை மோதிப் படந்ததைப் பாருங்கம்மா
மாலைக்குள் இருக்கிற செல்லையம்மனுக்கு
மாலை மின்னலைப் பாருங்கம்மா"*

கொத்தோடு கத்தரிக்காயும் கொண்டு
கோதுமைச் சம்பா அரிசி கொண்டு
தங்கச் சருவமாம் கைகொண்டு
சமைக்கப் போறாளாம் செல்லியம்மாள்

செங்கலறுத்தக் கெடங்குக் குள்ளே
திருகி வச்சாளாம் தென்னம்புள்ளே
நல்லாக் காக்கிதுமில்லே பூக்குதுமில்லே
செல்லியம்மனுக்கு நேத் நேரம்.

படிப்பகம்

www.padippakam.com



தேங்காய் ஒடைக்கவே தண்ணி தெறிக்கவே
தெப்பக் குளம் ரெண்டும் தத்தளிக்க
மதுரை மீனாட்சி செல்லையம்மாளும்
எப்ப வருவாளாம் தெப்ப பாக்க

கும்மியடிக்கவே பெண் பொறந்தேன் -கும்மி
குனிஞ்சடிக்கவே பெண் பொறந்தேன்
மிஞ்சி விரலாலே மோதிரக் கையாலே
குனிஞ்சடிக்கவே பெண் பொறந்தேன்

முத்தடி முத்தடிப் பூவரசே
மோகன முத்தடிப் பூவரசே
வித்தாரம் பேசுற வட பழஞ்சியில்
வீதிக்கு ரெண்டடிப் பூவரசே

கல்லுப் பெருத்து காளையார் கோயிலு
காவடிப் பெருத்தது குன்னக்குடி
சொல்லுப் பெருத்த மாரியம்மனுக்கு
சொந்தக் கிராமமாம் கண்ணமங்கலம்

ராமநாதபுரத்துத் தெக்கிட்டு தெக்கிட்டு
ராமலிங்கபுரம் ஊரணியாம்
அள்ளிக் குடிக்கலாம் தாகம் தீக்கலாம்
தூலுகாக் கச்சேரி போய்ச் சேரலாம்.

சந்தனம் - 45 வயது, வடபழஞ்சி,
மதுரை மாவட்டம், 3.2.81

***

*ஆன வாரதப் பாருங்கம்மா, ஆன அசெஞ்சு வாரதப் பாருங்கம்மா, ஆனைப் படலம் போலே நம்ம தேவதை, ஆட்டிகை மின்னலப் பாருங்கம்மா, (ப.176-77) "தமிழக நாட்டுப் பாடல்கள்" - மா. வரதராசன்*

படிப்பகம்

www.padippakam.com



தானா தன்னை தானா தன்னை
தானா தன்னை தானா தன்னை

முந்தி முந்தி நாயகரே
முருக நல்ல சரஸ்வதியே (தானா)

கந்தனுக்கோ முன்பிறந்த
கணபதியே முன்னடவாய் (தானா)

வேலவர்கோக முன் பிறந்த
விக்கினரே முன்னடவாய் (தானா)

சக்தி கணபதியே
சகலருக்கும் மூத்தவரே (தானா)

தொப்பைக் கணபதியே
தோக மயில் வாகனரே (தானா)

மேலோ வயிற்றோனே
பெருச்சாளி வாகனரே (தானா)

புள்ளையாரே பெரியவரே
எல்லோருக்கும் நல்லவரே (தானா)

கற்ற சடையே - இந்த
கந்தா சரவணரே (தானா)

கொற்றோனே....
உமையா(ள்) திருமகனே (தானா)

மூலப்பரம் பொருளே
முத்துக் கணபதியே (தானா)

தாய் போலப் பெண் கேட்டு
தனியரசு காத்தவரே (தானா)

ஆத்தங்கர ஓரத்திலே
அருகிருந்த பிள்ளையாரே (தானா)

பிரேமா - 30 வயது, பரமக்குடி, இராமநாதபுரம் மாவட்டம், 3.2.84.

SEELAN BOOKS SIGNATURE NORWAY

படிப்பகம்

www.padippakam.com



சிவனோட வாதாடும்
சித்தான மாரி முத்தே (தானா)

கிருஷ்ணனோட வாதாடும்
வேதாந்த மாரி முத்தே (தானா)

பிரம்மரோட வாதாடும்
பெத்தவளே மாரி முத்தே (தானா)

அழகனோடே வாதாடும்
ஆத்தாளே மாரி முத்தே (தானா)

எமனோட வாதாடும்
எக்காள தேவியரே (தானா)

தாலாட்ட பாராட்ட
தாயார் மனமெறங்க (தானா)

நான் சீராட்ட பாராட்ட
தேவி மனமிறங்க (தானா)

சக்தி உமையவளே
சாம்பிராணி வாசகியே (தானா)

சமஞ்சா சமயபுரம்
சாதிச் சாளாம் கண்ணபுரம் (தானா)

இருந்தா புராடபுரம்
இனியிருந்தா கண்ணபுரம் (தானா)

கண்ண புரத்தாளே
காரண சவுந்தரியே (தானா)

நல்லமுத்து மாரிமுத்து
நாகக் கன்னி தாயாரே (தானா)

பரம சிவன் வாசலிலே
பால் பசுவை காவல் கொண்டாய் (தானா)

மகாலச்சுமி - 28 வயது, பரமக்குடி, 13.2.85

படிப்பகம்

www.padippakam.com



ஏமனோட வாசலிலே
எருமைக் கிடா காவல் கொண்டாய் (தானா)

கரகம் பிறந்தாத்தா
கண்ணபுரம் மேடையிலே (தானா)

வேம்பு பிறந்ததத்தா
விஜய நகர் பட்டணமாம் - ஒஞ் (தானா)

சிலம்பு பிறந்த தத்தா
சிவலிங்கப் பாறையிலே - ஒஞ் (தானா)

சூலம் பிறந்த தத்தா
துலங்க மணி மண்டபமாம் - ஒஞ் (தானா)

உடுக்கு பிறந்த தத்தா
உத்திராட்ச பூமியிலே - ஒஞ் (தானா)

தண்டை நல்ல பிறந்த தத்தா
பனிங்கினால் மண்டபத்தில் - ஏ (தானா)

தண்டை நல்லா பிறந்த தத்தா
பனிங்கினால் மண்ட பத்தில் - ஏ (தானா)

ஒன்னாங் கரக மத்தா
ஓடி வரப் பொற்கரகம் - ஏ (தானா)

ரெண்டு கரக மத்தா
நிண்டு வரப் பொற்கரகம் (தானா)

மூணு கரகமத்தா
முத்தாலே பொற்கரகம் (தானா)

நாலு கரக மத்தா
நடன மாடப் பொற்கரகம் (தானா)

அஞ்சு கரக மத்தா
அசைந்தாடப் பொற்கரகம் (தானா)

படிப்பகம்

www.padippakam.com



ஆறு கரக மத்தா
அடுத்து வரப் பொற்கரகம் (தானா)

ஏழு கரகமத்தா
எளங்கிளியே பொற்கரகம் (தானா)

எட்டு கரக மத்தா
எடுத்தாடப் பொற்கரகம் (தானா)

ஒம்பது கரகமத்தா
ஒலகமெல்லாம் பொற்கரகம் (தானா)

பத்து கரகமத்தா
பணிந்தாடப் பொற்கரகம் (தானா)

வேப்பிலையும் பொற்கரகம்
வீதி வெளையாடி வரும் (தானா)

பச்சிலையும் பொற்கரம்
பாதையிலே ஆடி வரும் (தானா)

கத்தி போல வேப்பிலையை
கரகமெல்லாம் பூர விட்டாய் (தானா)

ஈட்டி போல வேப்பிலையை
இரு புறமும் பூற விட்டாய் (தானா)

ஆடி வரும் மாத்தையிலே
அமந்த செவ்வாக் கெளமையிலே (தானா)

ஒரே மாத்தையிலே
அமந்த செவ்வாக் கெளமையிலே (தானா)

கெளமை சொல்வி முறைத் தண்டுகா
கிளி மொழியே மாதரசு (தானா)

ஓலக் கொட்டான் கைப்புடிச்சு
ஓடும் பிள்ளை முத்தெடுத்து (தானா)

படிப்பகம்

www.padippakam.com



வண்ணக் கொட்டான் கைப்புடிச்சு
வளரும் புள்ள முத்தெடுத்து (தானா)

சின்னன் கொட்டான் கைப்புடிச்சு
சின்னப்புள்ள முத்தெடுத்து (தானா)

ஆட்டெருவக் கூட்டியுள்ள
மாட்டெருவக் கூட்டியுள்ள (தானா)

வேளாருக கள்ளையிலே
கோல வர்ண ஓடெடுத்து (தானா)

வேளாருக் கள்ளையிலே
வெத வெதமா ஓடெடுத்து (தானா)

பாரீ கமுகி வச்சு
பத்தினிலை தூக்கி வைச்சு (தானா)

ஓடு கழுவி வச்சு
உத்தமியே தூக்கி வைச்சு (தானா)

தண்டி வந்த முத்துகளை
தாவாரம் காய வச்சு (தானா)

தண்டி வந்த முத்துக்களை
தாவாரம் காய வச்சு (தானா)

வாங்கி வந்த முத்துக்களை
வாசலுமே காய வச்சு (தானா)

மூணு கொலவையிட்டு
முத்துக்களைத் தான்பரப்பி (தானா)

மூணு நல்ல கொலவையிட்டு
முத்துக்களைத் தான் பரப்பி (தானா)

அந்தி பொழுதுக்குள்ளே
ஆத்தாளே தஞ்ச மின்னா (தானா)

படிப்பகம்

www.padippakam.com



நீ அந்தி நல்லா பொழுதுக்குள்ளே
ஆத்தாளே தஞ்ச மின்னா (தானா)

மாலப் பொழுதுக்குள்ளே
மாரி முத்தே தஞ்ச மின்னா (தானா)

மால நல்லா பொழுதுக்குள்ளே
மாரி முத்தே தஞ்ச மின்னா (தானா)

ஓடு வளர வேணும்
உத்தமியே வாங்க வேணும் - ஓம் (தானா)

பாரி வளர வேணும்
பத்தினி பேர் வாங்க வேணும் (தானா)

சோளத் தட்டப் பெரம் பெடுத்து
சொகுசா மொழி நறுக்கி (தானா)

கம்மந் தட்டை பெரம் பெடுத்து
கணுக் கணுவா மொழி நறுக்கி (தானா)

ஒன்னா நம்பர் நாளையிலே
உச்சி குளுந்துருவா (தானா)

ரெண்டா நம்பர் நாளையிலே
ரெண்டலைக்கு மேலேருப்பா (தானா)

மூணாங் கெழமையிலே
முடக்கு முளை கொண்டிருவா (தானா)

மூணா நல்ல கிழமையில்ல
முடக்கு முறை கொண்டிருவா (தானா)

நாளாங் கெழமையிலே
நாலெலைக்கி மேலேருப்பா (தானா)

நாளாம் நல்ல கெழமையிலே
நாலெலைக்கு மேலேருப்பா (தானா)

படிப்பகம்

www.padippakam.com



அஞ்சாங் கெழமையிலே
மஞ்ச நெறம் மேலேருப்பா (தானா)

ஆறாங் கெழமையிலே
அன்னக் கிளி போயிருப்பா (தானா)

ஏழாங் கெழமையிலே
எல்லோருக்கும் தங்கல் சொல்வா(ள்) (தானா)

எட்டாங் கெழமையிலே
கிட்ட முளைக் காப்புக் கட்டி (தானா)

ஊரா ரெல்லாம் ஒன்னு சேர்ந்து
உத்தமிக்குக் காப்புக் கட்டி (தானா)

பத்துப் பேரு ஒன்னு சேர்ந்து - எம்
பத்தினிக்குக் காப்புக் கட்டி (தானா)

நாட்டாரெல்லாம் ஒன்னு சேர்ந்து
நாச்சியயாளக் காப்புக் கட்டி (தானா)

எட்டா(ம்) நல்ல கெழமையிலே
கொலு விருப்பாளாம் மாரியாத்தா

பொதன் கெழமை சாயங்காலம்
போய் விடுவா கங்கையிலே - நீ (தானா)

கெங்கையிலே போ கிளியே
கிளி மொழியே போ கிளியே - நீ (தானா)

கிளி மொழியே மாரியாத்தா
வாற வருசத்துக்கு

அடுத்த வருசத்துக்கு
அடுத்து நாங்க கும்மியடிக்க - நீ (தானா)

போறது போறியாத்தா
பொல்லாப்புச் சொல்லாதே (தானா)

படிப்பகம்

www.padippakam.com



படிச்சு வந்த மக்களெல்லாம்
பழுதில்லாம காத்திடத்தா (தானா)

கும்மியடிச்ச மக்களெல்லாம்
கொறவில்லாமக் காத்திடத்தா - எந் (தானா)

நாவு தவறிராமே
நல்லோசை மங்கிறாமே - எங் (தானா)

கொரலு தவறிராமே
கொரலோசை மங்கிடாமே - என்ன (தானா)

படிச்சுப் பொழக்கச் சொல்லி - இவ
பாடத்துல எழுதி வச்சே - எம் (தானா)

வாணி சரஸ்வதியே - எம்
வாக்கி லயும் குடியிரம்மா (தானா)

தேவி சரஸ்வதியே
தேடிக் குடியிரம்மா - நான் (தானா)

தெரிஞ்சும் தெரியாதவ(ள்)
தேவி கதை நான் பாட - நான்

அறிஞ்சும் அறியாதவ(ள்)
ஆத்தாள தான் நான் பாட (தானா)

ஒன்னுந் தெரியலத்தா
உத்தமியே மாரி முத்தே - என்ன (தானா)

எடுத்துப் படிக்கச் சொல்லி
ஏட்டிலையும் எழுதி வச்சே - எந் (தானா)

தாயே சரஸ்வதியே
சங்கரியே வந்தவளே (தானே)

என்ன மறந்துறாதே
இளங்கிளியே மாரிமுத்தே - நாள் (தானா)

படிப்பகம்

www.padippakam.com



என்ன நல்ல மறந்துறாதே
எளங்கிளியே மாரி முத்தே

ஒன்னா நல்லா மறக்க மாட்டேன்
உத்தமியே மாரிதாயே (தானா)

நீ பாத்து ஒதுக்கி வச்சா
நா(ன்) என்னத்தா சொல்லப் போறேன் (தானா)

ஒலகத்திலே உள்ள மக்க
ஒன்ன நம்பி வாழுறமே (தானா)

கன்னி மறந்திட்டாலும்
கனவிலே தான் வந்து சொல்லு - நான் (தானா)

கொழந்த மறந்துட்டாலும்
குறிப்புலயும் வந்து சொல்லு (தானா)

தலமாடு காத்திருந்து
தட்டி உசுப்பி தயவு சொல்லு (தானா)

தான தன்னை தான தன்னை
தான தன்னை தான தன்னை

வயசுப் புள்ள தெரியாமே
வருந்தியாத்தா மாரி முத்தே - நான்

கொஞ்ச வயசுப் புள்ளே
குறிச்சியத்தா மாரித்தாயே (தானே)

தானா தன்னை தானா தன்னை
தானா தன்னை தானா தன்னை

மல்லிகா - 18 வயது, சீத்தூரணி, பசு.மு.மாவட்டம், 13.2.84.

***

படிப்பகம்

www.padippakam.com



மாரியாத்தா கோயிலுக்கு கோயிலுக்கு

பி.பா. : மாரியாத்தா கோயிலுக்கு கோயிலுக்கு

பி.பா. : மகிமையுடன் பாடவந்தேன் பாட வந்தேன்
மகிமையுடன் பாடவந்தேன் பாட வந்தேன்

பி.பா. : காளியாத்தா கோயிலுக்கு கோயிலுக்கு - நீ
காளியாத்தா கோயிலுக்கு கோயிலுக்கு

பி.பா. : கருத்துடனே பாட வந்தேன் பாட வந்தேன்
கருத்துடனே பாட வந்தேன் - நான்

பி.பா. : அய்யனாரு கோயிலுக்கு கோயிலுக்கு - (இருமுறை)
அய்யனாரு கோயிலுக்கு கோயிலுக்கு - நாங்க
அழகுடனே பாட வந்தோம் பாட வந்தோம்
அழகுடனே பாட வந்தோம் பாட வந்தோம்

பி.பா. : கௌரி அம்மன் கோயிலுக்கு கோயிலுக்கு
கௌரி அம்மன் கோயிலுக்கு கோயிலுக்கு - நாங்க
கிளி மொழியால் பாட வந்தோம் பாட வந்தோம்
- அம்மா
கிளிமொழியா பாட வந்தோம் - பாட வந்தோம்

பி.பா. : புள்ளையாரு கோயிலுக்கு கோயிலுக்கு
புள்ளையாரு கோயிலுக்கு கோயிலுக்கு
பெருமையுடன் பாட வந்தோம்-பாட வந்தோம்-நாங்க
பெருமையுடன் பாட வந்தோம் பாட வந்தோம்
ஒரு மஞ்சளாம் தேரு மஞ்சளாம் காந்தியே காந்தி

பி.பா. : ஒரு மஞ்சளாம் தேரு மஞ்சளாம் காந்தியே காந்தி
(ஏ ஒரு மஞ்)

பி.பா. : ஒன்னா நம்பர் பச்சை மஞ்சளாம் கதர்க் கொடி மேலே
ஒன்னா நம்பர் பச்சை மஞ்சளாம் கதர்க் கொடி மேலே

பி.பா. : ரெண்டு மஞ்சளாம் தேரு மஞ்சளாம் காந்தியே காந்தி
ரெண்டு மஞ்சளாம் தேரு மஞ்சளாம் காந்தியே காந்தி

படிப்பகம்

www.padippakam.com



பி.பா. : ரெண்டர்(ம்) நம்பர் பச்சைமஞ்சளாம் கதர்க்
கொடி மேலே
ரெண்டா(ம்) நம்பர் பச்சை மஞ்சளாம் கதர்க்
கொடி மேலே

பி.பா. : அரச்சுத் தெரட்டினாலும் காந்தியே காந்தி
அரச்சுத் தெரட்டினாலும் காந்தியே காந்தி

பி.பா. : அல்லிய தாமரப் பொய்கையிலே கதர்க்கொடி மேலே
மூணு மஞ்சளாம் தேரு மஞ்சளாம் காந்தியே காந்தி

பி.பா. : மூணு மஞ்சளாம் தேரு மஞ்சளாம் காந்தியே காந்தி
மூணா நம்பர் பச்ச மஞ்சளாம் கதர்க் கொடி மேலே
மூணா நம்பர் பச்ச மஞ்சளாம் கதர்க் கொடி மேலே

பி.பா. : அரச்சுத் தெரட்டினாலும் காந்தியே காந்தி
அல்லிய தாமரப் பொய்கையிலே கதர்க்கொடி
மேலே

பி.பா. : அல்லிய தாமரப் பொய்கையிலே கதர்க் கொடி
மேலே
நாலு மஞ்சளாம் தேரு மஞ்சளாம் காந்தியே காந்தி
நாலு மஞ்சளாம் தேரு மஞ்சளாம் காந்தியே காந்தி.

பஞ்சவர்ணம் - 23 வயது, பரமக்குடி, 3.3.83

***

தன்னன்னே னாதினம் தன்னன்னே ன்னாதினம்
தன்னன்னே னாதினம் தன்னானே

திங்கக் கெழமை பூசைக்குப் போனதும்
நாயங்க கேப்பாக தேவமாதா (தன்)

கர்த்தர் பொறந்தது மாருகழி
காணிக்கை போட்டதும் மாருகழி (தன்)

மார்கழி மாசமாம் கர்த்தர் பிறந்திட்டார்
மாடப்புறக்களாம் காணிக்கையாம் (தன்)

படிப்பகம்

www.padippakam.com



கணக்கெடுத்தே பிறந்தாருன்னு
வெள்ளக் காகிதம் போட்டாளாம் தேவமாதா (தன்)

ரோமாபுரியில் அச்சடிச்சு
ஏற்பாடுகளாம் தானெழுதி (தன்)

வாருமையா நீங்க வாருமைய்யா
பத்துமணிக் குள்ளே வாருமைய்யா

பத்துமணிக்குள்ள பன்னன்டு இடம் தூக்கி
பட்டணம் போய்ச் சேரும் காகிதங்க (தன்)

ஏ காகிதம் வாசிக்கும் பேர்களுக்கு
........... .......... ........... ...........

தண்ணித் தவிக்குதே தாகமும் ஆகுதே
தண்ணி கொண்டாடி எல்லையம்மா (தன்)

கெழக்கே ஏறிட்டுப் பாருங்களே - நம்ம
கீழிடம் தெரியுது கேளுங்களே (தன்)

மேற்கே ஏறிட்டுப் பாருங்களே - நம்ம
மேலிடம் தெரியுது கேளுங்களே (தன்)

........... .......... ........... ...........
நாப்பத்தி நால்பேரும் கூடி நிற்க (தன்)

மகனப் பெத்த தாயாரு
புரண்டழுகுறா(ள்) பாருங்களே (தன்)

சின்னச் சருகணி ஓரத்திலே
சீரகச்சம்பா வெளையுது (தன்)

கோலமயிலெல்லாம் கொய்யிறதே
கூப்பிட்டுச் சொன்னாடி தேவமாதா

மின்னலும் பின்னலும் தோணுதடி
மீன்கடைச் சத்திரம் தோணுதடி (தன்)

சின்னம்மாள் - 19 வயது, தொண்டி, இராமநாதபுரம் மாவட்டம், 3.2.84.

***

படிப்பகம்

www.padippakam.com



தன்னே னன்னானே தன்னன்னே தானே னன்னானே - ஏ
தானே னன்னானே - ஏ
தன்னே னன்னானே தன்னன்னே தானே னன்னானே

செந்தமிழ் நாடு கண்ணம்மா சர்க்காரு வேலை - ஏ
சர்க்காரு வேலை -நான்
போகும் பாதையிலே கண்ணம்மா பூப்பந்தல் சோலை - ஏ

ஒரு வரப்பேறி அய்யாவுக்கு ஓரரிப் புல்லறுத்தேன் - ஏ
ஓரரிப் புல்லறுத்தேன் - நான்
புல்லுக் கொண்டு போனேன் துரை மகன் காரு ஏறிட்டாரே

முன்ன நடக்கையிலே கப்பிப் பின்ன சறுக்குது போல் - ஏ
பின்ன சறுக்குதுபோல்-ஏன்
ஆசை நேசமெல்லாம் என்னக் கண்டா அய்யாவே நான் மறந்தேன் - ஏ

ரெண்டாம் வரப்பேறி அய்யாவுக்கு ரெண்டரிப் புல்லறுத்தேன் - ஏ

ரெண்டரிப் புல்லறுத்தேன் - நான்
புல்லு கொண்டு போனேன் துரை மகன் காரு ஏறிட்டாரே

முன்ன நடக்கையிலே கப்பிக் கல்லு பின்ன சறுக்குது போல் - ஏ

பின்ன சறுக்குது போல் - ஏன்
ஆசை நேசமெல்லாம் என்னக் கண்டா அய்யாவே நான் மறந்தேன் - ஏ

மாரி - மாலிங்கை, 11.1.81.
பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்

***

படிப்பகம்

www.padippakam.com



தன்னே னே னானானே
தன்னேனே னானானே
தன்னே னன்னே
னானானே தன்னானே

ஆண்டவரே பெரிய நாயகரே - உன்னை
வேண்டி விளையாட வந்தேனம்மா
காச்சத் தலவலி ஏதொண்டுமில்லாமல்
காத்து இரட்சிக்க வேணுமம்மா (தன்)

வடக்கே ரெண்டு தலவாசல் - நல்ல
வண்ணப்பாயி தலவாணி
கெழக்கேருக்கிற மாரியம்மனுக்கு
வெள்ளிக் குஞ்சம் போட்டு வீசுங்களேன் (தன்)

வெள்ளி மலையிலே தீயெரிய - நல்ல
வெங்கலப் பாத்திரம் பொங்கி வர
அறுத்த சாவலும் எதுத்துக் கூவுது
அம்மா சன்னதி வாசலிலே (தன்)

கட்டுக் கடங்காத பொங்கப்பானை - நல்ல
கணக்குக் கடங்காத கோழித்தலை
ஏட்டுக் கடங்கா பொங்கப்பானை - நல்ல
எண்ணிலடங்கா சாவத்தலை (தன்)

மஞ்சச் சீலையாம் மாராப்பாம் - கையில்
மடி நெறஞ்சது மல்லியப்பூ
கொண்ட பெருத்த மாரியாத்தாளுக்கு
கொண்டு வந்தேன் கொட மல்லியப்பூ (தன்)

............ ............ ............ ............

ஒன்பது மாதமா செங்கக் கட்டி
தவிச்சு வாராக மாரியம்மா
தங்கக் குடம் போட்டு மோருங்களேன் (தன்)

படிப்பகம்

www.padippakam.com



ஆலெல போல அடிவயிறும் - நல்ல
அமைந்த நெத்திப்புருவங்களாம்
சோளக்கிளி போல மாரியம்மாளுக்கு
சொந்தக் கிராமமாம் மாவிலங்கை

சின்னச் சருகனி ஓரத்திலே - ரெண்டு
சீரகச் சம்பா வெளையுதுபார்
கோபமுள்ள கிளி மேயுதுன்னு - நல்லா
கூப்பிட்டுச் சொன்னாளே மாரியம்மா (தன்)

கல்லு வெளையுது காரங்காடு - கள
நெல்லு வெளையுது மாவிலங்கை
சொல்லு பொறுக்காத மாரியம்மாளுக்கு
சொந்தக் கிராமமாம் மாவிலங்கை (தன்)

சட்டை மேல தான் சட்டை போட்டு - நல்ல
சருகச் சட்டையை மேல போட்டு
கெழக்கே நிக்குற எளவட்டங்கா - எங்க
எளப்பத்தப் பாக்கவா நிக்கிறீக (தன்)

இராசேந்திரன் - 33 வயது, பரமக்குடி,
இராமநாதபுரம் மாவட்டம், 12.11.83.

***

தன்னே னே தானானே தன்னே னே னனானே
தன்னன்னே தானானே தன்னானே

எண்ணிலடங்காது பொங்கப்பானை - அதை
ஏட்டிலங்காது சாவத்தலை
அறுத்த சாவலும் எதுத்துக் கூவிடும்
அம்மா சன்னதி வாசலிலே (தன்)

“உருண்ட மலை தொண்டமலை - ராசன்
உன்னிதமான கழுகுமலை”*
சிக்கந்த மலை திருப்பரங் குன்றத்தை
சேவித்து வந்தா குறை தீரும்

படிப்பகம்

www.padippakam.com



மலை படந்ததப் பாருங்களேன்
மலை கொப்பிச் சிவந்ததக் கேளுங்களேன்
மலை மேலிருக்கிற மாயாவதாரரு
வரங் கொடுப்பாரு கேளுங்களேன்

பாத்தாலுஞ்சி று நந்தவனம் - அங்கே
பூத்தாலுங் கொட மல்லியப்பூ
கொண்டவ பெருத்தவ முத்து மாரிக்கு
கொண்டு வாங்க கொட மல்லியப்பூ

கண்ண மங்கலத்துச் சோலயில - ரெண்டு
கன்னியழியாத தென்னம் புள்ளே
இப்படியாக் கொந்த துக்க வனத்திலே
எப்படி வந்தாயோ தோழிப் பெண்ணே

............ ............ ............ ............

முத்தர்லே முத்தாலே பூவரசே
மோதிர முத்தாலே பூவரசே
வித்தாரம் பேசுற கண்ண மங்களத்துல
வீதிக்கு வீதி ரெண்டு பூவரசே

நாலு தெருவுக்கும் நாடி நிப்பா - நம்ம
நடுத் தெருவுக்குத் தங்கக் கும்பா

சின்னப்புள்ளை - 35 வயது, திட்டுக்கோட்டை,
இராமநாதபுரம் மாவட்டம், 3.2.85

***

"'வெள்ளிமலை விராலிமலை, விறகெடுக்கும் நாகமலை, ............ ............ ............ ............ ............ ............ ............ ............
மஞ்சி படருமலை, மகத்தான சுருளிமலை"என (ப.52) அன்னகாமுவின் - "ஏட்டில் எழுதாக் கவிதைகளில்" காணலாம்.

படிப்பகம்

www.padippakam.com



தானா தன்னை தான தன்னை
தானா தன்னை தான தன்னை

ஓடெடுத்து மொள பரப்பி
கொத்தமல்லி மொள பரப்பி

சம்சாரி வைக்கலிலே (வைக்கோல்)
சம்பா வைக்க ரெண்டெடுத்து

அதிகாரி வைக்கலிலே
அருயாமைக்கும் ரெண்டெடுத்து

கம்பந்தட்டை ரெண்டெடுத்து
கணுவு வச்சு மொழி நறுக்கி

சோளத் தட்டே ரெண்டெடுத்து
சொங்கு வச்சு மொழி நறுக்கி

ஓரா(ம்) நாளு அம்மாள்
உச்சி குளுந்திருக்கும்

ரெண்டாம் நாளு அம்மாள்
ரோகம் குளுந்திருக்கும்

மூணா நாளு அம்மாள
முடக்கு முளை கொண்டிருக்கும்

நாலாம் நாளு அம்மாள்
நாகரீக மாயிருக்கும்

அஞ்சாம் நாளு அம்மாள்
மஞ்ச நிறம் கொண்டிருக்கும்

ஆறு(ம்) நாளு அம்மாள்
அதிக வளத்திகளாம்

ஏழா(ம்) நாளு அம்மாள்
எழுவருக்கும் தெய்வமாக

படிப்பகம்

www.padippakam.com



எட்டா(ம்) நாளு அம்மாள்
எறங்கிடுவா கப்பலிலே

பத்தா(ம்) நாளு அம்மாள்
பதுங்கிடுவா கப்பலிலே

ராக்கி - 45 வயது, கண்ணமங்கலம்,
பசும்பொன் முத்துராமலிங்கம் மாட்டம் - 3.2.85

***

கண்ணகி பொறந்த இடம் காவேரி பட்டணமாம்
தோவலரு பொறந்த இடம் - யம்மா
கொண்டர் குடி மாமாங்களாம் யம்மாயம்மா

கொண்டர் குடி மாமான்களாம்
பொண்ணு கேக்க வந்தாங்களாம்
பக்கத்தில் உள்ளவுக யம்மா
பழுது வருமின்னாகளாம் யம்மா யம்மா

சண்டாள மாமங்களாம்
சவுளி எடுக்கப் போனாகளாம்
பக்கத்தில் இருந்தவுகயம்மா
பழுது வருமின்னாகளாம் யம்மா யம்மா

ஈச்சம் பாய் விரிச்சு
எழுதித்தான் முடிக்கையிலே
எதுத்த வீட்டுக் காரவுக யம்மா
ஏமன் வருமின்னாகளாம் யம்மா யம்மா

கோரம் பாய் விரிச்சு
பரிசம் பொருந்தையிலே
பக்கத்திலே உள்ளவுக யம்மா
பாத்துத் தானே முடியுமின்னார் யம்மா யம்மா

---

, மூன்றாங் கரகம்மா, ......................................, ஏழாம் கரகம்மா, எடுத்தாடும் பொன் கரகம், ......................................, பத்தாம் கரகம்மா" என முளைப்பாரி எடுத்து "சக்திக் கரகம்" ஆடும்போது பாடுவதை "ஏட்டில் எழுதா கவிகளில்" குறிப்பிடுவார் - அன்னகாமு (ப.184)

படிப்பகம்

www.padippakam.com



ஆத்துக்குள்ளே அஞ்ச வண்டி கண்ணைய்யா
அதிலே ஒரு கூட்டு வண்டி
கூட்டு வண்டி

கூட்டு வண்டி உள்ளேருந்து கண்ணைய்யா
நீட்டுருண்டி கை மருந்தே
கை மருந்தே

வடக்கே இரண்டு வண்டி வர கண்ணைய்யா
வாழக்காயி ஏத்தி வர
ஏத்தி வர

வாதனைக்கா பொம்பிறந்தேன்
தெக்கே ரெண்டு வண்டி வர கண்ணைய்யா
தென்னங் கொலை ஏத்தி வர
ஏத்தி வர

திருகி நல்லா கறி சமைக்க
தீ வினைக்கா பொம்பிறந்தேன்
பத்து பனை மரமாம் கண்ணைய்யா
பனையச் சுத்திப் பால் நடையாம்

பத்துப் பேரும் ஒத்துமையாம்
பாதவியா ஒண்டி தானே செல்லைய்யா

சுசிலா - 19 வயது, குலமங்கலம்,
புதுக்கோட்டை மாவட்டம், 10.2.84.

***

*தன்னன்னே....*

ஆகா நல்ல நெலவே - நீ
எங்கெங்கே போய்த் தங்குவே

எள்ளுக்கும் ஒரு நல்லெண்ணெய்
இருந்தாலும் ஒரு நேசந்தான் (தன்)

படிப்பகம்

www.padippakam.com


நேசமும் ஒரு பாசமும் அங்கே
விட்டுப் பிரிஞ்சதும் மோசந்தான் (தன்)

மானமே மயில் ஆடவே
ரதம் பூட்டவே ரதம் ஓட்டவே (தன்)

காடை சூடைப் பக்கத்தில் அந்த
கருத்த மச்சான் கக்கத்தில் (தன்)

மாவிடிக்கும் கூடமாம் - நல்லா
மறைஞ்சிருப்பா மாரியம்மா (தன்)

மானம் மோடம் போடவே
அங்கே குயிலிருந்து கூவவே

தன்னன்னா தினம் தன்னன்னேனா தினம்
வெள்ளி மலையிலே தீயெரிய - நம்ம
வெங்கலப் பாத்திரம் பொங்கி வர
சீவி முடிச்சவ தொட்டுப் பிட்டாளுன்னு
சக்தி வெளங்கும் ஒடைய நாச்சி

மட மடங்குற பட்டுடுத்தி
மாயாவ தாரனைக் கையழச்சு
மேகங்களோடி பொழுது மறைக்கிற
மெல்லியரே கொஞ்சம் தள்ளி நட

தளஞ்ச தாமரப் பொய் கையிலே - நம்ம
தண்ணிக் கிருவரும் போகையிலே
தண்ணியத் தூக்கித் தலை மேலே வைக்கயில்
சத்திய முன்னாளே ஒடைய நாச்சி

"சடச் சடன்னு மழை பேய
தெப்பத்துத் தண்ணி அலை மோத
சாட உள்ளவ ஒடைய நாச்சிக்கு
சருக மின்னுற மின்னப் பாறேன்"*

படிப்பகம்

www.padippakam.com



காளையார் கோயிலுக் காட்டுக்குள்ளே
கன்னியழியாத தென்னம்புள்ளே
தென்னம்புள்ளை யெல்லாம் பாழாப் போகுது
திரும்பிப் பாரைய்யா காள லிங்கம்

சாந்தி - 30 வயது, பாளையங்கோட்டை,
திருநெல்வேலி மாவட்டம், 10.3.84.

***

தன்னே னன்னானே தன்னே தானே னன்னானே
தன்னே னன்னானே தன்னே தானே னன்னானே

போனாலும் போங்க - புதுக்கோட்டை
பொயிலை தாங்க
வந்தாலும் வாங்க - மதுரைச்
சுண்ணாம்பு தாங்க

ஆசையிருக்கட்டும் - அந்திப்
பொழுது ஆகட்டும்
தைபொறக்கட்டும் - ஒங்க
தயக்கம் தீரட்டும்

ஒனக்கும் எனக்கும் சண்டை - இப்ப
ஒடையப் போகுது மண்டை
அந்தா இருக்கு புல்லு - இப்ப
உடையப் போகுது பல்லு

செவத்தி, 25 வயது, காளையார் கோயில்,
பசு.மு.மாவட்டம், 22.3.84.

*"சடச்சடவென்று மழைபெய்யச், சன்னலுத் தண்ணி புரண்டோட, சாடைக்காரி ஆளந்த வல்லிக்குச், சரிகை மின்னுற மின்னப்பாரு" (ப.166) "தமிழக நாட்டுப் பாடல்கள்" மா. வரதராஜன்.

படிப்பகம்

www.padippakam.com



# தோகையறா

எல்லாரு கழுத்திலேயும்
பாசிபவளங்களாம் - நம்ம
மாரியம்மா கழுத்திலேயும்
மங்காத தங்கத்தாலி

எல்லாரு நெத்தியிலும்
ஏழைக்கேத்த சாந்துப் பொட்டு
மாரியம்மா நெத்தியிலே - நம்ம
மங்காத தங்கப் பொட்டு

# காவடிச் சிந்து

அப்பனே.....

சுருளி மலை மீதில் மேவும் வேலா - உன்னை
ஸ்தோத்தரித்தேன் சுப்ரமண்ய வேலா - பசுத்
தோகை மயில்........... மீதிலேறி
வாகுடனே வந்தருள்வாய் - தூயா
முருகய்யா

கணபதி தனக்கிலேயே தீரா - எந்தன்
காமாட்சி தனக்கு உபகாரா - அந்தக்
காட்சி தனை ....... என்ன சொல்வேன்
மாட்சிமை மிகுந்திலங்கும்
கந்தா சிவன் மைந்தா

தீராத பணியகற்றும் உந்தன்
சித்து தன்னை என்ன சொல்வேன் கோவே - அந்த
அப்பனே உன் தென் பொதிகை முனிவருக்கு
அன்புடனே உபசரித்த
திருவே வேத குருவே

கன்னிய முடனே பல நாலும் - மச்ச
காவடி என் சந்நிதியில் கூடும் - அந்தக்

படிப்பகம்

www.padippakam.com



காட்சி தன்னை என்ன சொல்வன்
மாட்சிமை மிகுந்திலங்கும்
கந்தா சிவன் மைந்தா
அப்பனே......

கருப்பாயி - 27 வயது, அவையன் பட்டி,
அண்ணா மாவட்டம், 10.3.85.

***

ரோட்டா வெளக்கி வச்ச
ரோசாப்பூ உள்ளடக்கி
ரோசாக் கருகிறது எந்தன் தாயாரே - நான்
செல்ல மக வாடுறேனே பெத்த மாதாவே (தன்)

ஏ.... நெருஞ்சிப் பூ சல்லடையாம்
நெஞ்சிலொரு வேதனையாம்
நெஞ்சவிட்டுச் சொன்னேனுன்னா எந்தன்
தாயாரே - எனக்கு
நெத்தம் ஒரு சண்டையாகும் பெத்த மாதாவே (தன்)

அந்த... மகிழம்பூ சல்லடையாம்
மனசிலொரு வேதனையாம்
மனசவிட்டுச் சொன்னேனுன்னா எந்தன்
தாயாரே - எனக்கு
மாசம் ஒரு சண்டையாகும் பெத்த மாதாவே (தன்)

நான்.... கருவ மரத்தடியில்
கவலையச் சொன்னே னுன்னா
கருவால உதிரும் எந்தன் தாயாரே - எனக்கு
கருங் கெணரும் தண்ணி ஊறும் பெத்த மாதாவே (தன்)

ஏ..... ராணிக்கு ஏத்த ஒரு
ராசாவத் தேடப் போயி
நாடு ஒதுங்கிருச்சே எந்தன் தாயாரே - நான்
நல்ல கிளி பாடலாமோ பெத்த மாதாவே (தன்)

9

ஜெயசீலி அம்மாள் - 46 வயது, வண்டியூர்,
மதுரை மாவட்டம், 3.2.81.

படிப்பகம்

www.padippakam.com



# 4.2. பேயாட்டப் பாடல்

காணிக்காரர் பாட்டு (அ) கொக்கரைப்பாட்டு

மேமானம் வாய் வாயிந்தொரு
கீழ்ப்பூமி பொழிவாயி
அங்கு கடல் இங்கு மலை
பொழி வீந்து ஒணருன்னு

முத்தியும் குடியிருப்பு
ஏங்கினி ஒணருன்னு
மேமானம் பொழிவாயோ
கீழ்ப்பூமி தொறவாயோ

புல்லான் காணி - 105 வயது,
கரையாறு (பாபநாசம் மலை) நெல்லை மாவட்டம்.

***

வா மயிலே

ஆத்தில தலை முலிகின
எனது பரமேஸ்வரியா
அலை வந்து போதுமின்னு
குளத்து தலை மொழுகினால்
குமுகப்பசி தீருமென்று - அம்மா

பூசாரி ஒருவரால் (இவ்வினம்) வகிரெடுத்துச் சுருட்டப்பட்ட முழங்கை அளவுள்ள இரும்புக் குழாய் ஒன்றினை (முன்னர் மூங்கில் குழாயாக இருந்திருக்கலாம்) ஒருச்சாண் அளவு நீளமுள்ளதாக எடுத்துக் கொள்வர். ஒரு சிறு இரும்புக் குண்டூசியைக் கொண்டு வகிர் எடுக்கப்பட்ட பகுதியில் உராய்த்துக் கொண்டு அவர் தம் மொழியில் பாடுவார். மேற்சொன்ன இக்கருவியைக் கொக்கரை என்பர். கொக்கரையை இசைத்துக் கொண்டு பாடும் பாட்டினைக் கொக்கரைப் பாட்டு அல்லது அரைப் பாட்டு என்பர்.

படிப்பகம்

www.padippakam.com



வாய்க்காத் தலை மொழுகினால்
அன்னக் கிளி மொழியானால்
அரச்ன மையாட்டால்
வண்டுபடும் தும்பிபடும் என்று சொல்லி
எழு

ஏந்தாய்யே நீ
இள நீரால் தலை மொழுகி
அம்மா பத்துத் தோண்டியம்மா நீ
பாங்காத் தலை மொழுகி
ஆத்தா தலைமுடியாம்
அக்கரையில் தானுணத்தி
வாழப்புச் சித்தாடை
வலது புற
பிச்சிப் பூச்சித் தாடை
இருபுறமும் துயிலெடுத்து
இடது புறந் தூங்கலியா
எமனூட அக்கரையில்
உனக்குக் கரிச மணி
நாதியத்த பெண்ணே
உக்கருத்த பச்சைமணி
நாக்கு கருத்தமணி
நடுக்கருத்த பச்சைமணி
நம் பச்சைப் பணியள பரிக்க
எனது பரமேஸ்வரியே
பட்டாக சோதி மின்ன
தொட்டா சிகப்பல்லவோ - என் தாயார்
தொடுத்திட்ட மஞ்சனமே
எடுத்திட்ட மஞ்சனமே
மஞ்சணையும் முன்னேயும்
என் தாயார் மலையாள ராணுவமே
மலையாள ராணுவமே

படிப்பகம்

www.padippakam.com



விளையாடும் அஞ்சனமே
பாசி படர்ந்த மலை
அன்னக் கிளி மொழியால் - உனக்கு
பன்னீருத் தேரோடும் மலை - அம்மா
ஊசி படந்த மலை
உங்க வாசல் உத்றாச்சம் காய்க்கும் மலை - அம்மா
கோவை படந்த மலை
குங்குமம் பூக்கும் மலை
நாகமலை தங்கமலை
நாலுபுறம் சுந்தரம் மலை
வெற்றிக் கொடி நாட்டி
வீர பட்டம் ஆண்ட மலை
என் வேதப் பொருளோ
வளையாடும் அஞ்சனமே
என்னரக் கமுத்தி அங்கே
என் தாயர் பேருகொண்டவளே
பாப்பாரப் பெண்ணாபோலவே
என்தாயர் ஆலங்கறி அமைச்சு
மரம் நெடுகப் பொங்கலிட்டு
புங்கங்கறிசமைச்சு
உன் வாசல் புதுப்பானை பொங்கலிட்டு
பானை பெரும்பானை
அரும்பாலே பந்தலிட்டு
பள்ளயம் பளபளக்க
உன் வாசல் பக்கமெல்லாம்
தேச நல்ல என்
சிலையெடுத்தாய் - சீமான
மேல் நடக்க அண்ணா
சின்ன நல்ல வாடகையாம்
சிவகெங்கை சில்லாவில்ல
தேவர்மகன் ராசாதாங்க
அண்ணே காட்டுரணி காட்டிலையும்
சாமி காட்டிலையும்
கதுவாளி ரெட்டையானை - அண்ணே

படிப்பகம்

www.padippakam.com



கனிதிங்க அன்னபூரணத்தை
வாளாலே
வீரமகன் அண்ணா
நீ முன்ன நட அண்ணா
நான் தாரேண்டு அண்ணா
தங்க மகன்
பாவமுள்ள
மாண்டவுக
மங்காமலே போறதில்ல
கடவாலே கொடயினையா
கடினமா மாண்டாளப்பா
சிம மகன் மாண்டாளப்பா
வேலூராம் அண்ணா
வெள்ளைச் சாமி
வெளையாட
வேப்பமரம்
சோலையிலே
எல்கை விட்டு அண்ணே
வேதியரே அண்ணா
வாராரப்பா
ரோட்டிலே மோட்டாராம் - அண்ணே
ரோசாப்பூ கேட்டால் - அண்ணே
வீதியிலே மோட்டாராம் - அண்ணே
விரிச்சம் பூ கேட்டாராம் - அண்ணே
ஒரு தில்லேலோ அண்ணே
மோட்டாராம்
ஒயிலாட்டந்தான்
போட்டாராம்

தன்னேன்னனாதினம்
தன்னேன்னனாதினம்

**முக்குடைஞ்சான் (பூசாரி), 66 வயது, தெற்குக் கீரனூர்,**
**பசு.மு.மாவட்டம், 21.3.80.**

***

படிப்பகம்

www.padippakam.com



பள்ளத் தெரு மங்கலிலே
பவனி வரும் வேளையிலே
பாப்பாரப் பொண்ணு ரெண்டு - நீ
பாத்து நல்லா சிறையெடுத்தாய்
செட்டித் தெருவினிலே
ரெட்டியப் பெண்ணொருத்தி
தேடி நல்லா சிறையெடுத்தாய் - பாண்டி
சிறை எடுத்தாய் எங்க சீமான்

ஆத்துக்கரை மொந்தலிலே
அளவான குத்துக் கல்லாம்
குத்துக் கல்லு அய்யா எல்லையிலே
குடியிருப்போ பாண்டியர்க்கு
உப்பில்லா ரொட்டியடா
மப்பில்லா வில்லயடா
கஞ்சா நல்லா ஒம்மயக்கம்
தனி மயக்கப் போதைகளாம்

கோதை நல்ல ஒன்மயக்கம்
கொள்ளாத நிதி திரையாம்
வன்னிமாச் சாலையிலே
வந்த நல்ல சீமானடா
ஈச்சமரப் பண்ணையிலே
இருபுறமும் பாண்டியர்க்கு
பொங்கு நல்ல ஓம்புளியாம் - ஓங்க
புளித்த மரம் பண்ணையிலே

போற வழிப் பாண்டியர்க்கு
கச்ச மரம் எல்லையிலே
காவல் கொண்ட பாண்டியல்லோ
ஒத்த நல்ல ஓசந்த பனை
ஒன்னதம்மா கருப்பாயி
கந்த ஊரு எந்த தேசம்

படிப்பகம்

www.padippakam.com



எங்கிருந்து இங்கு வந்தாய்
நாடுகளும் பேருகளும்
நல்ல மயன் அண்ணே
சொல்லீடணும் தவறாமே - ஒங்க
ஊருகளும் பேருகளும்
உள்ளமட்டும் சொல் பாண்டி

## (வேறு)

வாசமுள்ள அண்ணேன்ணே ரோசாப்பூ
வாங்கி வந்து அண்ணேன்ணே தாரனப்பா
வாடாத அண்ணேன்ணே மல்லியப்பூ
ஒனக்கு வாசமுள்ள அண்ணேன்னே ரோசாப்பூ
சந்தனமும் அண்ணேன்னே சவ்வாதும்
வாங்கி வந்து அண்ணேன்னே தந்திடுவேன்
பாண்டியரே அண்ணேன்னே

## (வேறு)

செவசங்கப் பன்னீரப்பா - பாண்டி
சீமானுக்கு ராசா தந்திடணும்
அத்தரு பன்னீரப்பா - நீங்க
அவசரமா தந்திடணும் - நாங்க
போதை நல்லா மயக்கம் வர - நீங்க
பொல்லாத கஞ்சாவுமே
பூவுநல்லா நீர்பறவை
கொக்கரிக்கும் சேவலடா
சந்தனமாம் செல்ல மகளுக்கு
சடுக்கசாத் தந்திடணும்

கனத்த முடை எல்கையடா
புறமடை எல்கையிலே - பாண்டி

சடுக்காக - விரைவாக

படிப்பகம்

www.padippakam.com



போயமர்ந்த பாண்டியரே
வருசக் கல்லு எல்கையிலே
வகையா நல்லாப் போயமர்ந்தாய்
கல்லு மலை எல்கையிலே
காரணமாய் நீ இருந்தாய்
வேப்ப மரஞ்சோலை விட்டு
வேதியரே நீயிருந்தாய்

### (வேறு)

வண்டியூராம் கம்மாக்கரை
சாய்மானமாம் - ஒங்க
பாண்டியக் கேணிகளாம்
பள்ளிகளோ ஒங்களுக்கு
வண்டி பூட்டி மாடுபூட்டி
ரெண்டும் பூட்டி போவாரைய்யா பாண்டித்துரை
ஆலமரச் சோலையிலே - நீங்க
ஆளவந்த சீமானல்லோ
தொந்தியல்லோ
செவ்வாழை மேனியல்லோ
தண்ணியிட்டாத் தத்தளிக்கும் - அங்குத்
தங்க நல்ல திருமேனி
பொழுதுபட்டா - அண்ணே
தத்தளிக்கும் பொன்மேனி இதுவல்லோ
மேனி நல்ல எல்கையிலே
போகையிலே குடியிருப்பாய்
நீங்கிடுவாய்

**எலுமிச்சங் கனியிலுமே**
**ஏத்த கனி தந்திடணும்**
**பூமரத்தை விட்டல்லவோ**
**போக மனம் இல்லையடா**

படிப்பகம்

www.padippakam.com



கன்னியத்தான் விட்டு விடக்
காரணமும் இல்லையடா
ஆம்பளைங்க கள் குடிச்சா
அதிக வெறி ஆகுமடா
பொம்பளைங்க கள் குடிச்சா
போதை வெறி ஆகுமடா
தென்னை மரக் கள்ளுடனே
பொரித்த நல்ல கறி வகையும்
எனக்கு நல்லாத் தந்தையானால்
போவேனப்பா பாதை விட்டு

(வேறு)

சடையில தான் முடிபுடுங்க
தலையசைப் பூ உதிர
சாஞ்சிடைய்யா பாண்டி
பூ மரத்தை விட்டலல்வோ
போகவேணும் பாண்டியரே
எண்ணைக் கடை இருக்கல்லவோ
அந்தப் பாதையிலே போயிடணும்
பூக்கடையும் இருக்கல்லவோ
அந்தப் பாதையிலே போயிடணும்
முச்சந்தி எதிரிலே முன்னிருந்து போயிடணும்
கம்மா நல்லா மடை தொறந்து
பொறமடையும் தான் தொறந்து
போறேன் போறேன் போறேன்

முத்துப் போட்டு பாத்தனப்பா
தொயந்து வந்தேன் ஒம்மேலே

தொயந்து - தொடர்ந்து

படிப்பகம்

www.padippakam.com



ஆன அரசனப்பா
அங்கசந்தான் நான் பார்க்க
என்னப்போல தங்கைடயடா
இடையிலே வந்து பாஞ்சதடா
ஓடிய தம்பியையும்
சுழட்டுறா தங்கை அங்கே
மாயக்காரியடா
மாங்கனிக்காரியடா
மாயக் குறத்தியடா
மாலையிட வந்தவடா
கூலிக் குறத்தியடா
குடியிருக்க வந்தவடா
கல்யாணம் பண்ண இவ
வடபுறம் வந்த பொண்ணு
தெக்கு வடக்கிலப்பா
தெக சாஞ்சு வந்த பொண்ணு
எண்ணிக் குறிப்பறிச்சேன்
கூறினேன் தம்பி இங்கே.

வசனம்

நபர் : புள்ள சரியாக வழி செய்யுங்க!

பூசாரி : உடுக்கு நல்லா அடிக்கிறேன்
உத்தமியே ஓடிவா
சாமி அழைக்கிறேன்
சல்தியா ஓடிவா

வசனம்

பூசாரி : சேய்.... சேய்
என்னடா என்புட்டு எல்லைக்குள்ளே வந்து
தப்பிச்சுப் போகலாம்னு நெனக்கிறியா
ம்.... ம்.... ம்.... ம்.... "டேய்"

என்புட்டு - என்னுடைய

படிப்பகம்

www.padippakam.com



வங்கொலையா மாண்டவ
மைதானக் கரையிலே
இருந்து வாறண்டா
முக்காலுஞ் சத்தியமிது மாறக்கூடாது
வந்த வழி மாறாம ஓடிப்போ
"டேய்"
தொண்டியம்மா சத்தியமா
சத்தியமா இனி வரமாட்டான்
குலசாமியக்கும்பிடு - போ -

கருப்பன் - கோடாங்கிப்பூசாரி, நம்புதாளை காலனி,
தொண்டி, இராமநாதபுரம் மாவட்டம், 9.2.81.

***

வகுத்த நல்ல வகையறியேன்
வருணிக்கப் பேரறியேன்
எழுத நல்ல எழுத்தறியேன்
எழுத்தாணி நானறியேன்
காலையிலே நானெழுந்து
கை காலு முகங்கழுவி

அண்ணே : பாலைக் கொண்டு பல் விலக்கி
பனை ஓலை கொண்டு வரவழிச்சு

அண்ணே : நந்தவனம் போயல்லவோ
நான்குவகை மலரெடுத்து
காயாத வாழை கொண்டு
கருவாழை நாருரிச்சு
ஈனாத வாழை கொண்டு
இளவாழைத் தண்டெடுத்து

அண்ணே : பக்குவமாய் நாரெடுத்து
பண்டாரம் கட்டவேணும்
கழுத்திலிடும் ஆரமின்னு

படிப்பகம்

www.padippakam.com



தோளிலே ஆரமின்னு
துணிமேலே திண்டாட
மாரியிலே ஆரமின்னு
மடிமேலே திரண்டாட
சாயல் குடிக்கடிலோரந்தான்
சாயவேட்டி வாங்கித் தாறேன்
வீதியிலே விளையாட
வில்லுக்கம்பு வாங்கித்தாறேன்

வெ. இராமசாமி (கோணங்கிப் பூசாரி) - 65 வயது,
இளையான்குடி, பசு.மு.மாவட்டம் 3.1.81.

***

திருப்பிவனம் வெத்தலையாம்
திண்டுக்கல்லு சுருள்பாக்காம்
மதுரைக் கடைச்சந்தனமாம்
மார்க்கெட்டு மல்லிகையாம்
பூட்டவேணும் வில்லு வண்டி
புறப்படணும் வீரவனூர்
மதுரை நல்ல சாலையிலே
மன்னவரும் வாறாகளாம்
முனிச்சாலை ரோட்டுமேலே
வருகுது பார் மாடுகன்று
மாடுரெண்டும் மருதையல்லோ
மணிக ரெண்டும் திருநெல்வேலி
குப்பி ரெண்டும் கும்பகோணம்
குலுங்குதண்ணே திருப்புவனம்
மதுரை நல்ல சாலையிலே
மன்னவரும் வாறாகளாம்

புதன் கிழமை காலையிலே
பொன்னாளுமே தலை மொழுகி
அண்ணே அண்ணே கோடாங்கி

படிப்பகம்

www.padippakam.com



அத நான் சொல்லி வாறேன்
மஞ்சப்பூசி மாவெடுத்து - இவள்
மல்லிகையும் சூடிக்கொண்டு - அப்படி
மன்னவரும் தேவியுமாம்
அண்ணே வாறாகண்ணே கரும்பனை
நானிருந்த கரும்பனைக்கு
நாடிவந்தார் கன்னியிடம்

அண்ணே : சுத்தி நல்லா கன்னிகளாம்
சூறாவளி காத்துவர
அண்ணே : கண்டு நல்லாப் பயந்தாளே
கன்னி நல்ல மட மயிலு
அண்ணே : தொட்டதினால் தோசமில்லே
தொடர்ந்ததனால் பாவமில்லே

இருளாண்டி - 50 வயது, திண்டுக்கல்,
அண்ணா மாவட்டம், 13.7.83.

***

படிப்பகம்

www.padippakam.com



# தொழிற் கலைப் பாடல்கள்

படிப்பகம்

www.padippakam.com



# ஆட்டம், கூத்து - பாடல்கள்

சட்டி முட்டி கழுவ வில்லை
சமய வேலை செய்யவில்லை
வெட்டிப் பய மகளைக் கட்டி
வெக்கக் கேடு ஊருக்குள்ளே
வெரட்டப் போறேன்
தாலியறுத்து வெதவைப் போலே - நான்
வெகு பணத்தை செலவழிச்சேன்
பொண்டாட்டியாலே

கஞ்சிக்குப் பணம் கொடுத்தாக்
களவாண்டு வச்சுக்கிறாள்
அஞ்சு பத்து மிச்சம் பண்ணி
அனுப்பி வைக்கிறா அப்பன் வீடு
ஆடி ஓடி சம்பாரிச்ச பணமெல்லாம் போச்சு - இந்த
அவுசாரி சிருக்கியாலே அவமானமாச்சு

வாயாடி இவளை நானும்
வச்சு வாழ இஷ்டமில்லே
நாய மான தீர்ப்பும் வேண்டாம்
பஞ்சாயத்தும் தேவையில்லை
நானே இவளை வெரட்டப் போறேன்
நாட்டு வழக்கிலே
ஒரு நல்ல பொண்ணாப் பாக்கப் போறேன்
எங்க குலத்திலே

வாடா நீ போடான்னு
மதிப்பு வச்சு பேசுறாளே

படிப்பகம்

www.padippakam.com



இனி இவளை வச்சிருந்தா
இழவு வரும் குடும்பத்திலே
ஆடி ஓடி சம்பாரிச்ச பணமெல்லாம் போச்சு - இனி
இவள வச்சு வாழுறவன்
பைத்தியக்காரன்.

வெ. கருப்பன் - 62 வயது, புளிக்குளம்,
இராமநாதபுரம் மாவட்டம், 2.4.82.

***

**ஊ**ரு திரண்டிருச்சு
ஒத்துமை ஆயிடுச்சு
நாடு திரண்டுருச்சு

நம்ம - ராஜாராணி ஆட்டம் பாக்க
ஏலேலோ ஏலேலலங்கடி ஏலோ
கெச்சம் குமுறுதடி
காலடியும் மின்னுதடி
மச்சம் தெரியுதடி
உந்தன் மயிலுக் கண் பார்வையிலே
ஏலேலோ ஏலோலங்கடி ஏலோ

சொக்கரோட ஆட்டத்திலே
சொலிக்குதடி தெம்மாங்கு

ஏலேலோ ஏலோலங்கடி ஏலோ

இடைக்காட்டூர் கருப்பையா - மானா மதுரை - 13.2.84.

படிப்பகம்

www.padippakam.com



# மாரடிப்பு

## (தெருக்கூத்தில் இடம் பெறுவது)

மாண்டீரைய்யோ மாண்டீரைய்யோ
மன்னவரே என்ன விட்டு
தாண்டினீரோ சமர்கள் செய்து
சர பலனால் மாண்டீரைய்யா
வேண்டாமென்று சொன்ன என்னை
விரட்டி நீரும் வந்தீரைய்யோ
மஞ்ஞளுந்தான் இழந்தேனய்யோ
மணம் இழந்தேன் பொட்டிழந்தேன்
மாங்கலியம் தானழிந்தேன்
எப்போது நான் ஒன்னக் காண்பேன்
ஏங்கி நானும் தவிக்கலானேன்
எந்தனோட எம்பிராண நாதா
இப்பவே அக்கினியில் நானிறந்திடுவேன்
கஞ்சிக்கு இல்லே கடன்காரன் தொல்லே
தாலிபறி கொடுத்து இப்ப தனி வழியே
நிக்கலானேன்.

உம் பிள்ளைகள் அழுகிறதும்
உம் மனையாள் புலம்புறதும் - என்னை
மணம் செய்த மன்னவரே - இந்த
மன்னர் செவி கேக்கலையோ
கல்லாலே கப்பல் கட்டி
கடலிலே விட்டேனடா
கடலிலே விட்ட கப்பல்
கரையோரம் வாறதெப்போ - உன்



படிப்பகம்

www.padippakam.com


கருணை முகம் காண்பதெப்போ
மஞ்சள் இழந்தேனையே
குங்குமம் தானிழந்தேன்
மாங்கலியம் தானிழந்து - இப்போ
ஏங்கித் தவிக்கலானேன்
இக்கொடுமை நாட்டிலே நான்
இனி இருக்கலாகாது.

பி.கே. ஜெயராமன் - 30 வயது, பங்கார்பேட்டை,
(மகாபலிபுரம் அருகாமை) செங்கற்பட்டு, 4.3.81.

# தொகையறா

## பரிசளித்தவர்க்கு நன்றி கூறும் பாடல்

இருந்தாச் சோறு வேணும்
எந்திரிச்சா குறிச்சி வேணும்
நடந்தால் நட குலுங்கும்
நடந்து போனால் சோதி மின்னும்
முன்னழகு பொன்னழகு
மோகத்தின் பனி அழகு
நம்ம தன்னழகுக் காரரை
யாரைச் சொல்லாம்
மாதரை உசிலம் பட்டி
மகராசன் பூச்சம்பட்டி
தொட்டப்பன் நாயக்கனூரு
தொடர்ந்திருக்கும் இடையப்பட்டி
இன்னும்....

அன்னஞ்சி தேவாரம் கடலூர்
கம்பத்து வரைக்கும் பேர்பட்ட
மகாபிரபு யார் தெரியுமா

படிப்பகம்

www.padippakam.com



இந்த நாட்டுக்கும்
இந்த கோர்ட்டுக்கும்
இந்த பதிநாலு சில்லாவுக்கும்
பேர்பட்ட கிருஷ்ணனைத்தான் சொல்லலாம்
நம்ம சந்தனம் பார்ட்டியாரின்
ஆட்டச் செட்டுக்கு
அன்னவர்கள்
அஞ்சு ருவாயை
அஞ்சு லச்சமா மதிச்சு
நம்மளுக்கு அன்பளிப்பு
செஞ்சிருக்கிறாக
அன்பார்ந்த நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்

சந்தானம் - கோமாளி, வடபழஞ்சி - மதுரை - 4.4.84.

(ஏனை ஆட்டக்காரக் கலைஞர்கள் ஆமா, ஆமா என்பார்கள்)
குறிச்சி - மூங்கில் பிரம்பால் செய்யப்பட்ட இருக்கை.

படிப்பகம்

www.padippakam.com



# தொகையறா பாடல்

## கோமாளி சபை வணக்கம்

நாலுபுறக் கோபுரமும்
நாகரீக வீதிகளும்
சீல மிகு வைகைகளும்
சித்திரை மாதத்திலே
ஆலவாய் நகரமெனும்
அண்டம் புகழ்ந்து வரும்
அடர்ந்த கடம்பவனம்
அழகு நமது வடபழஞ்சிக் கிராமத்திலே
மாமரம், தென்னமரம், பிலா மரம்
மஞ்சனத்தி வாழ மரம்
மாதுளை கொய்யா பூவரசு நெட்டிலிங்கம்
புளியமரம் பாக்கு புன்னமரம்
தோதகத்திப் புங்கமரம்
பாக்க ஆலமரம்
பப்பாளி அழகான வன்னி மரம்
அரசு கமுக மரம் கோயிலு இருபுறமும்
சைசாய் வளர்ந்திருக்கும்
சவுக்கையோடு சந்தன மரங்களுடன்
மந்தையிலே சிங்கமுடன்
மான் விளையாடி வரும் மல்லிகை இருவாச்சி
தனிப்புகழும் கோயிலு முன்னாலே
ஆட்டம் வச்சிருக்கும்

படிப்பகம்

www.padippakam.com



தனித் தங்கம் தெரியுமா
கண்ணுக்குக் கண்ணாகிய
கானகத்துக்கோர் வண்டாகிய
வண்டுக்கோர் செண்டாகிய
செண்டுக்கொரு அரும்பாகிய
அரும்புக்கு அமிர்தமாகிய
அமர்ந்து நிற்கும் வண்டாகி
தேனை அருந்தாமல்
திகைத்து நிற்கும் வண்டாகி
நீரோடு வாழை நட்டு
நிலத்திலே குருத்து விட்டு
அடிக்கடி தென்னம்புள்ளே
அதிலொரு பொய்யங்காவல்
எடுக்க முடியாமல் ஏகமாய்
பூத்து மணக்குதாம்
யாருடைய மனசு
கலா நிகழ்ச்சிகள்ளாம்
நடத்த நம்மளை இங்கே அழைச்ச
அய்யாமார் மனசு.

செல்வம் - 45 வயது, புலியடிதம்மம்,
பசு.மு.மாவட்டம், 4.3.82.

சைசாய் - வடிவமாய் ; நம்மளை - நம்மை

படிப்பகம்

www.padippakam.com



# டப்பாத் தெம்மாங்கு

டங்கா டுங்கா
தவிட்டுக் காரி
மதுரை டவுனுக்குள்ளே - எங்க
மதிப்பைக் கேளடிபுள்ளே

அகரத் தகரவில்லே - நமக்குச்
சரியாச் சம்பளமில்லே
ஏறி எறங்குது ராட்டா - நம்ம
எலையக் குத்துவோம் சூட்டா
சைட்டு மேஸ்திரி கேட்டா - நம்ம
டப்பாக் குத்துவோம் சோக்கா

அக்கா மகளே சொரணம் - எம்
பக்கத்திலே வரணும்
மாமன் மகளே மதினி - ஒரு
ஏரப்பிளேன் பவனி
சைடு பாப்பது இருட்டா - ஒன்
சைட்டுக்கு நான் வரட்டா
வேப்ப மரத்துக் காத்து அம்மா
வீசி அடிக்குது சேத்து

அந்திக் கள்ளு போதை - ஒம்மேல்
அடிக்குதடி வாதை
அஞ்சு ருபாக் கத்தி எடுத்து - நான்
அறுக்கப் போறேன் காத்தை

படிப்பகம்

www.padippakam.com



தாலி பண்ணுற அக்கா - நான்
தம்மடிக்கிறேன் உக்கா
கோழி மேட்டுக் கம்மாய்க்குள்ளே
குதியும் போடுதாம் வக்கா

இந்த மாதிரிப் பாட்டை - நீ
என்னக்கித்தான் கேட்டே
எடுத்து வாடி நோட்டே - ஒனக்கு
எழுதித் தாறேன் பாட்டை

இவளும் நானும் சோடிங்க - என்ன
எதுக்குறதப் பாருங்க
எதுக்க இருக்கிறது டீக்கடை - என்
கூடவாடி சாப்பிட

சாயாக் குடிக்கப் போறேண்டி - இந்த
வடபழஞ்சி மந்தையிலே
தண்ட மனம் போடப் போறேண்டி

அடியே! டாலு பண்ணி சவுக்குப் பண்ணி
ஏய்க்க வந்த பொம்பளை
டாலுப் பண்ணாதே - இந்தச்
சின்னப் பயல் சந்தனம் கிட்டே - ஒன்
சம்பம் செல்லாதே

தினனா தினனா தினனா
தின் னானே

வடபழஞ்சி சந்தானம், 4.3.83

***

டாலு பண்ணி - வம்பு செய்து; சம்பம் செல்லாது - முயற்சி பலிக்காது, திட்டம் வெற்றி பெறாது.

படிப்பகம்

www.padippakam.com



அல்லிக் கீரை மல்லிக் கீரை
அச்சம்பத்து அகத்திக்கீரை
உப்பில்லாம வச்சிருக்கா
துப்புக் கெட்ட தோத்தகத்தி

சந்தையிலே மீனு வாங்கி
சல சலன்னுக் கொழம்பு வச்சு
கொத்த மல்லிப் பத்தலேன்னு
குத்துராண்டி இந்தடப்பா

காயிலையும் சிறந்த காய்
உன்னிதமான முருங்கைக்காய்
முருங்கக் காயத் திண்டுபுட்டு
மூணு புருஷன் கேக்குறாளே

கட்டப் புள்ளே குட்டப் புள்ளே
கருசமணி போட்டபுள்ளே
கட்டிக் கொடுக்கலேன்னு
முட்டுறாளே செவத்து மேலே

சின்னாத்தாள் - 32 வயது, அச்சம்புத்து,
மதுரை மாவட்டம், 4.3.84.

படிப்பகம்

www.padippakam.com



# தெம்மாங்கு

## (குறவன் குறத்தி ஆட்டம்
## ராஜாராணி ஆட்டம்)

அவன் : தண்ணீக் குடமெடுத்து
தலை குனிஞ்ச உடல் நனஞ்சு
அன்ன நட நடந்து
அவசரமாக் கை வீசி
போறவளே செல்லம்மா
ஒங்க அடையாளந்தான் தெரியலையே செல்லம்மா

அவள் : அடையாளந் தெரியுமைய்யா
அத்தானென்று புரியுதைய்யா செல்லைய்யா

அவன் : மாங்கனியே பூங்குயிலே
மாமன் மகன் வந்திருக்கே
வீதியிலே சனங்கண்டா செல்லைய்யா
வித்தியாசம்மா நெனப்பாகைய்யா செல்லைய்யா

அவன் : அறியாப் பருவத்திலே
அண்டி நின்னு பேசவில்லே
பேச்சை மறந்திட்டாயே செல்லம்மா

அவள் : மறந்து ஒன்னும் போகவில்லை
மனசில் ஏதும் கோபமில்லை
பெற்றோரைக் கேக்கவேணும் செல்லையா

அவன் : பேச்சை மழுப்ப வேணாம்
இஷ்டப்பட்ட ரெண்டு பேரு
இதிலே எவர் தடுக்கப் போறாக

கலைச்செல்வி - 23 வயது, கடம்பாகுடி, இராமநாதபுரம் மாவட்டம், 2.3.85.

படிப்பகம்

www.padippakam.com



# குறவன் குறத்தி ஆட்டப் பாடல்

பர்மாச்சைனா ஒங்க ஊரு
பக்கம் வந்தா சிங்கப்பூரு
போருக்காகப் பயந்து நாங்க
வந்தோம் சாமி இந்த ஊரு

கப்பலேறி கடல் கடந்து
தப்பிப் பிழைக்க வந்தோம் சாமி
தகுதியற்ற நரிக் குறவர்
சவகரிடத்தில் எடுத்துச் சொல்ல

அவரு எங்க மொகத்தைப் பாத்து
அனுப்பி வைத்தார் தென்னாட்டுக்கு
காடுகள்ள ஓடிப் பெழப்போம்
கண்டெடத்திலே குடிசை வைப்போம்

எங்க புருஷன் பிள்ளைகளை பாதகமா எண்ணமாட்டோம்
"பொய் பொரட்டு பேச மாட்டோம்
போலீஸ் ஸ்டேசன் போக மாட்டோம்
களவு கொள்ளை செய்ய மாட்டோம்
கச்சேரிக்குப் போக மாட்டோம்"*

சோறு சோறு என்று சொன்னா
சொரக் கொடக்கை நம்பிப் போவோம்
கஞ்சி ஊத்து என்று சொன்னா
கைப் போவானி நம்பிப் போவோம்

ஊசி விப்போம் பாசி விப்போம்
ஊருக்குள்ளே புகுந்து விப்போம்

படிப்பகம்

www.padippakam.com



மதுரை மீனாட்சி பட்டணமாச்சு
மேன்மையான பட்டணமாச்சு

பட்டு நூல் காரத் தெருவாச்சு
பட்டினிப் பசியைத் தீக்கலாச்சு
காலையிலே மலரெடுத்துக்
கருப்புச் சாமியக் கும்பிட்டு
ஆட்டமும் அழகுந்தானுங்க
மல்லிகாலோட பாட்டுத் தானுங்க

தினானா தின்னானா

மல்லிகா - 25 வயது, கீழவாசல், தஞ்சாவூர் மாவட்டம், 2.3.84.

# விருத்தம்

## கூத்தாசூரன் சரபலவன் சண்டை - (கூத்து நாடகம்)

### கூத்தாசூரன் வருகிற விதம் காண்க

அண்டமோடு பூமி அதிரவே திரிகள் சாய
ஆக்ரமித்து இரு கண்களும் பொறி பறக்க
தொண்டமேடு தோமரமும் விரிவில் தாங்கி
தாண்டியே கொக்கரித்த புஜங்கள் தட்டி
வண்டணி குழல் மாதரெல்லாம் வாடியே ஓட
வாரணம் போல் கர்ஜித்து பல வீரம் கூறி
குண்டலமும் காதில் ஆட சில வாளேந்தி
கூத்தா சூரன் வருகின்றானே.

தெருக்கூத்து கலைஞர் ஜெயராமன் - செங்கற்பட்டு- 4-3-1981.

*பொய் பொரட்டு பேச மாட்டோம் சாமி, போலீசு கச்சேரி போக மாட்டோம், (ப.262) நா.பா.கா.த. வாழ்வியல் - இராமநாதன்.

மல்லிகாலோட - மல்லிகாவுடைய

படிப்பகம்

www.padippakam.com



# நொண்டிச்சிந்து

## திரையை விட்டு வெளி வருகையில் - பாடல்

கூத்தா சூரனிதோ வந்தேன் - இந்த
குலமேயும் நடுங்கிட, கெடியோமே கொண்டேன்
அத்தானார் கண்டுமே ஆட - நல்ல
அரியுடன் அயனுமே நிகரில்லா கூட
காவலனாகவே இருந்தேன் - இன்று
கங்காவலன் சாபத்ததால் சூரனாய்ப்பிறந்தேன்
ஆல காலம் போல சீறி
குருதி போல அடியுமே மின்ன
இந்த கூத்தா சூரன் என்றால் பயமதுபன்ன
பரிதியும் கண்டுமே ஓட - நல்ல
பலமான சூரரும் பாதத்தில் நிற்க
வில்லு அம்பு தண்டு ஒலக்கை கொண்டு
வேட்டைகள் ஆடவே வாரானே - இன்று
கூத்தா சூரனிதோ வந்தேன்
குகுதேம்தா குகுதேம்தா

தெருக்கூத்துக் கலைஞர் ஜெயராமன் - செங்கற்பட்டு

படிப்பகம்

www.padippakam.com



# வேட்டை ஆடுகிற விதம் காண்க

வேட்டை ஆடுவோம் வாருங்கள்
வெகு வீரத்தில் மிகுந்திடும் சூரரே நீங்களும்
வேட்டையாடுவோம் வாருங்கள்
வேட்டையாடுவோம் வாராய்
காட்டகம் தன்னிச் சென்று
வெகுண்டுமே எரியும் கவுண்டுமே கொண்டு
வீரரே வாருங்கள் நேராக இன்று
சிங்கக் கூட்டத்தைக் கொல்லுவோம்
செடியினில் இருந்து துடியுடன் மறைந்து
சிங்கக் கூட்டத்தைக் கொல்லுவோம்.
சங்கையில்லா புலியை சாடி வதைத்திடுவோம்
குத்தியே அதனைச் செத்திடச் செய்குவோம்.

மான்கள் தன்னையே பிடிப்போம்
மடக்கியே அதனை துடுக்குடன் இப்போ
மான்கள் தன்னையே பிடிப்போம்
மானுடன் முயல் வேட்டைகள் ஆடுவோம்
மந்திகள் குந்தியே - முந்தியே ஓடுது
சந்துகள் இன்றியே சோடியாய் வருது
வேட்டைகள் ஆடுவோம் வாருங்கள்
வெகு வீரத்தில் மிதந்த சூரரே நீங்களும்
வேட்டையாடுவோம் வாருங்கள்.

தெருக்கூத்துக் கலைஞர்ஜெயராமன் - செங்கற்பட்டு, 4.3.81

படிப்பகம்

www.padippakam.com



## டேய் சுக்ரீவா நான் வந்து உன்னை அழைக்கும்படி நேர்ந்தது ஏன் காலதாமதம்

### தொகையறா

சொன்ன சத்தியம் தனை மறந்தாய்
சூதான வான சுக்கிரீவனே
கார் காலம் சென்றதும் வாறேன் என்று சொன்னாய்
கண் மணி சீதையைத் தேடுதற்கே
நேரில் வாராதென்ன காரணமோ என்ன
இக்கணம் என்னிடம் தானுரைப்பாய் (வசில் சப்தமிடல்)

### பாடல்

வானர சுக்கிரீவன் வழி வந்தனம் தானே தேவா
வறுமையுற்று அடிமை என்னை ஆதரிப்பீரே
வானரங்களை ஒன்று சேர்த்து வருவதற்கே
அருமையுடன் நானிருப்பேன் ஸ்ரீராமா

### வசனம்

"சுவாமி! நமஸ்காரம்"
"மங்களம் உண்டாகுக"

### பாடல்

அண்டமெல்லாம் கொண்டாடும் அரிராமா
எந்தன் ஜெயராமா - நான்
அடி பணிந்து நான் தொழுதேன் ரகுராமா
வானரங்களை ஒன்று சேர்த்து வருவதற்கே
அங்கே வருவதற்கே
அருமையுடன் நானிருந்தேன் ஜெயராமா

படிப்பகம்

www.padippakam.com


சுக்ரீவன் : (வசனம்)
வானரங்களை ஒன்று சேர்த்து
புறப்படும் சமயம் நான் வந்து
சேர்ந்தேன் மன்னிக்கவும்

ராமன் : சுக்ரீவா! உன்னை மன்னித்தேன்
என் தேவியைத் தேடி யார் யார் செல்கிறீர்கள்.

சுக்ரீவன் : ஆஞ்சநேயர், நீலன், சாப் புந்தன், அங்குதன்
இன்னும் அநேகம் பேர் செல்கிறோம்

ராமன் : சீக்கிரம் என் தேவி இருக்குமிடம் தெரிந்துவர
வேண்டும்.

சுக்கி : அப்படியே தெரிந்து வருகிறோம்
அன்னை நடையினம் சொல்ல வேண்டும் சாமி

ராமன் : சொல்கிறேன்.

**பாடல்**

அன்னநடை உடையாள் என் சீதா
அன்ன நடை உடையாள் என் சீதா
அழகழகா மயில் ஆடல் போல
சின்ன இடை அழகி என் சீதா
வித விதமா மயில் ஆடல் போல
சொர்ண வடிவழகி என் சீதா

(வசனம்) ஆஞ்சனயரே இன்னும் என் தேவியின்
அழகினைச் சொல்வேன் - கேளுங்கள்

**பாடல்**

மூன்றாம் பிறை எனலாம் - அவள்
முத்தமிடும் சின்ன முகம் எனலாம்
தென்னங் குரும்பை எனலாம் - அவள்
தேகத்தில் காந்தத்தை என்ன சொல்வேன்
கூந்தலுமே ஏழு பாகமே - அதில்
குறையில்லை ஏதும் சொல்லல் பாவமே

படிப்பகம்

www.padippakam.com



(வசனம்) இப்பேர்பட்ட அழகு வாய்ந்தவள் என் தேவி
அன்னவள் இருக்குமிடம் அறிந்து சீக்கிரம் வர
வேண்டும்

(வசனம்)
சுவாமி! அன்னைக்கு அடையாளம்
ஏதாவது கொடுங்கள் சாமி

அர்த்த முள்ள கணையாழியை
ஆஞ்ச நேயர் கையில் வாங்கும்
ஆஞ்சநேயர் வாங்கிச் செல்வீர்
சொந்தமுள்ள சீதையிடமே
சொல்லிடுவீர் எந்தன் குணமே
சொந்தமுள்ள அண்ணியிடமே
சொல்லிருவேன் தங்கள் குணமே

(வசனம்) வீரர்காள்! வாருங்கள் சீக்கிரம்
அண்ணியைத் தேடுவோம்

**பாடல்**

வாருங்கள் ஏகுவோம் வேகமாய் - நாம்
வந்து விட்டோம் வெகு தூரமே - அப்படி
உச்சி மரங்களில் ஏறுவோம் - நம்ம
ஒன்றின் பின் ஒன்றாகத் தாவுவோம் - அப்படி
அச்சமில்லாமலே லச்சணத்தோடு
இக்கணம் தேவியைத் தேடுவோம்

(வசனம்) ஆஞ்சநேயரே எங்கு பார்த்தாலும் ஒரே
இருளாகத் தெரிகிறது.
பசியும் தாகமும் அதிகமாகிறது....
கண்களும் பஞ்சமடைகிறது நாங்கள் இனி ஒரு
அடி கூட எடுத்து வைக்க முடியாது
"அதோ குகை தெரிகிறது பச்சினங்கள்
பறந்து திரிகின்றன அங்கு சென்றால் ஏதாவது
கனிகள் இருக்கும் வாருங்கள் செல்வோம்"
அப்படியே செல்வோம்

படிப்பகம்

www.padippakam.com



காலு முரட்டுக்காலு ஆனாலும்
காலு நொண்டிக்காலு - நான்
சமுத்திரம் தாண்டுவது எந்த விதம்
யாராவது ஒரு நபர் தாண்டிருங்கள்
அண்ணி இருக்குமிடம் தேடிடுவோம்
எவராகிலும் ஒருவர் தாண்டிருங்கள்
அண்ணி இருக்குமிடம் தேடிடுவோம்

வீரர்கள் நீங்கள் எல்லோரும் அண்ணியைத் தேடிச் செல்ல முடியாது என்று சொல்லி விட்டீர்கள். நானும் முடியாது என்று சொல்லி விட்டால்.....

**பாடல்**

சீதையைக் காணோமென்று - ராமரிடம்
சேதி உரைக்கலாமா
தேடி வருவோமென்று ராமசாமி
தென் முகம் பார்த்திருப்பார்
அன்னையைக் காணோமென்று
ராமரிடம் அன்பாய் உரைக்கலாமா?
அழைத்து வருவோமென்று ராமசாமி
ஆனந்தமாய் இருப்பார் - உங்கள்
கோதையைக் காணோமென்று ராமரிடம்
கூறி உரைக்கலாமா?

முத்துத் தேவர் - 55 வயது, வீரவனூர்,
இராமநாதபுரம் மாவட்டம், 4.3.82.



படிப்பகம்

www.padippakam.com


# கட்ட பொம்மு பாடல்

தன்னை னானன்னே னானானே
தன்னை னானன்னே தானனன்னே
தானன்ன னானானே னனன்னன்னே

கண்ட சொப்பனத்தை சொல்லுறைய்யா - ஒன்ன
கத்திக் கிரையாக வச்சிடவா

சாமி.... இஞ்சிக் கிணறுமே இடியக் கண்டேன் - நாதா
இலுமிச்சந்தோப்புமே அழியக் கண்டேன்

ஆ...... இலுமிச்சந்தோப்புமே அழிஞ்சாலென்ன
இஞ்சித் தோப்புமே அழிஞ்சாலென்ன
பாத்து வருகிறேன் பாதர் வெள்ளை

சாமி..... மங்குக் கிணறுமே இடியக் கண்டேன்
மா துளந் தோப்புமே அழியக் கண்டேன்
மங்குக் கிணறுமே அழிஞ்சாலென்ன
மன்னவர்தோப்புமே அழிஞ்சாலென்ன
பாத்து வருகிறேன் பாதர் வெள்ளை
அடி அன்னக் கிளியே அருங்கிளியே
ஆருயிர் நாயகி வெள்ளையம்மா
அடி வெள்ளச் சேவல எடுத்துவாடி
வீராதி வீரன் நான் சென்று - வாறேன்
அந்தப் போருச் சேவல எடுத்து வாடி
போர் வீரச் சிங்கம் நான் போயிவாறேன்
அடியே நாம் பொறந்தது ராம நாடு
சிங்கம் பொறந்தது வெள்ள நாடு

கண்ணே பாஞ்சால நாட்டுக் கட்ட பொம்மு
வீரத்தில் கொறையுமா இந்த மண்ணு

நையாண்டி மேளக் கலைஞர் செவத்தியான் - 51 வயது,
மானாமதுரை, பசு.மு.மாவட்டம், 4.2.82.

***

படிப்பகம்

www.padippakam.com


"ஏறாத மலை தனிலே - ஒரு
எருது நின்டு தத்தளிக்க
பாராது நிக்கலாமோ - அய்யா
பழனி மலை வேலவரே ..........ஏ.................
எனக்கு முன்னே நில்லு - கொஞ்சம்
எண்ணிப் பாத்துச் சொல்லு (ஏறாத)"*

"முள்ளி மலையில மூணு கொளம் வெட்டினேன்
ரெண்டு கொளம் பொட்டல்
ஒன்னுல தண்ணி சுத்தமாயில்லே (எனக்கு)

தண்ணி மோக்க வந்தவுக கொண்டு வந்தது மூணு பானை
ரெண்டு பானை பச்சை
ஒன்று வேகவே இல்லை (எனக்கு)

வராத விருந்துக்கு வந்த விருந்து மூணு விருந்து
வெஞ்சனம் ஒன்னுமில்லே
சோத்துக்கு உப்புக் கூட இல்லை (எனக்கு)"**

பழனிச்சாமி - 56 வயது, புதுக்கோட்டை,
புதுக்கோட்டை மாவட்டம், 1.1.85.

***

அய்யா!
வெகு நாளைக்கு முன்னாலே நான் வெளியூருக்குப்
போனேங்க - அந்த
விருப்பமுள்ள சிநேகிதன் விரும்பி அழைச்சாங்க - நான்
காரணம் தெரியாமல் கள்ளுக் கடைக்குள்ளே போனேங்க
காக்கிலாகக் கள்ளை வாங்கி கைமேலே தந்தாக

*"ஏறாத மேடு ஏறி, எருது இரண்டும் தத்தளிக்க, வீராண்டரசன் போல, வீராந்து வாராண்டி" (ப.139) "தமிழக நாட்டுப் பாடல்கள்" மா வரதராஜன்.

**தண்ணியில்லா குளத்துக்கு, மண்ணுடையான் மூணுபேரு, ரெண்டுபேரு முடவன், ஒருத்தன் கையே இல்லை, கையில்லாத கொசவன், பண்ணினது மூணு பானை, ரெண்டு பானை பச்சை, ஒண்ணு வேகவே இல்லை"(ப.253) "நாட்டுப்புறப் பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல்" - ஆறு. இராமநாதன்.

படிப்பகம்

www.padippakam.com



கூடாதுன்னு தான் கும்பிடத்தான் செஞ்சேங்க - உடனே
வாங்கி நல்லா பாத்தே வாயில தான் வச்சேங்க - அய்யக்
குடிச்சு நல்லாப் பாத்தேங்க குமட்டி எடுத்தேங்க - அந்தக்

கைலாச எமய மலை என் கண்ணுக்கு முன்னே தோணவே
விறு விறுன்னு தானுங்க வீட்டுக்குத்தான் போனேங்க
வாசப்படி கல்லு நல்லா வலுவலுத்த கல்லு
வழுக்கி விழுந்ததாலே போனது ஒரு பல்லு - எம்

பொண்டாட்டி ஓடி வந்து பொசுக்குனு தூக்க
ஏண்டி புடிச்சு தள்ளுனேய்னு கோபத்திலே பாக்க - அவ
குடுகுடுன்னு ஓடிப்போயி போட்டுக்கிட்டா தாப்பா
அதிலிருந்து இதுவரைக்கும் அறிவித்ததக் கேப்பா
(கைலாச எமயமலை)

சட்டிய வித்தேன் பொட்டிய வித்தேன்
சமச்சுத் திங்கிற சாமான வித்தேன்
நஞ்சைய வித்தேன் புஞ்சைய வித்தேன்
நாலேக்கர் நெலத்த வித்தேன்
கண்ணு மூக்கு தெரியாம கடன் காரன் ஆனேங்க
கை குடுக்க ஆருமில்லே - தட்டுக் கெட்டுப்போனேங்க.

அழகர்சாமி வாத்தியார் - சாலைக்கிராமம், பசு.மு.மாவட்டம், 4.1.80.

***

அடியே - கருவ வேலம் முள்ளுத் தச்சு - நீ
காலு ரெண்டும் நொந்தாலுமே - இந்தப்

பருவமுள்ள பையன் கிட்டே - தங்கம்
பாசாங்கம் செய்யாதடி

"ஊர்க்குருவி வேடங்கொண்டு, உயரப் பறந்தாயானால், செம்பருந்து வேடம் கொண்டு" செந்தூக்காத் தூக்கிடுவேன், இப்பாடல் ஆண்பெண் பேசிக் கொள்வது போலவே இடம் பெற்றுள்ளது. (ப.219) "தமிழக நாட்டுப் பாடல்கள்" - மா. வரதராஜன்

படிப்பகம்

www.padippakam.com



அடியே: அறிவு கெட்டுப் பேசவல்லே - எனக்கு
அனத்தம் வந்து சேந்தாலுமே - அடி நான்
மாமன் மகன் சின்னப்பய - ஒம்
மனக் கவல தீப்பேனடி

அடியே: "ஊர்க்குருவி வேசங் கொண்டு - நீ
ஒசரப் பறந்தாலுமே - நான்
செம்புறந்து ரூபங்கொண்டு - ஒன்ன
செந்தூக்காத் தூக்கிடுவேன்"

அடிநீ : மண்ணோடு மண்ணாகவே - நீ
மறு பொழுதா மறஞ்சாலுமே - நான்
ஆடிக் காத்துத் தூசி போல - ஒன்ன
அடிச்சு ஒதுக்கு வேண்டி

அடிநீ : பள்ளத்தைக் கண்டல்லவா - நீ
பதுங்கி ஒழிஞ்சாலுமே - நான்
சுருளி மல வெள்ளம் போல - ஒன்ன
சுருட்டி இழுத்திடுவேன்

அடிநீ : குதிச் சோடிப் போயல்லவோ - நீ
குளத்தில் ஜலம் ஆனாலுமே - எனக்கு
தாகம் வந்த நேரமெல்லாம் - நான்
தாகத்தைத் தீப்பேனடி (அடியே கருவ வேரம்)

தங்கம் (ஆட்டக் கலைஞர்) - 33 வயது, புலியடிதம்மம், 4.7.83.

***

தன்னனன்னே தான னன்னே
தன்னானே தான னன்னே
தானே னானே தானன் னன்னே
தானானே தான னனே

தட்டானறியாமலே
தாலி ஒன்னு பண்ணிறனும்

படிப்பகம்

www.padippakam.com



தாலி ஒன்று பண்ணித் தந்தா
தாரமுன்னு வந்திடுவேன்

தட்டானறியாமலே
தாலி ஒன்னு பண்ணிடுவேன்
அடுத்த வீடு அறியாமலே
தாலாட்டுப் பாடிடணும்

அடுத்த வீடு அறியாமலே
தாலாட்டுப் பாடிடுவேன்
எழுத்தொன்னுமறியாமலே - நீ
ஏடும் படிச்சிடணும்

எழுத்தொன்னுமறியாமலே
ஏடும் படிச்சிடுவேன்
புருசனறியாமலே
புள்ள ஒன்னு தந்திடணும்

புருசனறியாமலே
புள்ள ஒன்னு பெத்திடுவேன்
குயவனறியாமலே - நீ
குண்டுச் சட்டி தந்திடணும்

குயவனறியாமலே
குண்டுச் சட்டி தந்திடுவேன்
அடுப்பு அறியாமலே
பருப்புச் சோறு தந்திடணும்

அடுப்பு எரியாமலே
பருப்புச் சோறு ஆக்கிடுவேன்
ஆவி பிரியாமலே
அந்த லோகம் சேந்திடணும்

கற்பகவள்ளி - 22 வயது, கீரனூர்,
கொல்லங்குடி, பசு.மு.மாவட்டம், 14.11.82.
(துவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் நாடகக் கலைஞர். ஸ்திரிபார்ட்)

படிப்பகம்

www.padippakam.com



# தெம்மாங்குப் பாடல்

ரோட்டோரம் வீட்டுக்காரி
ரோசாப்பூச் சேலக்காரி
நிக்கட்டுமா போகட்டுமா
மொறச்சு நிக்கும்
மொறப் பொண்ணே
தொட்டாக்காப் பட்டுக்கிறுமா
நான் - ஒன்னக் கொஞ்சம்
தொட்டாக்காப்பட்டுக்கிறுமா - அடி கண்ணே
ஒன்னத் தொட்டாக் காப்பட்டுக்கிறுமா

அடியே!

தெக்குத் தெருவிலே
தேரோடும் வீதியிலே
தேங்காய் கொல அறிஞ்சு
வாறாளாம் கண்ணுத் தான்னு
ஊரு சனங்கள்ளாம் அங்கே நிக்குதாம்
அதுக்குள்ளே கொஞ்சம்
பேசுனக்காப் பட்டுக்கிறுமா

மாரி

முத்துக் கொடை பிடிச்சு
மொளகுச் சம்பா நாத்துப் பாவி
பச்சைக் கொடை பிடிச்சு
பதம் பாக்க வாருளுன்னு
பத்து ஊரும் அங்கே நிக்குதாம்
கை கோத்து நாமும்
போனுக்கா தப்பாப் போகுமா

படிப்பகம்

www.padippakam.com



வேதனைய ஒப்பு வச்சார்
வேம்புக் கொலை அடிச்சார் - நம்ம
மாரந்தைக் கிராமத்திலே
மாரியாத்தா வாறாளுன்னு
மண்டியிட்டு சனங்க நிக்குதாம்
மனசு விட்டுப்
பேசினாக்கா கொறஞ்சு போகுமா

கே. முத்து - சாத்தமங்கலம், அண்ணாநகர்,
மதுரை மாவட்டம் 30.2.83.

***

தோப்புக்குள்ளே ரெண்டு கிளினானே
வித விதமாப் பாடிடாதோ னானே (தன்)

கள்ளி வெளஞ்சிராதோ னானே
கள்ளி நெலை சாஞ்சிராதோ னானே (தன்)

கள்ளுக் குள்ளே ரெண்டு கிளினானே
காரணமாப் பாடிடாதோ னானே (தன்)

வாசலிலே பாயப் போட்டு னானே
வா மயிலே தூங்கப் போட்டு னானே (தன்)

வா மயிலே ஒம் மயக்கம் னானே
வாச எங்கும் பூ மயக்கம் னானே (தன்)

வானத் துக்கு மீனழகு னானே
மழைக்குக் கூட பயிரழகு னானே (தன்)

ஆத்துக்குள்ளே அஞ்சரளி னானே
அத்த மயன், வச்சரளி னானே (தன்)

சாலையிலே சரியுது பார் னானே
சாமி மேலே பூவுதிர னானே (தன்)

பூவெடுத்துப் பூசை செய்யும் னானே
புதுமையுள்ள நம்ம மாரி னானே (தன்)

மல்லிகா - 19 வயது, திட்டுக்கோட்டை,
பசு.மு.மாவட்டம், 12.12.84.

படிப்பகம்

www.padippakam.com



# தொழிற்களப் பாடல்களில் காதல்

காசுக்கில்லே பணத்துக்கில்லே
கண்ட போட்ட துண்டுக்கில்லே - ஒங்க
அருமைக் கொணத்துக்கில்லோ
ஆசை கொண்டேன் உங்க மேலே

மச்சான் அழகுக்கில்லோ
மான் கொம்பு மீசைக் கில்லோ - ஒங்க
ஆடும் புருவத்துக்கே
ஆசை கொண்டேன் ஒங்க மேலே

வேப்பிலை மூக்கழகா
வெள்ளிக் குச்சிப் பல்லழகா
கோயில் செலையழகா
கொல்லுதைய்யா ஒம் மயக்கம்

பருத்தி வெடியாதோ
பயறு வந்து விக்காதோ
அத்த் மகன் ரெத்ன கிரி
அவலு வாங்கி வருவாரோ

சாயச் சருகச் சேலை
சாத்தாங்குளம் கம்பிச் சேலை
ஊதாக் கருப்புச் சேலை
உக்காரடி பக்கத்திலே

கூடாரக் கொண்டை போட்டு
கோயிலுக்குப் போனவளே

படிப்பகம்

www.padippakam.com



ஆத்தாடி இந்தக் கொண்டை
ஆரைக் குடிகெடுக்க

முக்காடைப் போட்டவளே
முக்காத்துட்டுப் கேட்டவளே
நாக்குச் செவந்த புள்ளே
நாந்தாண்டி ஒம்புருசன்

கண்டாங்கிச் சேலை கட்டி
கைப்புடியாப் போனவளே
கணவனத் தான் விட்டு விட்டு
கால் மாறிப் போனவளே

சுத்திச் சுத்திச் சூறாவளி
சேல மத்தியில் வெட்ட வெளி
மானம் பாத்த சேலை
எந்தக் கடையிலே வாங்கினம்மா.

பாப்பா - 32 வயது, அரியலூர்,
திருச்சி மாவட்டம், 11.9.82.

***

வடபழஞ்சி ரோட்டுல தான் - நீயும்
ஒத்தையிலே தான் போற தங்கம்
நில்லுக் கொஞ்சம் நானும் வாறேன் - இப்பச்
சேந்து பேசிப் போவோமடி

ஒன்னைய நான் தொட்டதற்கு - புள்ளே
ணொன்னே சாட்சி சொன்னதற்கு
வட பழஞ்சி மந்தையிலே - நானும்
மாடாய் ஒழைக்குறேண்டி

வட்ட வட்டக் கொண்டக் காரி - நல்ல
வளவுக் கொண்ட நெளுவுக்காரி
கண்ட கண்ட நேரமெல்லாம் - ஒன்ன
கட்டிப் புடிக்கத் தோணுதடி.

படிப்பகம்

www.padippakam.com



ஊதா நல்லக் கருப்புச் சேல
உள்பாடி மல் ரவுக்கை
தோகை நல்லா மயிரொணத்தி
தொயந்து வாடி ஓடிப் போவோம்

அஞ்சு ருவா ரவுக்கை வாங்கி
அருப்புக் கோட்டை சாயங்காச்சி - நீ
எட்டி எட்டிப் பாத்தாலுமே
எரவுப் புருசன் நான் தானடி

சீட்டுக் கட்டு வேணுங்கிறா
சினிமாப் பாக்க போகணுங்கிறா
சினிமாப் பாக்க வந்தவுடன்
செவத்தப் புருசன் வேணுங்கிறா

காட்டுக் குள்ளே கவட்ட மரம்
கை கலந்தது மாசி மாதம்
பொரட்டாசி மாத்தையிலே - இவளுக்கு
பொறக்கப் போறது பொம்பளப் புள்ளே

சந்தானம் (கோமாளி) - வடபழஞ்சி, 16.1.84.

எரவப் புருசன் - ஓசிப் புருசன், தோத கத்தி - பாதகத்தி

படிப்பகம்

www.padippakam.com



# தெம்மாங்கு

ஒங்க முட்டிக்கும் முட்டிக்கும் சண்டை - ஒங்க
முழங்காலக் கட்டி - நான்
போடப் போறேன் சண்டை
பொருதப் போறேன் ரெளண்டு
தந்தானுங்கிற தனுக் கப்பாருங்க - சாமி துரையாலே
தனுக்குக் கேத்த குனுக்கப் பாருங்க

வந்தேன் வந்தேன் வந்தேன் வந்தேன் வரதவராரு

சீமான் கவனத்திலே கோடி
மெட்ராசு கவிகளத் தேடி
தென்னம ரத்தடியில் கண்டால்
இருட்டுக் கஞ்சாது போலீசு
வறட்டுக் கஞ்சாது
பட்டணத்திலேயும் நானும் போயி
பகக் கொள்ளையடிப்பேன்
போலீச எட்டி எட்டி ஒதப்பேன் - வக்கீல
டர்ரு டர்ருனு ஒதப்பேன்
சிங்கப்பூரு செயிலிலே - என்
சித்தப்பன் வீடு - அய்யய்யோ
சித்தப்பன் வீடு
கோலாலம்பூரு செயிலிலே - என்
கொளுந்தியா வீடு - அய்யய்யோ
கொளுந்தியா வீடு
பட்டணத்து டவுனிலே - என்
பாட்டியா வீடு - அய்யய்யோ
பாட்டியா வீடு

படிப்பகம்

www.padippakam.com



மதுரை டவுனிலே - என்
மாமியா வீடு - அய்யய்யோ
மாமியா வீடு

நான் கட்டிருக்கும் சாயச் சேலை
கம்சோட ரெண்டெடுத்தேன்யா
பெண்டாட்டிக்கும் பிள்ளைகொரு
துண்டெடுத்தேன்யா
ஆளு மாத்தக் கடன் காரன்
நேரிலே வந்தான்
ஆத்தடா அப்படா
நேத்திலே வந்தேன் - முந்தா
நேத்திலே வந்தேன்
திண்டு முண்டுங் காரப்பய
கெடுத்திலே விட்டான்.

செல்லம்மாள் - 33 வயது, கொல்லங்குடி,
கீரனூர், பசு.மு. மாவட்டம், 3.11.82.

***

ரத்தினப் பொண்ணே
ரத்தினப் பொண்ணே

வெத்தல வாங்கின முத்துச் சாமிகள
வேடிக்கை பாக்கலையோ - ஆயாலோ
வேடிக்கை பாக்கலையோ

கமலப் பொண்ணே கமலப் பொண்ணே
கடைக்குப் போகாதே
கடையிலுள்ள பயகளெல்லாம்
கண்ணடிப்பாண்டி

நேத்து வச்ச சந்தனப் பொட்டு
நெத்திக்கு நல்லால்லே - இந்தக்
குருவி கொத்தின கொய்யாப் பழம்

படிப்பகம்

www.padippakam.com


கொண்டைக்கு நல்லால்லே
வேப்ப மரத்திலே கைத் தண்டி கொப்பு அங்கே அழகம்மா

வெள்ளாட்டுப் பையனுக்கு அழகம்மா
வெட்டிப் போட நானிருந்தேன் அழகம்மா

கருவ மரநிழலிலே கைத்தண்டிக் கொப்பு அங்கே அழகம்மா
வெள்ளாட்டுப் பையனுக்கு அழகம்மா - நான்
வெட்டிப் போட நானிருந்தேன் அழகம்மா.

ராக்கி - 38 வயது, தெற்கு மாரந்தை, 13.11.83.

# தெம்மாங்கு

ரோடுன்னா ரோடு - இது
காசி பசார் ரோடு
ரோட்டு மேலே ஊத்திருக்கும்
முனிசிபாலிட்டி தாரு
தாரு மேலே நாலு சக்கரக் காரு

அடியே!
மதி கலஞ்சவளே
மண்ணாப் போனவளே
அத்துக் கிட்ட்'புடி
தொத்துக் கிட்டே
என்னையும் நீயும் பாத்துக்கிட்டே

அடியே!
டப்பா குலுக்கி மினுக்கிப்ப கட்டு
காயாத வாளை வருவாளை
கண்டிக்கும் போகும் வழி மேலே
ஈனாத வாளை இது எலங்கைக்கு வழி மேலே

அடியே!
தரி கிடப் பிடி தய்யத்தா
கொஞ்சம் கண்ணாம்பு நோண்டித்தா

படிப்பகம்

www.padippakam.com



காருக்குள்ளே ஆயா
ஆயா கையிலே புள்ளே
புள்ள கையிலே பழம்
பழத்துக் கையிலே ஈ
ஈய ஓட்டுறக் கையப் பாருங்கோ
சாமி துரைகளே!
இடுப்பச் சுத்திப் பையப்,பாருங்கோ!

மல்லிகா (ஆட்டக் கலைஞர்) -
கீழவாசல், தஞ்சாவூர், 11.2.80.

***

அடி ஒய்யாரக் கொண்டை போட்டு
ஊருக்குத் தான் போற புள்ளே
அத்தை மக ரத்தினமே
ஆதரவு சொல்லிப் போயேன்

அடி மல்லியப் பூச் சரமே
மனசுக் கேத்த மரிக் கொழுந்தே
பிஞ்சு மனக் கிளியே
மனசிருந்தால் போதுமடி

அடி அத்திப்பூ வாசனையே
அள்ளிப் பூசும் சந்தனமே
பன்னீரு வாசனையே
பாக்குறதும் எந்த விதம்

அடி இலுமிச்சங் கனியழகே
இடது கையித் தேங்கரும்பே
இருந்து நான் பேசிடத்தான்
என்ன வெல நீ கேக்கிறீயோ

அடி குளிச்சுத் தலை மொழுகி
கோயிலுக்குப் போன தங்கம்

படிப்பகம்

www.padippakam.com



கோயிலு வாசலிலே
குளுந்த வாத்தை சொல்வலையே

அடி ஊருக்கு ஒரு கிணறாம்
ஒருத்தி மக செவத்தவளாம்
செவத்தப் புள்ளே கூட நானும்
சேருவதும் எந்த விதம்

அடி அரும்பு மரிக் கொழுந்தே
ஆசைப் புள்ளே தேன் மொழியே
பிச்சிப் பூ வாசனையே
பிரிய மனம் கூடலியே

பாண்டியம்மாள் - 32 வயது, உறுதிக்கோட்டை, 11.6.82.

***

அப்டி நெஞ்சு பதிக்கம் போட்டு
நெய்த வேட்டி கொய்துடுத்தி

அவரு வாறாராம் சாவடிக்கு
வாசமுள்ள பூபதியே

அப்டி வட்டுக் கருப்பட்டியாம்
வாசமுள்ள திரவியமாம்
ஒங்களுக்கு தூத்துக் குடி சந்தையிலே
துட்டுக் கொரு பொண்டாட்டியாம்

அப்டி கன்னங் கரு மணியே
கஸ்தூரி வாசனையே

ஏன் அரும்பு வைத்த தட்டே
ஆர வச்சுக் கூப்பிடட்டும்

அப்டி முத்து வயிரக் கல்லாம்
முகந்தெரியக் கண்ணாடியாம்

அடி ஆரை விட்டுக் கூப்பிடட்டும்

படிப்பகம்

www.padippakam.com



அடி அஞ்சு மாடிக் கட்டிடமாம்
பஞ்சு மெத்தெ பகட்டுகளாம் - அந்தப்
பஞ்சு மெத்தைப் படுக்கையிலே
தங்குறதும் எந்த விதம்

அடி வாழைக் கனி கரும்பே
வலது கையித் தேங்கரும்பே
ஏலம் கிராம்பு நீயே
என்ன சொல்லிக் கூப்பிடட்டும்

அடி கூட்டத்திலே நிக்கும் தங்கம்
கோயிலுக்கு வாச்ச தங்கம்
சத்தம் போட்டுக் கூப்பிடணும்
தவமணியே நின்னு போயேன்

அப்டி அஞ்சு ருவாப் புத்தகமாம்
அவர் படிக்கும் நாடகமாம்

அவர் என்ன சொல்லி தவிக்கிறாரோ
எனக்கு வாய்க்கும் மன்னவரு

அப்டி அயித்தே மயன் ராசா நீயே
ஆரும் விரும்பும் தேங்கனியே

ஏந்த தித்திப்பூ வாசனையே
போக மனம் கூடலியே

அப்டி ஆத்திலே ரெண்டு மரம்
அன்னக் கிளி பாடும் மரம்

நம்ம சேந்து இருந்த மரம்
தீப்புடிச்சு வேகுதய்யா

அன்னபுஸ்பம் - துகவூர், பசு.மு.மாவட்டம்,
சிவகங்கை மாவட்டம் - 2.4.80.

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

***



படிப்பகம்

www.padippakam.com



தன தன்னன....

அய்யா பந்து ஜனமுள்ள பந்தலிலே என்னை
பரிச மிட்ட மாதம்
பாட்டுப் படிக்கும் வெகு தீரம்
கேட்டுப் பணிந்து கொண்டேன் சோரா
இந்தப் பாண்டிய நாடெங்கும் மதுரை என்பது
பார்க்க வேணும் நேரம் - தன தன்னன

அடி திருவனந்தபுரம் மெயிலு வருகுது
டிக்கெட்டெடு மயிலே
திருமங்கலம் ஸ்டேசனைப் பார் குயிலே
தெரியுது பார் திருப்பரங்குன் று மலை
நம்ம செந்தில் முருகையன் கோயில் இருக்குது
சென் று வருவோம் பிள்ளை - தன தன்னன

மாமா சந்தனம் குங்குமம் தேங்காய் பழங்களை
தட்டிலெடுத்து வச்சு
சரவண பொய்கையிலே குளிச்சு
முருகன் சன்னதியில் குளிச்சு
நாமோ சலிதியாகவே மதுரை போகணும்
சர்க்காரு வண்டி புடிச்சு - தன தன்னன

அடி சேதியைக் கேளடி வீதி ஓரத்திலே
தெரியிறதைப் பாரு
அஞ்சா நம்பர் டிவி எஸ் காரு
ஓடி வந்து சீக்கிரமா ஏறு
கொஞ்சம் மெல்ல நடந்து வா தில்லை முளையிது
மீனாட்சி டாக்கீசு - தன தன்னன

கொல்லங்குடி கருப்பாயி அம்மாள் - 4.1.81.
சிவகங்கை மாவட்டம்.

***

படிப்பகம்

www.padippakam.com



ஆண் : வட்ட மிட்டால் கொக்கரிக்கும்
வலையைக் கண்டால் கத்தரிக்கும்
வெட்டுப்பள்ள ஆத்துக் குள்ளே
வீச்சு வலைக் கண்ணி வச்சேன்
விபரம் ஒனக்குப் படலே - ஒன்னைய
விடியும் வரைக்கும் விடலே

பெண்: வெட்டுப்பள்ள ஆத்துக்குள்ளே
வீச்சு வலைக் கண்ணி வச்சா - நான்
வட்டச் சுளிக் கெண்டை போல
வலைய விட்டு ஒதுங்கிடுவேன்
வாக்கப்பட்டது உண்டா - அட
வழக்கிருந்தா கொண்டா

ஆண் : தொட்டாச் சிணுங்கி போல
துளைத்து முளைச்சிட்டாலும் - நான்
கட்டாயம் தொட்டுப் பாத்து
கண்டு பிடிப்பேனடி
காண மதுரைச் சில்வா - மோட்டார்
காரு ஏறடிபுள்ளே

பெண்: கட்டாயம் தொட்டுப் பாத்து
கண்டு பிடிச்சிட்டாலும் - நான்
பட்டாணி வீட்டுக்குள்ளே
பதுங்கி ஒதுங்கிடுவேன் - அட
படபடத்த பயலே - வண்டி
புறப்படுது மெயிலே

ஆண் : பட்டாணி வீட்டுக்குள்ளே
பதுங்கி ஒதுங்கிட்டாலும் - நான்
மொட்டக் கோபுரத்து மேலிருந்து
முனியாண்டி ரூபங் கொள்வேன்
முடியப் புடிச்சு இழுப்பேன் - மூனு
வருசங் கொண்டு விடுவேன்

பழனிச்சாமி (ஆட்டக் கலைஞர்) புதுக்கோட்டை,
புதுக்கோட்டை, மாவட்டம் - 10.2.87.

***

படிப்பகம்

www.padippakam.com



மங்களத் தேவரவர்
மகுடம் கொண்ட அங்குச்சாமி
கும்பினியார் தேசத்திலே
குத்தினாண்டி முத்துக்குறி
கன்னி குளக் கேசு - நான்
சொன்னேன் ஆறு காசு

கே. தெய்வசிகாமணி - 60 வயது,
சேத்தூர் மாரந்தை, பசு.மு.மாவட்டம், 13.2.84.

பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் தற்போது சிவகங்கை மாவட்டம் என்றாகியுள்ளது. பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் என்று உருவாவதற்கு முன்னர் இராமநாதபுரம் மாவட்டம் என்றே இருந்து.

படிப்பகம்

www.padippakam.com



# காதல் பாடல்கள்

படிப்பகம்

www.padippakam.com



கொண்டையும் சரிசரியா - மனமே
மனமெல்லாம் சொடராஜா
வாவளையாண்டான் பொண்டே (பொண்டுக - பெண்)
தூண்டி விழுந்தான் பாறையிலே
கொண்டையும் சரிசரியா - மனமே
மனமெல்லாம் சொடராஜா
கொண்டையும் சரிசரியா - மனமே
மச்சான் குண்டி மினு மினுங்க

லே லே லே லேலே லே....
லே லே லே லேலே லே....

குப்பம்மாள் (மலசர்) - 65 வயது,
அமராவதி மலை, வாய்க்கால் மேடு

***

பச்ச மலை யிலே வெளஞ்ச முத்து
பாசி பவளம் ஆன முத்து
ஏறெடுத்துப் பாத்தாக்கா
எனக்கேத்த சொந்தமுத்து

கல்லு வெள்ளி மோதிரமே
காந்தக் கல்லு சந்திரனே
உருலோசு சங்கிலியே
உன்னாலே சீக்கிருந்தேன்

கோளிக்கரை மலைச் சந்தனமே - அடியே
மதுரக்கரை ஆத்து மாம்பழமே
மல்லன் மாமன் வந்திருக்க
மனசுச் சம்மதம் சொல்வேண்டி

மல்லன் - கோளிக்கரை, கோத்தகிரி.

***

படிப்பகம்

www.padippakam.com



வெள்ள வெள்ள வேட்டிக்காரரே
வெள்ளரிக்காக் கூடக்காரரே
கோம்பக் காட்டு வெள்ளரிக்கா
கொண்டு வாங்க தின்னுபாப்போம்.

சால கடந்து வாங்க
சந்த மடம் தாண்டி வாங்க
ஓட கடந்து வாங்க
ஓடிப் போவோம் கண்டி தேசம்

சட்டி மேலே சட்டி வச்சு
சாஞ்சலஞ்சு போறவரே
சட்டி இறக்கி வச்சு
தண்ணி தந்தா ஆகாதா

வாய்க்கால்ல தண்ணிவரும்
வண்டுவரும் தும்பிவரும்
கூடத்துக்கு வாங்க மச்சான்
குளுந்ததண்ணி நாந்தாறேன்

கூட்டமும் தெரியாதடி
குளுந்த ஓடை தெரியாதடி
மார்க்கெட்டு கடையோரம்

பவளக்கடை வீதியோரம்
தென்னம்புள்ள அடையாளம்
அங்க வந்து சேருமச்சான்

சாந்தி - 20 வயது, கீழ்க்குறுமலை,
(திருமூர்த்தி மலை) - 20-10-88

***

தெக்கே தெக்கே தென்ன மரம்
அதுக்குத் தெக்கே குன்னி மரம்
குன்னிப் பழம் பறிக்கப் போயி - எங்
கண்ணு ரெண்டும் செவந்தது மச்சான்

படிப்பகம்

www.padippakam.com



ஈற ஈறாச் சல்லடமாம் (கைத்துண்டு)
இருபத்திநாலு சல்லடமாம்
சுத்துக்குப் பத்தலேன்னு
சுண்டுது மச்சான் கைமருந்து

சின்னு - 28 வயது, ஜல்லிமுத்பாறை,
திருமூர்த்தி மலை, 22.10.88

***

சொல்லி நல்ல னானனே
அடிச்சருவா னானனே
சுலட்டுதம்மா நெல் கதிரை தன்னே னானே னானே
அறந்தாங்கியாம் னானனே
பட்டணமாம் னானனே
அதுக்குத் தெக்கே வைரி வயல் தன்னே னானே னானே
வைரி வயல் னானனே
ரோட்டுலத்தான் னானனே
வச்சிடுங்க பந்தயங்க தன்னே னானே னானே
நகர நல்ல னானனே
திருவிழாவாம் னானனே
நாதசுரம் வேடிக்கையாம் தன்னே னானே னானே
நாதசுரம் னானனே
பாக்கப் போனா னானனே
நடை பழக இன்னும் காண தன்னே னானே னானே
சாலையோரம் னானனே
கிணறு வெட்டி னானனே
சாஞ்ச மரம் ஏத்துப் போட்டு தன்னே னானே னானே
சாலையிலே னானனே
போற பொண்ணு னானனே
சாயச் சேலக்காரி வேணும் தன்னே னானே னானே
வீதியிலே னானனே
கிணறு வெட்டி னானனே
வெள்ள மரம் ஏத்துப் போட்டு தன்னே னானே னானே

படிப்பகம்

www.padippakam.com



ஏத்தெரைக்கும் செவத்தப் பய னானனே
எந்தப் பய தேவை ஒனக்கு னானனே
வெள்ளச் சீல பொண்ணு வேணும் தன்னே னானே னானே
கடலக் கொள்ள னானனே
ஓரத்திலே னானனே
காடப் புறா ரெண்டு தன்னே னானே னானே
காடப்புறா னானனே
கலஞ்சொடனே னானனே
கலங்குதம்மா எம்மனசு தன்னே னானே னானே.

பொன்னாத்தாள் - 45 வயது, அறந்தாங்கி,
புதுக்கோட்டை மாவட்டம், 3.2.81.

***

சோலக் கொள்ள னானனே
ஓரத்திலே னானனே
சோடிப்புறா ரெண்டு நிக்கு தன்னேனானே னானே

சோடிப் புறா னானனே
கலஞ்சொடனே னானனே
சோருதம்மா எம்மனசு தன்னே னானே னானே

அருகருகா னானனே
கடுக்கானிட்டு னானனே
ஆன மேலே போற பையா தன்னே னானே னானே

அன்னாந்து னானனே
பாக்காதைய்யர் னானனே
அறஞ்சுடுவேன் தன்னே னானே னானே

கொத்துக் கொத்தா னானனே
கடுக்கானிட்டு னானனே
குதிரை மேலே போற பையா தன்னே னானே னானே

குருகுருன்னு - னானனே
பாக்காதைய்யா
குடுத்துடுவேன் கன்னத்திலே தன்னே னானே னானே

படிப்பகம்

www.padippakam.com



மல்லியதான்
முள்ளரும்பு
மலராத காயரும்பாம்
மலந்து நல்ல
மணக்குதம்மா
மகா நாட்டுக் கூட்டத்திலே

செம்புக தான்
முள்ளரும்பாம்
மலராத காயரும்பாம்
பக்கத்திலே
படரும் மல்லி
பண்பான புதுக்கோட்டை
மஞ்ச நல்ல
குதிரை கட்டி
மக்களோட பாரதமாம்

சின்னச் சின்ன
சீசாவிலே
சேத்து வச்சேன் சினிமாப் பொட்டு தன்னே னானே னானே
சேந்துச் சொதான்
சேரலையோ
சின்னப் பூவாம் நெத்தியிலே

வண்ண வண்ண
சீசாவிலே
வாங்கிவச்சேன் சினிமாப்பொட்டு
வச்சேனோ தான்
வைக்கலையோ
வண்ணமுக நெத்தியிலே
பொன்னருவா
என்னருவா
குடுக்கு மணிக் கருக்கருவா

பஞ்சவர்ணம் - 22 வயது,
குலமங்கலம் வடக்கு, புதுக்கோட்டை மாவட்டம், 1.2.84.

***

படிப்பகம்

www.padippakam.com



ஆத்து நல்லா அலங்காரந்தான் வள்ளி வலதுபுறம் ராசா
நாத்து முடி அலங்காரந்தான் இருந்தாள் தெய்வானை
பொன்னரசாம் பூவரசாம் வள்ளி வலதுபுறம் ராசா
குதிரை கட்டும் பூவரசாம் இருந்தாள் தெய்வானை
வாடி புள்ளே வடக்கே போவோம் வள்ளி வலது புறம் ராசா
வா முனியா கோயிலுக்கே இருந்தாள் தெய்வானை
வாழைப்பழம் வாங்கி வந்தா வள்ளி வலது புறம் ராசா
வருந்தி நல்லாக் கையெடுப்போம் இருந்தாள் தெய்வானை
வாடி புள்ளே தெக்கே போவோம் வள்ளி வலதுபுறம் ராசா
தேமுனியா கோயிலுக்கு இருந்தாள் தெய்வானை
தேங்கா பழம் வாங்கி வச்சு வள்ளி வலதுபுறம் ராசா
தெய்வமுன்னு கையெடுப்போம் இருந்தாள் தெய்வானை
காடைக்குத் தான் கண்ணி வச்சேன் வள்ளி வலதுபுறம் ராசா
காட்டோரம் குத்தி வச்சேன் இருந்தாள் தெய்வானை
காடை படும் கண்ணியிலே வள்ளி வலது புறம் ராசா
கருத்த மச்சான் பட்டியல்லோ இருந்தாள் தெய்வானை
கொக்குக்குத்தான் கண்ணி வச்சேன் வள்ளி வலதுபுறம் ராசா
கொளத்தோரம் குத்தி வச்சேன் இருந்தாள் தெய்வானை
கொக்கு படும் கண்ணியிலே வள்ளி வலதுபுறம் ராசா
கூன மச்சான் பட்டியல்லோ இருந்தாள் தெய்வானை

வெள்ளக்கல் சுண்ணாம்பு வள்ளி வலதுபுறம் ராசா
வெந்தது போலவே இருந்தாள் தெய்வானை
வேதனை நான் படும் பாடு - அம்மா வலது புறம் ராசா
வேடிக்கை செய்யாதே இப்போ இருந்தாள் தெய்வானை
வெறுப்பாயிருக்குது மனசிலே வள்ளி வலதுபுறம் ராசா
உள்ளதை வெளியே சொன்னா இருந்தாள் தெய்வானை
வெக்கக் கேடடி வள்ளி வலதுபுறம் ராசா

அடி! சீமைக் கிளியே இருந்தாள் தெய்வானை
சிரிக்கும் பதுமையே வள்ளி வலதுபுறம் ராசா
செங்கரும்பே மரிக்கொழுந்தே இருந்தாள் தெய்வானை

படிப்பகம்

www.padippakam.com



என்னை மணம் செஞ்சதிலே - சிந்தை வலதுபுறம் ராசா
நோகிறேன் நினைந்து - இப்போ இருந்தாள் தெய்வானை
செத்துப் பிழைத்தாலும் வள்ளி வலதுபுறம் ராசா
பேர் சொல்லக் கூட இருந்தாள் தெய்வானை
செனிக்கலையே - ஒரு குழந்தை வள்ளி வலது புறம்

சுளி - 19 வயது, தொண்டி,
இராமநாதபுரம் மாவட்டம், 7.11.86.

***

கேப்பக் கருது போல யம்மா யம்மா - அங்கே
கேட்ட பொண்ணு நானிருக்க - யம்மா அங்கே
கேடு கெட்ட அத்தை மயன் அம்மா - அங்கே
கௌவியத்தான் மாலையிட்டான்

குருதாலி கருது போல யம்மா யம்மா - அங்கே
குறிச்சு வச்ச பொண்ணு நானிருக்க

காக்கைக்குத் தான் மூக்கறுத்து
கருங்குயில வாலறுத்து
உச்சியிலே பந்தப் போட்டு எந்தன் மாதாவே - அங்கே
ஒரு மணிக்குத் தாலி கட்டி சொந்த மாதாவே
ஏ! பயத்த நல்லா வகுத்துக் கிட்டு - என்ன
பக்குவமா திங்கிராக எந்தன் மாதாவே
என்ன சொல்லி கேட்க போறா சொந்தமாதாவே
எகத்தாலம்மா பேசுறாக சொந்த மாதாவே
உளுந்து நல்ல வறுத்துக் கிட்டு
உன்னதம்மா திங்கிறாடா
என்ன சொல்லி கேட்க போறா எந்தன் மாதாவே
ஏகாளம்மா பேசுறாடா சொந்த மாதாவே!

---

சியாமளா, பத்மா சுப்பிரமணியன் குழுவினர் பாடி வெளியிட்டுள்ள இசைத்தட்டில் இடம்பெற்றுள்ள நாட்டுப்புறப்பாடல்களில் ஒன்றில் வள்ளி வலது புறம் ராசா இருந்தாள் தெய்வானை என்ற இரு அடிகள் தொடர்ந்து இடம் பெற்றுள்ளதைக் கவனிக்கலாம்.

படிப்பகம்

www.padippakam.com



தங்கத் தங்கத் தாம்பூலம்மா
கம்பியில்லா மண்டகமாம்
தம்பியில்லா மண்டகத்தை
தங்கா என்ன குத்தம் செய்தேன்

பொண்ணும் பொண்ணும் தாம்பூலமாம்
பிள்ளையில்லா மண்டகமாம்
பிள்ளையில்லா மண்டகத்தில்
பொண்ணு என்ன குத்தம் செய்தேன்

ஆலஞ்சருகருச்சி ஆக்கி வச்சேன் சாதங்கறி
ஆக்கி வச்ச சாதத்திலே அல்லி என்ன குத்தம் செய்தேன்
புங்கஞ் சருகருச்சி பொங்கி வச்சேன் சாதங்கறி
பொங்கி வச்ச சாதத்திலே பொன்னா என்ன குத்தம் செய்தேன்.

வள்ளி - 33 வயது, சிங்கம்புனரி,
பசு.மு.மாவட்டம். 11.2.82.

***

சீத்திக் கதம்ப மடி
பக்கத்திலே சாம்பக் குளம்

மோட்டாரு ஏறும் வண்டி
மொடக்குச் சாலை ஆல மரம்
ஆல மரத்தைப் பாரு
அய்யாச் சாமி வீட்டப் பாரு
புளிய மரத்தப் பாரு
பொண்ணிருக்கும் சைசப்பாரு
ஆழக் கிணறு வெட்டி
ஆரவய்யா சோளம் போட்டு
நீ குளிக்கும் பொய்கையிலே
நீண்டு தவம் செய்வேனடி

படிப்பகம்

www.padippakam.com



ஈசல் இறகு போல
இரு புறமும் கண்டாங்கி தான்
கல்லுல அடியாமலே
கசக்கி நல்லாத் தந்திடணும்
கல்லுல அடியாமலும்
கசக்கி நானும் தந்தனுனா
நோத்தாளறியாமலே
வாக்கப்பட்டு வந்திடணும்

ஆசிர்வாதம் (ஆட்டக் கலைஞர்)
- 60 வயது, ரசூலா சமுத்திரம், இளையான்குடி, 1.3.83.

***

கூடுகு உருண்டு வர - எம்மா
கனத்த மலை பேஞ்சு வர - நான் கடுகப் பொறுக்குவேனா
அரும்பு மரிக் கொழுந்தே - கனத்த மலையத் தாங்குவேனோ
ஆசை புள்ளே தேன் மொழியே - அடி
அத்திப்பூ வாசனையே - நான்
அள்ளிப்பூசும் சந்தனமே

ஆத்திலே ரெண்டு மரம் - அந்த
அன்னக்கிளி பாடும் மரம் - அங்கே
சேந்து இருந்த மரம் - இப்ப
தீப்புடிச்சு வேகுதடி

கன்னங் கருமணியே - அடி
கஸ்தூரி வாசனையே
ஏலந்திரவியமே - நான்
எங்கே போயி தேடுவேனோ

தீத்தக் கரை ஓரத்திலே - அடி
திருநாள் பாக்கும் தெய்வான
நேத்திக் கடன் வச்சிருந்தும் - நீ
நெடும் பயணம் போனதென்ன

படிப்பகம்

www.padippakam.com



சங்கு முளி நாளையிலே
சமைத் தெடுத்த பைங்கிளியே
போட்டா செவக்குதில்லே
பொன் மயிலே ஒம்மயக்கம்

புள்ள ரவுக்கக் காரி
புட்டாப் போட்ட சேலக்காரி - ஒஞ்
சேலை நயமடியோ
சேத்து வச்சு பார்ப்பதெப்போ

**கலைச்செல்வி** (கரக ஆட்டக்கலைஞர்),
கடம்பாகுடி, இராமநாதபுரம் மாவட்டம் - 11.3.85.

***

படிப்பகம்

www.padippakam.com



# ஆறு பேர் கூடிப் பாடுதல்

நேத்து வச்ச சந்தனப் பொட்டு
நெத்திக்கு நல்லா இல்லே - இந்தக்
குருவி கொத்துன கொய்யாப் பழம்
கொண்டைக்கு நல்லாயில்லே

தங்கத் தங்க தாம்பூலமாம்
தங்கை எங்கே போனா
தங்கையில்லா மண்டபத்தில்
தாயார் எங்கே போனா

ஆலங்சருகரிசி
ஆக்கி வச்சேன் சாதம் - இப்ப
ஆக்கி வச்ச சாதத்திலே
அல்லி குத்தம் என்ன

புளுங்கரிசிக் கலஞ்சு இப்ப
பொங்கி வச்சேன் சாதம் - இப்ப
பொங்கி வச்ச சாதத்திலே
பொன்னா குத்தம் என்ன

பொன்னும் பொன்னும் தாம்பலமாம்
பொன்னா எங்கே போனா
பொன்னாளோட மண்டபத்தில்
புள்ளை எங்கே போனா

பொட்டு - 45 வயது, திளையத்தூர்,
இராமநாதபுரம் மாவட்டம் - 11.3.85.

***

படிப்பகம்

www.padippakam.com



அன்ன நடையழகி
அலங்கார இடையழகி
பின்னல் சடையழகி - செல்லம்மா
சரி
பொறப்படம்மா தேருப் பாக்க
செல்லம்மா செல்லம்மா

ஏ றுறது ஏரப்பிளேன் - நம்ம
இறங்குறது சோழ வந்தான்
சோழ வந்தான் பக்கத்திலே - செல்லம்மா
நல்லா
போடுறாண்டி டப்பாங்கூத்து
செல்லம்மா செல்லம்மா

பனை மரத்து ஓரத்திலே
பண்ணாங்குழி ஆடையிலே
எச்சி தெரிச்சதுண்ணு - செல்லம்மா
நீ எட்டு நாளும் பேசலையே - செல்லம்மா, செல்லம்மா
மஞ்ச மணக்குதம்மா
மாராப்பூச் சேலையிலே
சோப்பு மணக்குதம்மா - செல்லம்மா
ஒன்
சோளிக்கை ரவிக்கையிலே - செல்லம்மா செல்லம்மா

அருப்புக் கோட்டை சந்தையிலே
கழைக் கூத்துப் பாக்கப் போக
காணாமல் போனதனால் - செல்லம்மா
நீ
கண் கலங்கி நின்னாயடி - செல்லம்மா செல்லம்மா

மூக்கிலே வெள்ளக் கல்லு
மூக்கச் சுத்திப் பச்சைக் கல்லு
ஆசாரி செஞ்ச கல்லு - செல்லம்மா
என்ன
ஆள வட்டம் போடுதடி - செல்லம்மா செல்லம்மா

புஸ்பம் - 36 வயது,
பரமக்குடி, இராமநாதபுரம் மாவட்டம், 7.7.83.

***



படிப்பகம்

www.padippakam.com



# கல்யாண வாழ்த்துப் பாடல்கள்

படிப்பகம்

www.padippakam.com



# நீலகிரி படுகர் மக்களின் மணவாழ்த்துப் பாடல்

*நந்தா சாவிர ஆகலி*
(ஒன் று ஆயிரமாகப் பெருகட்டும்)

ஒள்ளி தாகிலி
(நன்றாகவே ஆகட்டும்)

அரசவ கொட்டு
(ஆயுளைக் கொடுக்கட்டும்)

சொகவ கொட்டு
(சுகத்தையே தரட்டும்)

ஒதொத்து ஒள்ளித் தாகிலி
(ஒவ்வொரு செயலும் சிறக்கட்டும்)

ஹெத்தப்பா (சாமியே)
ஹெத்தப்பா (சாமியே)

தகவலாளர். சுப்ரமணி உபதலை,
தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர்.
உதவி. ஆர். செல்வி, முதுகலை,
பழைய அருவங்காடு.நீலகிரி மாவட்டம்

***

படிப்பகம்

www.padippakam.com



கல்யாணம் கல்யாணம்
காருடைய கல்யாணம்
புண்ணிய மாப்போகு மின்னு
பூடி பண்ணிப் போட்டு வச்சார்
தரு மமாப் போகு மின்னு
தாலி பண்ணிப் போட்டு வச்சார்

தேரே-

அரிசி வகுந்த ஐங்காதம் பந்தலிட்டு
மூங்கி வகுந்து முக்காதம் பந்தலிட்டு
"வாழை வகுந்து வளைவெல்லாம் பந்தலிட்டு
தென்னை வகுந்து தெருவெல்லாம் பந்தலிட்டு
ஈக்கி வகுந்து இருகாதம் பந்தலிட்டு"
ஆனை அலையுமடி ஆனந்த வாசலிலே
ஆனையைக் கொண்டு வந்து அரசடியில் நிப்பாட்டி

குளிப்பாட்டி யானைக்கு
மிகுந்த அணிபூட்டி
ஏறினார் யானை எங்களண்ணன்
கொழுந்தி மார் எல்லோரும்
மறைஞ்சு நின்னு பாப்பாக
குட்டிச் சுவரேறி
குதிச் சேறிப் பாப்பாக
ஆனைச் சுவரேறி
ஆராய்ஞ்சு பாப்பாக
திண்ணி வந்தேறி
இருந்து போ என்பார்கள்
கனி வாய்த்தாம் பாலத்தை
மிதிச்சுப் போ என்பார்கள்
அல்லி அறிய அரசாணி

படிப்பகம்

www.padippakam.com



திருமாங்கலியம் கட்டு முன்னே
நல்ல நாள் முகூர்த்தம்
நன்மையே என்பார்க
அல்லி போல் தழைச்சி
மூங்கி போல் வேரோடி
எந்நாளும் வாழ்ந்திருப்பார்.

மாரி - மாவிலங்கை, 3.2.83.
சிவகங்கை மாவட்டம்.

***

# நலுங்குப் பாட்டு

ஆயிரம் லச்சத்தில் அட்டியல் மாலை
அவளிருப் பாளே ஜோராக
ஆத்தோரம் அவளுக்கு மணி மேடை
அவளிருப்பாளே தோழி மாரோடே

கண்ணா நலுங்கிட
சுவாமி நலுங்கிட

கிருஷ்ணா நலுங்கிட வாரும் கண்ணா

மகாலச்சுமி - 33 வயது, மகாதானபுரம்,
திருச்சி மாவட்டம், 3.9.83.

***

"வாழை மரம் பிளந்து, வாசலெல்லாம் பந்தலிட்டார், தென்னைமரம் பிளந்து, தெருவெல்லாம் பந்தலிட்டார்" (ப.327) தமிழர் நாட்டுப் பாடல்கள் நா. வானமாமலை.

படிப்பகம்

www.padippakam.com



# வாழ்த்துப் பாடல்கள்

படிப்பகம்

www.padippakam.com



# வாழ்த்துப் பாடல்

வாழ்த்துகிறேன் வாழ்த்துகிறேன்
கேட்டிருந்த பெண்களெல்லாம்
கொடிக் கோத்திரமாய் வாழ்ந்திருப்பார்
தாயும் தகப்பனும் தல முறைக்கும் வாழ்ந்திருப்பார்

அண்ணன்மார் தம்பிமார்
அருகருகா வாழ்ந்திருப்பார்
மாமன் மச்சான் மார்
மதிப்பாக வாழ்ந்திருப்பார்

முன்னருக்கும் அன்ன புஸ்பம்
ஏழு தல முறைக்கும் வாழ்ந்திருப்பார்
வெள்ளிக் கெழமை விடிஞ்சஞ்சு நாள்களுக்கும்
வீடு மொழுகி வெளி வாசக் கோல மிட்டு
திண்ணை மொழுகி தெருவெல்லாம் கோலமிட்டு
அடுப்பு மொழுகி ஆசாரர் கோலமிட்டு
கூடை மொழுகி குத்தலிட்டார்.

கண்டாங்கி கார கள்ளம் கல கலன்னு மாவிடிக்க
மோதிரக் காரியெல்லாம் மள மளன்னு மாவிடிக்க
வெள்ளிச் சீல காரிகள்ளாம் விதவிதமா மாவிடிக்க
பட்டுச் சேலைக் காரிகள்ளாம் பட படன்னு மாவிடிக்க
அயோத்தி வனம் என்று பதறிப் போய் நிண்டமுதார்

வண்ணாத்தி வண்ணாத்தி
வண்ணான் எங்கே போனாண்டி
ஆறு ஊரு சுத்தி அழுக்கெடுக்கப் போனாக
ஆளுயரச் சுவரேறி அழை அந்த வண்ணானை
கூலச் சுவரேறி கூப்பிட்டழை வண்ணானை
வண்ணானையழை மாராயம் சொல்ல வேணும்.

- சின்னப்பொன்னு, 46 வயது, உத்திர.கோசமங்கை, இராமநாதபுரம், 31-3-81.

கூலச் சுவர் - குட்டையான சுவர்

படிப்பகம்

www.padippakam.com



*வாழ்த்துக்கு வாழ்த்து*
*வடக்கத்தி மாமனுக்கு*
*வாலலையும் பாக்கு வச்சு*
*தெக்கத்தி மாமனுக்கு*
*தென்னலையும் பாக்கு வச்சு*
*கிழக்கத்தி மாமனுக்கு*
*கிளிப் பிள்ளையும் பாக்கு வச்சு*
*அய்யனார் கோயிலுக்கு*
*அள்ளி அள்ளிப் பாக்கு வச்சு*
*புள்ளையார் கோயிலுக்கு*
*படிப்படியாப் பாக்கு வச்சு*
*மாரியாத்தா கோயிலுக்கு*
*மடிமடியாப் பாக்கு வச்சு*
*வந்திறங்கும் வந்திறங்கும்*
*பந்தல் பள பளக்கும்*
*பந்தக் கால் சோதி மின்னும்*

*"எங்களண்ணன் சாப்பிடும் தட்டு ஆயிர ரூபா வெங்கலத் தட்டு*
*எங்கண்ணி சாப்பிடும் தட்டு அரைக்காசு ஈயத் தட்டு*
*எங்களண்ணன் படுக்கும் மெத்தை ஆயிர ரூபா பஞ்சு மெத்தை*
*எங்களண்ணி படுக்கும் மெத்தை கண்டனூர் கழுத மெத்தை"*
*பூ மரத்துக் கீழே நின்னு*
*எங்கண்ணன் புலி வேட்டையாடையிலே*
*பூமரத்துக் கீழே நின்னு*
*புலம்பனதும் நீங்க தானா*

*மாமரத்துச் சோலையிலே*
*எங்களண்ணன் மான் வேட்டையாடையிலே*
*மாமரத்துக் கீழே நின்னு*
*மயங்குனதும் நீங்க தானா*

**பானுமதி - 25 வயது, திட்டுக்கோட்டை, பசு.மு.மாவட்டம், 19-2-81.**

***

எல்லாரும் குடிக்குந்தண்ணி, ஏழைக்கேத்த பழனி தண்ணி, சந்தனம் குடிக்குந் தண்ணி, சரியான கள்ளு தண்ணி "நா. பாடல் காட்டும் தமிழர் வாழ்வியல்" - இராமநாதன்.

படிப்பகம்

www.padippakam.com



வந்திறங்கும் வந்திறங்கும் மணிப் பந்தல் வந்திறங்கும்
பந்தலுக்குக் கீழாக வந்து நிப்பார் தாய் மாமன்
ஊருக்கும்மே கிழக்கே
உயந்த மேடை வருது

பாப்பாத்தி குடையின்னா பச்சைக் குடை வீசி வரும்
மறவர் குடையின்னா மரச் சட்டை வீசி வரும்
இடையர் குடையின்னா ஈரச் சட்டை வீசி வரும்
வெள்ளாளர் குடையின்னா வெள்ளச் சட்டை வீசி வரும்

அவரு குடையுமில்லே
இவ்ரு குடையுமில்லே

மேக்கிருந்து வரும் தாய் மாமன் சீர் வருது
கிழக்கிலே வரும் தாய் மாமன் சீர் வருது.

உக்காந்து பால் கறக்க
மூக்காயி சீர் இறங்க
புடிச்சு வச்சுப் பால் கறக்க
புடி செம்பும் தானிறங்க
கட்டி வச்சுப் பால் கறக்க
கயிறு வந்து தானிறங்க
சீர் மணக்கும் சந்தனமும்
கிளி மூக்கு வெத்தலையும்
தூரத்துக்குத் தூரம்
தூண்டா மணி விளக்கு
காகத்துக்குக் காகம்
காந்தா மணி விளக்கு

வாழ்ந்திருப்பார் வாழ்ந்திருப்பார்
வாழை போல் வாழ்ந்திருப்பார்

**காளியம்மாள், 35 வயது, இரண்டாம் புலிக்காடு,**
**தஞ்சாவூர், 11-2-83.**

***

படிப்பகம்

www.padippakam.com



# ஏசல் பாட்டு

அரை மாசத் தீவாளிக்கு
அருணாப் பண்ணி போடணும்
கேட்ட போது கணக்குப் போயி
கேட்ட பவுன் வாங்கணும்

கல்யாணச் சமயத்திலே
கறவைப் பசு வாங்கணும்
தாலி கட்டும் தங்கைக்கு
தங்கத் தோடு போடணும்
காலம்பர காப்பி சாப்பிட
பந்தோஸ்தாக் கொடுக்கணும்
நடுத் தெருவிலே ரோடு போட்டு
மாடி வீடாக் கட்டணும்

கட்டுன வீட்டுக்கு நிலக் கண்ணாடி
பாங்குடனே பதிக்கணும்
அரிசித் தட்டு அப்பலத் தட்டு
அம்பது வச்சம் குடுக்கணும்
முறுக்குத் தட்டு சீலத் தட்டு
முப்பது வச்சம் குடுக்கணும்

எல்லாமும் சொல்லித் தாறேன்
ஏலம் கிராம்பு தாறேன்
இங்கிலிசு சொல்லித் தாறேன்
ஏறடி அடிமாதே.

-வெள்ளை, 36 வயது, மேலூர்,
மதுரை மாவட்டம், 30-4-84.

***

படிப்பகம்

www.padippakam.com



# ஒப்பாரிப் பாடல்கள்

படிப்பகம்

www.padippakam.com



# ஒப்பாரிப் பாடல்

படுக மொழி : 1. ஏ தாரி யண்ணா ஏ தாரியண்ணா
தமிழ் மொழி : எந்த வழி அண்ணா எந்த வழி அண்ணா

2. எட பட்டனா ஒப்பதாரி
சுடுகாடு போகின்ற வழி

3. ஈதாரிதான் அண்ணா
இந்தவழிதான் அண்ணா

4. முந்தாடு ஒப்பது அண்ணா
முன்னால போவது அண்ணா

5. மூறு கோலு குடி கட்டு
மூன்று குச்சியால் கட்டிய பாடை

6. இந்தாடு ஒப்பது அண்ணா
இந்தப் பக்கம் போவது அண்ணா

7. இழ்மு கோலு குடி கட்டு
ஏழு குச்சியில் கட்டிய பாடை

8. அறியாத ஒதையே அண்ணா
அறியாமல் போனாயே அண்ணா.

தகவலாளர் : சந்திரசேகரர் (படுகர்) 30 வயது
தட்டச்சுப் பள்ளி உரிமையாளர், பழைய அருவங்காடு.
தமிழாக்க உதவி : ஆர். செல்வி, எம்.ஏ.,II கக்கன் தெரு,
பழைய அருவங்காடு, குன்னூர் தாலுக்கா, நீலகிரி மாவட்டம்.- 8-8-1986.

***

படிப்பகம்

www.padippakam.com



(அம்மா இறந்ததும், மூத்தப் பெண் தன் தங்கை, தம்பி இருவரையும் எண்ணி வேதனை கொண்டு, செத்துப் போன அம்மாவிடம் துன்பங்களைச் சொல்லி அழுவது போல் அமைந்தது இப்பாடல்.)

லல்லாலே லாலே ... லாலலலே ...
லல்லாலே லாலே ... லாலலலே ...

படுக மொழி : அவ்வே கட்டே கும்புனா காடுத்தவனே
தமிழ் மொழி : அம்மா, அடர்த்தியான (கும்பலான) காடு நிறைந்துள்ளது.

கம்பூர மரனே பேறு தவனே
கம்பூர மரத்தின் வேர் போலே

பல்லா பெட்டிக பாவுத்தவனே
பெரிய பெட்டி போல் வீக்கம் வந்துவிட்டது

வலது காலு பந்தரவனே இடது காலு எத்தறவா
வலது காலு வருமோ, இடது காலுஎந்திருக்குமா

கடேக உட்டிதா காந்தருபியா
கடைசிப் பெண் காந்தருபிக்கு

கண்ணே ஒல்லவா கையுதேக்கா
சீர் சிறப்பு செய்யாமல் சென்று விட்டாய்

கல்யாண மதுவே கேகாதேக்கா
அவளுக்கு கல்யாணமும் செய்யாமல்
சென்று விட்டாய்
(மது என்பது கல்யாணம்)

கடேக உட்டிதா காசிராசனே
கடைசிப் பையன் காசிராசனுக்கே

கல்யாண மதுவே மாடாதேக்கா
ஏன் கல்யாணம் செய்து வைக்கவில்லை

படிப்பகம்

www.padippakam.com



மம்ம கூசு தந்து லேக்கா
மாமா குழந்தையை ஏன் தூக்கவில்லை.

அத்தாக நாகஜே ஓல நவ்வே
அந்தப் பக்கம் நாலடி எடுத்து வைத்தால்

சத்தம் சுத்தியா கேத்தனா முண்டே (பாவி)
நன்றாக இருக்கின்றாயா என்று
கேட்கின்றார்கள்.

ஆலட்டி அண்ணத்தமரு
ஆலட்டியைச் சேர்ந்த அண்ணன்மார்கள்

அவ்வே எள்ளி எந்து கேத்தனா
அம்மா எங்கே என்று கேட்கின்றார்கள்.

ஏனெந்து ஏகுவேன்
என்னவென்று சொல்வேன்.

- சந்திர சேகர், பழைய அருவங்காடு. - 5-5-86.

***

லாலி லாலி லாலா லாலு
லாலி லாலி லாலா லாலு

ஓ! வெஜ்ஜா மரத்தலைச்சுமையில் வருவே மாமி
ஓ! நொச்சப் புல் கட்டித் தலச் சுமையில் வருவே மாமி
ஓ! ரெயோ கெழங்கு வெட்டி வருவாயே மாமி
ஓ! கோலி மர விறகு வெட்டி தோள் சுமையில் வருவே மாமி

இன்னுமா ஒறக்கம் - மாமி
மாடுகள்ளாம் காத்திருக்கு
மாடுபத்த நேரமாச்சு
இன்னுமா ஒறக்கம்

ஓ! கூட்டா எஸ்டேட் வேலப்பணம் வ்ாங்கணும்
ஓ! நீரு உண்டி எஸ்டேட் பணம் வாங்கணும்
ஓ! சில்ரப்பணத்துக்கு வெத்தலை வாங்கணும்
ஓ! அடிமடியில் வச்சு வரவேணும் மாமி

---

படுக மொழிப்பாடல் அடிக்குக் கீழே தமிழ்மொழிபெயர்ப்பு அமைந்துள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



மாமி பட்ட பாடு பாத்தா
விலாவில வெறகுகுத்தி மூச்சு நின்னு
விழுந்தாளே பாறையிலே
இன்னுமா ஒறக்கம் - மாமி
மாடுகள்ளாம் காத்திருக்கு
மாடுபத்த நேரமாச்சு
இன்னுமா ஒறக்கம்.

***

நிகை கஞ்சிகெ குக்கையு இதே பந்தர அப்பேர்
(ஒனக்கு கஞ்சியும் பொரியும் கொண்டாந்திருக்காகப்பா)

நின்ன கண்ண தரது இந்து நோடலி சோமி
(ஒன் கண்ணத் தொறந்து பாரு சாமி)

நிகை மலு மண்டரையு இதே பந்தர ஆப்போ நீயு
(ஒனக்கு தலைப் பாகை கொண்டாந்திருக்காப்பா)

மல்லாட கேர நீயு ஓரைய ஆப்போ
(நீயும் போறீயாப்பா)

நிகை குத்தண சீலையு இந்து பந்தர ஆப்போ
(ஒனக்கு சேலை வந்திருக்கப்பா)

இந்து குல்லில்லாத ஈக ஓரையா ராஜா
(கவலையில்லாமப் போறியோ ராசா)

தகவலாளர் : எஸ். எலிசபெத், வயது 26,
எள்ளநல்லி, நீலகிரி மாவட்டம். - 1-7-86.
தமிழ் மொழிபெயர்ப்பு : சுப்ரமணியன்,
தலைமையாசிரியர் உபதலைவர், தொடக்கப்பள்ளி.

நீலகிரி மலைப் பகுதியில் வாழும் "படுகர்கள்" எனும் இவ்வின மக்கள் மலையின மக்கள் (Scheduled Tribe) எனும் அரசு இனப் பட்டியலில் இருந்தனர். தற்போது உயர்ந்த இனத்தில் இவர்களை அரசு இனப் பட்டியலில் சேர்த்துள்ளது. விவசாயத்தில் கவனம் செலுத்திவரும் இம்மக்களிடையே கல்வி நிலை இன்று கணிசமாக உயர்ந்து உள்ளது. வேலை வாய்ப்பில்லாத இளைஞர்கள் மத்தியில் தங்கள் இனத்தவரை மலையின மக்கள் இனப் பட்டியலில் அரசு திரும்பவும் சேர்த்து மலையின மக்களுக்கு வழங்கும் சலுகைகளை வழங்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

படிப்பகம்

www.padippakam.com



நான் ... தஞ்சாவூரு எங்கே
கண்ணாகுடி எங்கே
பட்டுக்கோட்டை எங்கே
நொம்மேனி எங்கே

நான் ... புள்ளையளக் கூட்டிக்கிட்டு
பரதேசக் கோலமா போறேனம்மா
எனக்கு யாருமில்லே
உதவியுமே இல்லே

நான் ... எங்கே போயி பொழப்பேன்
எனக்கே தெரியலையே.
கொளத்தரங்கரையோரம்
கொன்னரளிப் புன்னமரம்
கொழுந்து கட்டிப் பள்ளிக் கூடம்
கோடி சனம் அடையுமடம் - நான்
கொடுமையளைச் சொன்னனுன்னா
குங்கும எலை உதிரும்
கொண்ட மல்லிபூ உதிரும்

நான் ... மருதையிலே நானிருந்து
மாதா செத்து ஆளுவந்தா - நான்
மச்சேறி செல்லெடுத்து
மலரப் பொரி பொரிச்சு
மங்கியே எண்ணெய் கொண்டு
மல்லியப்பூப் பட்டெடுத்து
மன்னவரை முன்னிட்டு
மஞ்சளையும் கையிடுக்கி
நாம் பொறந்த வாசலுக்கு வந்திடுவேன்

நான் ... மாது வந்து கொல்லி வச்சா
மாதுக்கு வாச்ச மன்னவரு தேரிழுக்க - நான்
மாது மெத்த புள்ளையெல்லாம்

படிப்பகம்

www.padippakam.com



மதிலேறிப் பூத்தொடுக்கும்
மாமன் வீட்டு வாசலிலே
மாலை கட்டித் தொங்குதுன்னு
மாலை பொருத்தமில்லே
பாவி சண்டாளிக்கு
மாலை இப்பச் சொந்தமில்லே
புளுங்க அரிசி போல
பொன்னா சிறையிருந்தேன்
பொன்னுருக்கு மாப்பிள்ளே
பூலோகத்தில் இல்லையின்னு
புத்திலே இருக்கும்,
பூ நாகனுக்கு பாரியானேன்
வரகரிசி போல
மாதா சிறையிருந்தேன்
மாதாவுக்கு மாப்பிள்ளே
வையகத்தில் இல்லையின்னு
மலையிலே இருக்கும்
மலைப் பாம்புக்குப் பாரியானேன்.

நான் ... மாதா புலம்புறதும்
மலைப்பாம்பு சீறுறதும்
மாதாவுக்கே சம்மதமா?
வெள்ளிக் கல்லு ரோட்டிலே
என்னப் பெத்த அப்பா அம்மா
வெகுதொலைய மாலையிட்டு
வெள்ளிக் கல்லு அமுத்துறதும் நான்
வெறுத்தேன் பொறந்தெடத்தை
கருங்கல்லு ரோட்டிலே
காதவெளி மாயிட்டு
கருங்கல்லு அலுத்துறதும் - நான்



படிப்பகம்

www.padippakam.com



கசந்தேன் பொறந்தெடத்தை
வாயத் தொறந்தனினா
வருத்தம் வருமுன்னு சொல்லி - நான்
வாயத் தொறக்காம - நான்
வடிச்சிட்டேன் கண்ணீரை

நான்....
வடிச்ச கண்ணீரு
என்னப் பெத்த அம்மாப்பா
காங்கி வனந்தாண்டி
கண் பார்க்க வாறதெப்போ
மூங்கிவர்ணம் பூஞ்சோலை
முகந்தெரிய ராச்சியங்க
மூங்கி வனம் தாண்டி
முகம் பார்க்க வாறதெப்போ
பச்சை மலையோரம்
பாலடிக்கும் ரோட்டோரம்
என்னப் பெத்த
பார்வதியக் காணாமின்னு
பதறி அழுதழுதேன்
பாதகத்தி சோம்பினேன்.
சின்ன மலையோரம்
சேறடிக்கும் ரோட்டோரம்
என்னப் பெத்த
சீதையக் காணாமின்னு
தேம்பி அழுததென்ன
தேமொழியாள் சோம்பினேன்
சின்னமலை வயித்தியரும்
தேமொழி சோசியரும்
தேங்கி அழுததென்ன

படிப்பகம்

www.padippakam.com



தங்கத் தீய.... மொழியோ சோம்பினேன்
தண்ணி கொண்டு வந்தேன்
தண்ணீரு வேண்டாமின்னு
நீங்க வாழ்ந்த வாசல்லே
தங்கரதம் கேட்டியளே
வெள்ளித் தமிளரிலே
வெண்ணீரு கொண்டு வந்தேன்
வெண்ணீரு வேண்டாமின்னு
நீங்க வாழ்ந்த வாசல்ல
வெள்ளி ரதம் கேட்டியளே
வடக்கே ரயிலேறி - நான்
வளஞ்சு வந்தேன் காரேறி
வாசலிலே மேளமென்ன
வளவிலேயும் கூட்டமென்ன
தெக்கே ரயிலேறி - நான்
திரும்பி வந்து காரேறி
திண்ணையிலே கூட்டமென்ன
தெருவிலேயும் மேளமென்ன
வடக்கே ஒரு மக(ள்) தான்
வருசம் ஒரு பயணம்
நாம் பொறந்த வளவுமே
வாறதும் மெய்யாருந்தா
வாழைக் குருத்தோடும்
வாழைப்பூப் பூச்செதறும்
தெக்கே ஒரு மக(ள்) தான்
தேசம் ஒரு பயணம் - நான்
திரும்புறந்து மெய்யாருந்தா
தென்னங்குருத்தோடு
தென்னம்பூப் பூச்செதறும்

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

படிப்பகம்

www.padippakam.com



பாக்கு மரம் வெட்டியிலோ
பாடை அலங்கரிச்சு
பரகிரும புரு ரெண்டு கட்டி
பாடைக்கும் கீழே
பார்வதியா வாய்தொறந்தா(ள்)
பாடை அலங்காரந்தான்
நீங்கபோகும்
பரலோகமும் சிங்காரந்தான்
தேக்குமரம் வெட்டியல்லோ
தேரும் அலங்கரிச்சு
செவக்கும் தேருரெண்டு கட்டி
தேருக்கும் கீழே
நீங்க பெத்த
பேசியிருந்த வாய் தொறந்தா(ள்)
தேரும் அலங்காரந்தான்
நீங்க போகும்
தெய்வலோகம் சிங்காரந்தான்
ஆத்தங்கரையோரம்
அங்கே ரெண்டு புன்னமரம்
அரும்பு கட்டிப் பள்ளிக் கூடம்
அனேகசனம் அடையும் மடம் - நான்
அருமை மக(ள்) வாய் தொறந்தா
அரும்பே கருகிவிடும்
அரண்மனையும் ஓசையிடும்.
பங்குனி மாத்தையிலே
பவளத் தெரு ஓடையிலே

என்னப் பெத்த அம்மா அப்பா
பட்டு வந்து விக்குதுன்னு

படிப்பகம்

www.padippakam.com



என்னப் பெத்தப் பார்வதியிடம் சொன்னேன்னா
எனக்குப் பட்டு எர நூறுதான்
பல நகையும் முன்னூருதான் - நான்
பட்டை விரிச்சுடுத்தி
நாம் பொறந்த பட்டணமே போனேன்னா
பட்டணம் பேஞ்ச மழையில்
பட்டு நனையலையே
பல நகையும் நனையலையே
சித்திர மாத்தையிலே
சீல வந்து விக்குதுன்னு
என்னப் பெத்த சீதையிடம் சொன்னேன்னா
சீல எர நூறுதான்
சிறு நகையும் எர நூறுதான் - நான்
சீலை எடுத்துடுத்தி
சிறு நகையும் காதுடுத்தி
நாம் பொறந்த சீமைக்கே சென்றாலும்
சீல நனையாது
சிறு நகையும் மங்காது.

- தவமணி அம்மாள், சேத்தூர் மாரந்தை, 15-3-79.

***

கோட்டைத் தலை வாசலிலே
கொழுந்து வந்து வித்தாலும் - எனக்கு
கொழந்தையும் இல்லியே
மருதத் தல வாசலிலே
மருவு வந்து வித்தாலும் - எனக்கு
மருவுமே இல்லயே



படிப்பகம்

www.padippakam.com



வன்னை மலையோரம்
வரப்புக் கட்டிப் போய்ப்பாயும்
துரப்புக் கட்டி உள்ளவ
வந்த தண்ணி போதும்ம்பா
கொரலத் தொறக்காம
கொட்டுறேன் கண்ணீரை

நான்....
கொட்டுன கண்ணீரு
கோம்பமலை போய்ப்பாயும்
கொண்ட தண்ணி போதும்ம்பா
மாது கருப்புக்கும்
மையிட்ட பொட்டுக்கும்
மன்னவருதாலிக்கும்
மயக்கமில்லையின்னுருந்தேன் - இப்ப
மயக்கம் வந்து நேர்ந்ததென்ன.

- ராக்கி, 33 வயது, பட்டுக்கோட்டை, புதுக்கோட்டை, 27-2-83.

***

காரைக்குடி சாலையிலே
காரோடும் தேரோடும்
காசுக் கம்பி மே பறக்கும்
காசி விசுவரோட
கணக்கெழுதும் அண்ணரோட - நான்
கருணகையாள் பொம்பொறந்தேன்
காசி விசுவரில்லே
கணக்கெழுதும் அண்ணரில்லே - நான்
கருணகையாள் தள்ளுப்பட்டேன்
பொட்டி கணக்கரோடு
பூவளக்கும் தம்பியோட - நரன்

படிப்பகம்

www.padippakam.com



கருணகையாள் பொம்பொறந்தேன் - இப்ப
பூவுமில்லே பொட்டுமில்லே - நான்
பூவெளக்கும் பொம்பொறந்தேன்
கருணகையாள் தள்ளுப்பட்டேன்.

- மீனாட்சி, 48 வயது, மரவ மங்களம், பசு.மு.மா., 21-11-83.

***

கூடலு மொற வலிச்சு
கல்லுப்பாறை உண்டு பண்ணி
சங்கிலி பூட்டி
ரயில் கடையும் வேளையிலே
கொம்பேனி மே மனுசன்
கொண்டு வந்தான் காகிதத்தை
சின்னக்கட்டை ஒடஞ்சுப்பாத்து
சீதை மனம் பேதலிச்சு
மறுகா ஒரு கட்டொடைச் சுப்பாத்து
மாதுமனம் பேதலிச்சு
அவுந்தமுடி கட்டாம
அழுதபுள்ளே தூக்காம
ஏறுனேன் காரிலே
எறங்கினேன் காரை விட்டு
காரை விட்டுக் கீழிறங்கி
கண்ணிரண்டும் பஞ்சடைஞ்சு
வண்டாப்பறந்து வந்தேன்
வயவரப்பைச் சுத்தி வந்தேன்.

செண்டாப் பறந்து வந்தேன்
செய்வரப்பைச் சுத்தி வந்தேன்
முத்தத்திலே நிக்கும்
முருங்கமரம் சாக்கியின்னு
தெருவிலே நிக்கும்

படிப்பகம்

www.padippakam.com



தென்னமரம் சாக்கியின்னு
வாசலிலே நிக்கும்
வன்னிமரம் சாக்கியின்னு

இத்தனையும் சுத்தி வந்து
என்னைப் பெத்த ....
கருணை முக வாகனத்தை
காணுறது எக்காலம்
பச்சை ரயிலுவண்டி
பட்டணமே போகும் வண்டி
பட்டணத்தில் அண்ணன்மார்
பட்டெடுப்பா
பலநகையும் வாங்குவாக
பட்டணமே பேஞ்சமழை
பட்டு நெனையவில்லை

நான் சீதை அழுங் கண்ணீர்
பட்டு நெனஞ்சிருச்சு
சிறுநகையும் மங்கிருச்சு
நான் சீதை செகப்புக்கும்
நான் சீமானோட தாலிக்கு
சேதமில்லையின்னு இருந்தேன்
நான் சீதை செகப்பு
சேதம் வந்து நேந்ததென்ன

காசுக்கு அரிசி வாங்கி
கண்ணா தவளை கொண்டு
நான் கரையிலே பொங்கலிட்டா
பார்ப்பாரு பொங்கலிம்பா
பரமசிவன் தங்கையிம்பா
பணத்துக்கு அரிசி வாங்கி
பார்ப்பான் தவளை கொண்டு
பாதையிலே பொங்கலிட்டா

படிப்பகம்

www.padippakam.com



வாறவுக போறவுக
கன்னி மாதா பொங்கிலிம்பா
கருணையோட் தங்கையிம்பா

துத்திப்பூச் சின்னச்சரம்
தொடுக்கையிலே வாசனை தான்
தொட்டுக் கொடுத்தியலே
தொயரத்துக்கும் வச்சியலே
கத்தரிப்பூச் சின்னச் சரம்
கட்டையிலே வாசனைதான்
என்னைக் கூட்டியும் கொடுத்தியலே
கஸ்டத்துக்கும் வச்சியலே
பச்சை பனை மரம் தான்
பதிய வச்ச உத்திரந்தான்
என்னைப் பச்சையினும் பாராமே
பதறவிலை சொன்னையலே

கருவ மரத்தடியில்
கருமாயத்தெச் சொன்னேனுன்னா
கருவ எலை உதிரும்
கருங்கிணறும் தண்ணி ஊறும்.

வேப்ப மரத்தடியில்
வேதனைய சொன்னேனுன்னர்
வேப்ப எல உதிரும்
வெறுங்கெணறும் தண்ணி ஊறும்.

மஞ்ச மிதந்து வரும்
மணிப்புளு மேஞ்சு வரும்
மணிப்புறா கண்ணசங்கா
எங்களை மதிப்பாரு யாருமில்லே.

நீலம் மிதந்து வரும்
நீலப்புறா மேஞ்சு வரும்

படிப்பகம்

www.padippakam.com



நீலப்புறா கண்ணசச்சா
எங்களை மதிப்பாரு யாருமில்லே

மடியிலே எருப்பொ றுக்கி
மாயாரம் தீமூட்டி
மாயாரத்தை தீ அமத்த
மஞ்சமெல்லாம் சஞ்சலந்தான்

நீலக்கொடப் புடிச்சு
நெலம்பாக்கப் போனாலும்
நெலமும் கருதாகும்
நின்ன எடம் தோப்பாகும்

வட்டக் கொட புடிச்சு
வயல் பாக்கப் போனாலும்
வயல் கருதாகும்
வந்தெடமும் தோப்பாகும்

வீடெல்லாம் மல்லியப்பூ
வீமரெல்லாம் ஏம்பொறப்பு
வீமரு மதிச்சாவுல
வீமருக்கு வந்த கன்னி மதிப்பாக

காகத்துக்குக் கண்ணாடி
காந்தா மணி விளக்கு
காத்தடிச்சு மங்காம
கவலப்பட்டு மங்கிறேனே

தூரத்துக் கண்ணாடி
தூண்டா மணி விளக்கு
தூசி பட்டு மங்காம
துயரப்பட்டு மங்கிறேனே

பட்டமரமானேன்
பனமரத்துக் கொப்பானேன்

படிப்பகம்

www.padippakam.com



ஒத்த மரமானேன்
ஒரு மரத்துக் கொப்பானேன்

அத்தை வீட்டு வாசலிலே
அதரம் கட்டித் தொங்குதுன்னு
ஆரம் பொருத்தமில்லே
அத்தை மகன் சொந்தமில்லே

சின்னப் பன மரம் தான்
செதுக்காத உத்திரந்தான்
என்னைச் சிறுசுன்னு பாராம
சின்ன வெலை கூறினியளே

மருதையிலே ரெண்டு மரம்
வயிரம் பதிச்ச மரம்
வாசலுக்கு வேணுமின்னு
வாங்கி வச்சோம் கல்தூண்

வந்தா சலசலங்கும்
வாத்தை சொன்னா ஓசையிடும்
செஞ்சியிலே ரெண்டு மரம்
செவப்புப் பதிச்ச மரம்

தண்ணிக்கே வேணுமின்னு
செய்தோம் கல்தூண்
சிரிச்சா சலசலக்கும்
சேதி சொன்னா ஓசையிடும்.

- மாரி, மாவிலங்கை, 13-11-85.
சிவகங்கை மாவட்டம்.

***

கூடலுமொறையெடுத்து கருங்கடலைப் பாறையாக்கி
சங்கிலியும் தான் பூட்டி, தயிர்கடையும் வேளையிலே
போற அந்த மேமனுசன் கொண்டு வந்தான் காயிதத்தை

படிப்பகம்

www.padippakam.com



நான்......
காயிதத்தைக் கட்டொடச்சு
கன்னி மனம் பேதலிச்சு
மறுகா ஒரு கட்டொடச்சு
மாது மனம் பேதலிச்சு
பீரங்கி பூட்டாமே
புருசனிடம் சொல்லாமே
அழுதபுள்ள தூக்காமே
அவுந்த தலை கட்டாமே

நான்.....
ஓடினேன் வீட்டை விட்டு
ஏறுனேன் வண்டியிலே
வக்காப் பறந்து வந்தேன்
வய வரப்பைத் தாண்டி வந்தேன்
வாசலிலே நிக்கும்
வன்னிமரம் சாக்கி வச்சேன்
முத்தத்திலே நிக்கும்
முரங்க மரம் சாக்கி வச்சேன்.

நான்.....
இத்தனையும் சாக்கி வச்சு
என்னைப் பெத்த.....
கருண முழி ராசாங்கத்தைக்
காண்குறது எக்காலம்

நான்.....
வைகாசி மாத்தையிலே
வண்டு மல்லி நாளையிலே
வாரிச் சடைப்போட்டு
வார்ப்புக் குடமெடுத்து
வைகையிலே நீர் மோந்து வடக்குத் தெரு சுத்தி

படிப்பகம்

www.padippakam.com



மற தெருவு வந்தனினா
என்னத் தேடிய சீமான
வளவிலேயும் காணலியே

ம்... ம்... ம்...

கடந்த தூரம் அத்தை வீடு
கல் பதித்த மெத்த வீடு
நான் கல்லோரம் நிண்டழுதா
கல்லுக்குடைய மக என்னக்
கடந்து போ இம்பாக
கடந்து போ இம்பாக

பத்துப் பவன் சங்கிலிதான்
என்னத் தேடிய ராசாவே
பவுன் பதித்த தொங்கு தாலி
இது பாதி நாள் தாலியின்னு
எனக்குப் பாத்தவுக சொல்லலியே
பாத்தவுக சொல்லலியே....

எட்டுப்பவன் சங்கிலி தான்
இங்கிலீஸ் தொங்குதாலி
எனக்கு இடையிட்ட தாலியின்னு
இருந்தவுக சொல்லலியே

நீங்க ஆன மேலேறி
உங்க அரண்மனைக்கே போனாலும்
ஆன மணிச் சத்தங் கேட்டு
உங்க அடிக்கேகும் தீர்ப்பாகும்.

நீங்க குதிரை மேலேறி
என்ன பெத்த அப்பா...
உங்க கோர்ட்டுக்கே போனாலும்

படிப்பகம்

www.padippakam.com



குதிரை மணிச சத்தங்கேட்டா
உங்க குலக்கேசும் தீர்ப்பாகும்.

கடுகு உருண்டுவர
என்னப் பெத்த அப்பா
கடைசி மடைத் தண்ணி வர
கடைசி மடைத் தண்ணியிலே
எனக்குக் கை கழுவ நீதியில்லே
கை கழுவ நீதியில்லே...

நான்.....
சித்திரை மாத்தையிலே
செண்டுமல்லி நாளையிலே
சீவிச் சடைபோட்டு
செப்புக் குடமெடுத்து
சீமையிலே நீர் மோந்து
தெக்குத் தெரு சுத்தி
மறு தெருவு வந்தனினா
என்னத் தேடிய ராசாவைத்
தெருவுலயும் காணலியே

நான்....
நாருத்தம் பூமரத்தை
நம்பினேன் சில காலம்
இப்போ நாருத்தம் மரஞ்சாஞ்சு
நடுவிலொரு கொப்பொடீஞ்சு
இப்போ நான் நடுத்தெருவில் நிக்கிறேன்.

நான் ........

"எலுமிச்சம் பூ மரத்தை
எண்ணினேன் சில காலம்
இப்போ எலுமிச்சம் மரஞ்சாஞ்சு
இடையிலொரு கொப்பொடீஞ்சு
இப்போ நான் இடைவெளிலே நிக்கிறேனே"

படிப்பகம்

www.padippakam.com



ம்... ம்... ம்... ம்...

தூரத்தில் அத்தை வீடு
என்னப் பெத்த அப்பா....
தூசி படாமெத்தை வீடு
நான் தூணோரம் நிண்டழுதா
துணுக்குடைய மக என்னத்
தூரப்போ இம்பாக
தூரப்போ இம்பா....

மிளகு உருண்டு வர
மொத வழைத் தண்ணி வர
மொத மழைத் தண்ணியிலே
எனக்கு... மொகங் கழுவ நாதியில்லே

மாமியார்

வாழையெல கொண்டு
என்னத் தேடிய சீதை அத்தே
இந்த வளவோடு வந்தாலும்
நீங்க இருந்தா எனக்கு
வாழை எலைக்கும் சாதமுண்டு
இந்த வளவுலையும் சொந்தமுண்டு
உங்க கண்ணுக்குப் பின்னாலே
எனக்கு வாழை எலைக்கும் சாதமில்லே
இந்த வளவுலேயும் சொந்தமில்லே.

தென்ன எல கொண்டு
தெருவோடு வந்தாலும்
தென்னலைக்கும் சாதமுண்டு
இந்தத் தெருவுலயும் சொந்தமுண்டு
நீங்க இல்லாத வாசலிலே
எனக்குத் தென்னலைக்கும் சாதமில்லை
இந்தத் தெருவுலயும் சொந்தமில்லே

* எலுமிச்சம் பழம் என்று - நான், ஏந்தினேன் கையாலே, இருமனசுக் காரர்என்று - எனக்கு, இருந்த ஜனம் சொல்லலியே... "நாட்டுப்புற ஒப்பாரிப் பாடல்கள்" - லேனா தமிழ்வாணன், பக்-44.

படிப்பகம்

www.padippakam.com



காயே கசக்குதுன்னு
நான் கசந்தேன் புறந்தெடத்தெ

வெள்ளரியும் பாவையும்
வெதெக்குமிந்த மேடையிலே
வெதையே. கசக்குதுன்னு
நான் வெறுத்தேன் பரந்தெடத்தை

வெள்ளரிக்காய் பச்ச நெறம்
வெதையெல்லாம் வெள்ள நறம்
வெம்புன வெள்ளரிக்காயின்
வெளையாப் போவதில்லே

கத்தரிக்காப் பச்ச நெறம்
காம்பெல்லாம் வெள்ள நெறம்
கண்டுன கத்தரிக்காயினிக்
காசாகப் போவதில்லே

கழுத்தளவு தண்ணியிலே
என்னப் பெத்த அப்பா
கல்லப் பதிச்சு வச்சேன்
கருமஞ்செய்ய தம்பியில்லே

முகத்தளவு தண்ணியிலே
முத்துப் பதிச்சு வச்சேன்
இப்போ முத்தெடுக்கப் பிள்ளேருக்கு
மோப்பஞ்செய்ய தம்பியில்லே

கை மேல் கைமாலே
என்னப் பெத்த அப்பா....
கைநெறஞ்ச பூமாலே
கையெ கனக்குதுன்னு
கடக்கரையே போக விட்டேன்
கடக்கரையே போன கிளி
கைவந்து சேரலேன்னு

படிப்பகம்

www.padippakam.com



கல்லறைக்குக் கீழே வைக்க
எங்களுக்குக் கடுசாத் துணிந்ததென்ன

மடிமேல் பூமாலே
மடி நெறஞ்ச பூமாலே
மடியே கனக்குதுன்னு
மாயவரம் போகவிட்டேன்
மாயவரம் போன கிளி
மறுக்கா வந்து சேரலைன்னு
மண்ணறைக்குங் கீழே வைக்க
எங்களுக்கு மனசே துணிந்ததென்ன

இஞ்சிப் பெருங்காயம்
என்னப் பெத்த அப்பா
ஈஸ்வரியா கைமேசை
நான் ஈஸ்வரியா கண்ணீரு
இஞ்சி நெறஞ்சிருக்கும்
ஈரெட்டுப் போய்ப்பாயும்
இந்தச் சாரெட்டுச் சேவுகங்க
எனக்குக் கிட்டெழுத்து இன்னாங்க

சாதிப் பெருங்காயம்
சரஸ்வதியா கைமேசை
நான் சரஸ்வதியா கண்ணீரு
சகவ நெறஞ்சிருக்கும்
சாரெட்டுப் போய்ப்பாயும்
இந்தச் சாரெட்டுச் சேவுகங்கே
எனக்குத் தலையெழுத்து இன்னாங்க

தங்கப் புளியமரம்
என்னப் பெத்த அப்பா
தனி வயிரம் தாம்பளம்



படிப்பகம்

www.padippakam.com



ஏப்பா.....

தனிச்சுப் பரிமாற
இருந்த வீட்டிலே தகுந்த் மனுசரில்லே
தட்டிச் சொல்ல ஆளுமில்லே

பொன்னும் புளியமரம்
புதுவயிரம் தர்ம்பாளம்
இப்பப் புடிச்சுப்பரி மாற
பெரிய மனுசரில்லே
இந்த வீட்டிலே புத்தி சொல்ல ஆளுமில்லே

தட்டிலே அரிசி கொண்டு
தாய் வீடு போனேன்னா
தட்டுத் ததும்புதும்பா
தாய் வீடு ஏதும்பா
பொட்டியிலே அரிசி கொண்டு
பொறந்த எடம் போனாக்கா
பொட்டி தலும்புதும்பா
அண்ணனுக்கு வந்ததேவி
பொறந்த எடம் ஏதும்பா

ஆத்துக்கு அந்தப்புரம்
ஆலகட்டிப் போரடிக்கும்
அனேக கனம் நின்றடிக்கும்
நாம் பொறந்த அர்ச்சுனரும்
கூடநிக்கும்

*"அள்ளிக் கொடுக்கமானாம்
அளிவிடுத்துப் பாக்க வேணாம்
நாம் பொறந்த வாசலிலே
அர்ச்சுனரு அருமையிருந்தா
போதுமின்னேன்."

---

"அல்லியாளும் அர்ச்சுனரும் ஆடை அலங்கரித்து, அரண்மனைக்குப போனாக்கா, வாங்கன்னு அழைச்சிடுவா, வன்னப்பாய் விரிச்சிடுவா" "நாட்டுப்புற ஒப்பாரிப் பாடல்கள்" - தொ. ஆ. லேனா தமிழ்வாணன்.

படிப்பகம்

www.padippakam.com



தாய்

பத்து நாள் காணாவிட்டா
என்னப் பெத்த அம்மா
பாதைத் தடம்பார்ப்பேன்
பரமேஸ்வரனைப் போய்க் கேட்பேன்
பரமேஸ்வரனும் இல்லையின்னா
படமிறங்கி நான் பார்ப்பேன்.

எட்டுநாள் காணாட்டா
எல்லை தடம் பார்ப்பேன்
ஈஸ்வரனைப் போய்க் கேட்பேன்
ஈஸ்வரனும் இல்லையின்னா
ஏடெடுத்து நான் பார்ப்பேன்

பச்சைக் கடுதாசி
என்னப் பெத்த அம்மா
பழனியிலே நெய்ப்பேனா
நான் பத்துவரி எழுதி
நான் படும் பாதரவை மேலெழுதி
நாம் பொறந்த பழனிக்கே போட்டாலும்
பழனியிலே உள்ளவுக
பாத்தும் எடுப்பாரில்லே
நான்படும் பாதரவைக் கேப்பாரில்லே

நீளக் கடுதாசி
இளநீயிலே நெய்ப் பேனா
எட்டுவரி எழுதி
நாம் படும் இம்சைகளை மேலெழுதி
நாம் பொறந்த இலங்கைக்கே போட்டாலும்
இலங்கையிலே உள்ளவுக
ஏடெடுத்துப் பார்ப்பாரில்லே
நான் படும் இம்சைகளைக் கேப்பாரில்லே

வாழை எர நூறு தான்
வாழை வாங்கினாலும் எர நூறுதான்
நான் வாழைக்கும் பாச்சுன தண்ணி



படிப்பகம்

www.padippakam.com



வகையோட பாச்சாம
வாழை கருகுறது
நீ பெத்த மக(ள்) வருச மக(ள்) சோம்புறனே

தென்னை எர நூறு தான்
தென்னைக்குத் தண்ணி
தொகையோடப் பாச்சாம
நான் - தென்ன கருகிறேனே

ஆத்துக்குறு மண(ல்) தான்
ஆனை கட்டும் கல் தூண்
ஆனைக்கும் சங்கிலிக்கும்
அளவெடுத்துப் பார்க்காமே
அனநெறம் கொறஞ்சதேனோ
அருமை மக(ள்) சீருகெட்டேன்

குளத்துக்குறு மண(ல்) தான்
குதிரை கட்டும் கல் தூண்
குதிரைக்கும் சங்கிலிக்கும்
குறிப்பெடுத்துப் பார்க்காமே
சொந்த மக(ள்) கூறுகெட்டேன்.

கையிலே சோ மாலை
கைநெறையப் பூமாலை
கையிலே கனக்குதுன்னு
ஒங்க - கல்லறைக்கும் சம்மதிச்சேன்

மடியிலே சோமாலை
மடிநெறையப் பூமாலை
மடியே கனக்குதுன்னு
மண்ணுக்கே சம்மதிச்சேன்

***

சோம்புறேனே - சோகமாயுள்ளேனே

படிப்பகம்

www.padippakam.com



சாப்பாடு எலெ தொளிச்சு
சாப்பிட்டு எளப்பார
சவுக்கை முறிஞ்சதென்ன
சாவோலை வந்ததென்ன

சவுக்கையிலே சாஞ்சியளோ
சாகுலகம் சேந்தியளோ
கூட்டுவண்டி கட்டுனா
கூடொருநாள் செல்லுமுன்னு

மாட்டு வண்டி கட்டுனா
மருகா நாள் செல்லுமுன்னு
சந்தையிலப் பட்டெடுத்தா
சாயங்குலையுமின்னு

செட்டித் தெருவிலே
சேலை வந்து வித்தாலும்
சேலையிலே ரெண்டு கரை
செவப்பு வேணுமின்னு
பாப்பார் தெருவிலே
பட்டெடுத்து வந்தாலும்
பட்டுல ரெண்டு வெரல்
பச்சை தேவையின்னு
மருதையில் பட்டெடுத்தா
மதிப்புக் குறையுமின்னு
செஞ்சியிலப் பட்டெடுத்தா
தினுசு கொறையுமின்னு
அள்ளிப் பணம் கொடுத்து
சொல்லத் தறி போட்டுக்
கரைக் கோடு ரெண்டுலயும்
காசைப் பதிக்கவச்சு

படிப்பகம்

www.padippakam.com



மொகதலை ரெண்டுலயும்
முத்தப்பதிச்சு வச்சு
பொறந்தெடக்கோடி இல்லையின்னு
புகுந்தெடத்துக் கோடி இது
பட்டைக கொண்டு போட்டுப் போன்னா
பொன்னு ரதம் எழும்பீடும்
பொன்னு ரதம் ஓடிடும்

சௌந்தரம், 21 வயது, ராக்கி,
கண்ணமங்கலம், மாரந்தை, பசு.மு.மா, 14-8-81.

***

பச்சை கவுச்சாவு பவுன் பதிச்ச மோதிரங்க
நான் தேடும் ராசாவே நீங்க பாதையிலே போயிட்டா
பாதை நிலையோடு பாத்த சனங்கையெடுக்க
வெள்ளி சவுச்சாவு நீ விரல் பதிச்ச மோரங்கோ
நான் தேடும் ராசாவே வீதியிலே போட்டு வந்தா
வீதி சிலையோடு வெகு சனங்க கையெடுக்க
நாங்க கண்டு மழிந்திடுவோம்

தங்க மலை பாவு சன்னக்கம்பி மல்சோம்மன்
நீங்க தங்க செருப்புத் தொட்டு
தனிவாரு குஞ்ச மிட்டு
தேடிய ராசாவே நீங்க தால்சுக போனாலும்
தாலுசா நல்லவரு தாந்த மனிசருன்னு
சபைக் கொசர ராசருன்னு
தங்க குறிச்சி ஒண்ணு தனிக் குறிச்சி போடும்மென்பர்
தனி குறிச்சி மேலிருந்து தான் தேடும் ராசாவே
தனி ஞாயம் பேசி வந்தா
தனி ஞாயம் அத்தனையும் சபையே
மறைச்சு வரும் தாக்கல் என்னு வரும்

பொறந்தெடக் கோடி - பெற்றோர் இடத்துக் கோடி பெற்றோர்; எடுத்துவரும் துணிமணி.

படிப்பகம்

www.padippakam.com



தாலுசா அல்லவரும் தாந்த மனிசருன்னு
சபைக் கொசர ராசருன்னு
தாலிசுக்கே வக்கிலும்பேர் - நான்
தங்க மகிழ்ந்திருவே - தனிச்சு
ஒரு நாள் பொறுத்திருப்பேன்

பொன்னு தலைப்பாவு புனுக்குக் கொடி மல்வேட்டி
நீ பொன்னு செருப்புத் தொட்டு புடி வாடும் குஞ்சமிட்டு
நீங்க போலீசுக்கு போனாலும் போலிசார் அல்லவரு
பொறுத்த மனுசருன்னு பொறுமையுள்ள ராசருன்னு
பொன்னு குறிச்சி ஒன்னு புதுக் குறிச்சி போடும் மென்பார்
புதுக்குறிச்சி மேலிருந்து எங்கண்ணே
நீ புது ஞாயம் பேசி வந்தா
புது ஞாயம் அத்தனையும் பொழுதே
மறைச்சுவரும் போலீசுசே வென்று வரும்
போலீசார் அத்தனையும் பொறுத்த
மனுசருன்னு பொறுமையுள்ள ராசான்னு
போலீசுக்கே வக்கீல் என்பார்
நாங்க பொன்னா மகிழ்ந்திருவோம் பொந்திலே பூரணங்சோ
ஆல மரம்னு அண்டுனமே பச்சைக்கிளி
இன்னிக்கி ஆலம் மரஞ்சாய
அண்டுங்கிளி யாரு வசம்
கொய்யா மரம்னு கூடுனும்மே பச்சைக்கிளி
கொய்யா மரஞ்சாய கொஞ்சுங்கிளி யாரு வசம்

நாட்டுக்கு அரசியம்மா இந்திராள் என்னம்மா
நீ நாடாளும் நேரு மகள்
நீ நாடாளப் போகலியா - அம்பும்
பொறகால யானை படை பின்னாலே
இன்னிக்கி ஆகாத செண்டாளன்
அம்புல அடிச்சானே அழிமாட்டஞ் செஞ்சானே
கோட்டைக்கி அரசி அம்மா
இந்திராள் என்னம்மா
குடி ஆழும் நேரு மகள் - நீ குடி ஆளப்

படிப்பகம்

www.padippakam.com



போகையிலே இந்திரா என்னம்மா
குண்டும் பொறகால குதிரை - படை பின்னாலே
நீங்க கூட இருந்தா
குண்டுல அடிச்சானோ கொலை செய்து போட்டானோ
பச்சைக்கவுசாவு பழுது படா பொன் மேனி
இந்திராள் என்னம்மா - உன்னைப்
பார்த்திருந்த செண்டாளன் - வம்புல
அடிச்சானோ பழுது பண்ணிப் போட்டானோ
வெள்ளி கவுச்சாவு விண்ணம்படா பொன்மேனி
வில்லுல அடிச்சானோ விண்ணம் பண்ணி போட்டானோ
நாங்கள் ஏழை மக்கள் அத்தனையும்
எண்ணி அழுகறமே - நாங்க அழுத கண்ணீரு
ஆறும் பெருகி வரும்
அக்கறையும் தேங்கி வரும்.

- வடபழஞ்சி சந்தனம்(கோமாளி),
பல்கலைநகர், மதுரை, 18-8-87.

***

பாலும் அடுப்பிலே பாலகனும் தொட்டிலிலே
பாலகன தேடுன பாங்கியம்மா காணலியே
சோறும் அடுப்பிலே சொர்ணக்கிளி தொட்டிலிலே
சொர்ணக்கிளி பெற்றெடுத்த திரௌபதையாள் காணலியே

பாலைச் செடியருகே பதுங்கியிருக்கும் பிள்ளையாரே
பாலும் அடுப்பிலே பாலகனும் தொட்டியிலே
பாலக்னைப் பெற்றெடுத்த பாங்கி மகன் கட்டிலிலே

சோறும் இடுப்பினிலே சொர்ணக்கிளியும் தொட்டிலிலே
சொர்ணக்கிளி பெற்றெடுத்த திரௌபதயாள் காணலியே.

- ஆர். கிருஷ்ணமூர்த்தி தாயார்,
58 வயது, திருப்பூர், கோவை, 13-3-85.

***



படிப்பகம்

www.padippakam.com



# மாரடிப்பு ஆட்டப் பாடல்கள்

(சடங்குமுறை - தொழில்முறை)

படிப்பகம்

www.padippakam.com



# மாரடிப்புப் பாடல்

முந்தி முந்தி விநாயகரே
முருகனல்லோ சரஸ்வதியே
கந்தனுக்கு முன் பொறந்த
கணபதியே முன் வருவாய்

பாடறியேன் படிப்பறியேன்
பள்ளிக் கூடம் நானறியேன்
படிக்கச் சொன்ன வாத்தியாரை
பல நாளும் நானறிவேன்
ஏடறியேன் எழுத்தறியேன்
எழுத்துவகை நானறியேன்
எழுதச் சொன்ன வாத்தியாரை
எண்ணத்திலே நானறிவேன்

ஐவருக்கும் மைத்துனரே
வாசலிலே பந்தலென்ன
வமுசத்தார் கூட்டமென்ன
தெருவிலே பந்தலென்ன
சீமச்சனம் கூட்டமென்ன

மூலங்கி முள்ளு தச்சதுன்னு
மொகங்காஞ்ச நாயமென்ன
தாளமுள்ளு பள்ளத்திலே
தலமுழுகப் போகையிலே
தாழை முள்ளு தச்சதுன்னு
தலை சாஞ்ச நாயமென்ன

படிப்பகம்

www.padippakam.com



தலை நல்லா வலிக்குதுன்னு
தன்னுடலே நோகுதுன்னு
தங்கமணிக் கட்டிலிலே
சரங் கோருத்த மெத்தையிலே

தங்க மக(ள்) தலை சாய
சாரக் கட்டு வண்டி கட்டி
தனிக் குதிரை தானும் பூட்டி
தஞ்சாவூரு போயிறங்கி
தைலம் தேச்சு வந்ததென்ன
தனித்தைல வாசமென்ன
தலைவலியே நீங்கையிலே

பொடறி நல்லா வலிக்குதுன்னு
பொன்னு மணிக் கட்டிலிலே
போய்ப்படுத்த நாயமென்ன
சீமை நல்லா வயித்தியராம்

திரும்புராறாம் காருலையும்
மருத நல்லா வயித்தியராம்
மருந்து வைக்கும் சோசியராம்

*"உள்ளூரு வயித்தியராம்
உத்த சேதி சொல்ல மாட்டார்
அசலூரு வயித்தியராம்
அசலூரு தேதி சொல்லமாட்டார்"

அருப்புக் கோட்டை வயித்தியராம்
அன்புடனே சோசியராம்
அன்பான சோசியர்க்கு
ஆருவிட்டு தானழைத்தார்
சீமை நல்லா வயித்தியரு

படிப்பகம்

www.padippakam.com



திரும்பிட்டாராம் காரிலையும்
வாருங்கைய்யா வயித்தியரே
உக்காருங்க திண்ணையிலே
உத்த சேதி சொல்லி வர.

- அழகர்சாமி வாத்தியார் (தொழிற் கலைஞர்)
சாலைக்கிராமம், பசு.மு.மா. 13-3-85.

***

*நீலாமணியடுப்பு*

......................

ஒங்களுக்கு நேரம் பிரியையிலே
ஏனக்கு நேரந் தெரிஞ்சிருந்தா
நெய்யை எறக்கிருவேன்.

......................

அப்பாடோ செத்தியளோ
மாண்டியலோ
செவலோகஞ் சேந்தியளோ
நீங்க பெத்த ராச துரை
சீரேத்தி வண்டி பூட்டி
செவத்த மாடு ரெண்டும் பூட்டி
தஞ்சாவூரு போயிறங்கி
தனித்தயிலம் கொண்டு வந்து
அப்பாடோ செத்தியலோ
மாண்டியல்லோ செவலோகஞ் சேந்தியளோ
செத்தோமின்னு சேதி கேட்டா

---

''உள்ளூரு வைத்தியரும், உம்மைகளும் சொல்லலியே, அசலூரு வைத்தியர்க்கு, ஒங்க மகன் தங்க மகன், ஆளனுப்பித் தேடினாரோ'' நாட்டுப்புறப் பாடல்கள் - சமூக ஒப்பாய்வு - வி. சரசுவதி, (ஒப்பாரிப் பாடல்களிலிருந்து இப்பாடல்கள் எடுத்துக்காட்டப்படும்.)

படிப்பகம்

www.padippakam.com



சீதைக்கே ஆளு வந்தா
ஆளோட கை கோத்து
அர்ச்செண்டா வந்ததென்ன
தாளம்பூ கருவிருவேன்

சம்பா வெல அரிசி எடுப்பேன்
பீக்கங்காய் மோர் குழம்பு
பிரியமொட வச்சிருவேன்
சாப்பிட்டு போன
சரசமுள்ள ராசாவுக்கு
சாவு வந்து நேர்ந்ததென்ன
எஞ்சோட்டு பொண்டுகளா
எளவாளத் தண்டுகளா
எந்நாயகரு மாண்ட எடம்
கண்டியளோ பெண்டுகளா
போலீசுக் காரர்களா

....................

எம் புண்ணியரு மாண்ட இடம்
கண்டியளோ பொண்டுகளா

பாலா மணியடுப்பு
பால் காச்சும் சூட்டடுப்பு
பால் காச்சும் நேரமின்னா - ஒங்க
பயணங்க தெரிஞ்சிச்சுன்னா
பாலை இறக்கிருவேன்
பயணத்தை தேக்கிடுவேன்.
நிலா நல்ல மணியடுப்பு
நெய் காச்சும் சூட்டடுப்பு - ஒங்களுக்கு
நேரந் தெரிஞ்சுச்சின்னா நான்
நெய்யை எறக்கிடுவேன் - ஒங்க
நேரத்தைத் தேக்கிருவேன்

படிப்பகம்

www.padippakam.com



சாமி சர விளக்கு
சந்தன வில் விளக்கு
என்னப் பெத்த அம்மா - நீங்க
சாயிதின்னு எண்ணியிருந்தேன் - நீங்க
சாயுறது தெரிஞ்சுச்சுன்னா - நான்
சோத்தை நல்லா எறக்கிருவேன்
சாமிக்கே நானிடுவேன்.....
குளம்பு நல்லா குல விளக்கு
குங்குமம் வில் விளக்கு ஒங்களை
சொல்ல நல்லா கனவு கண்டேன்
என்னப் பெத்த அம்மா
கொல்லாது எண்ணியிருந்தேன்
சிலும்பு மயித்துக்கும்
திருச்சிருணைப் பொட்டுக்கும்
சேதமில்லேன்னு எண்ணியிருந்தேன் -
சிலம்பு நல்ல மயித்துக்கும்
திருச்சுருணைப் பொட்டுக்கும்
சேதம் வந்து நேந்ததென்ன

மடங்க நல்ல மயித்துக்கும்
மை வருணப் பொட்டுக்கும் எம்
மன்னவரு தாலிக்கும் - நான்
மாத்தமில்லே எண்ணிருந்தேன்
மடங்கா நல்ல மயித்துக்கும்

.................

மன்னவுக தாலிக்கும்
மாத்தம் வந்து நேந்ததென்ன
சந்தனத் தொந்தியிலே
ரத்தம் நல்லா நடக்தலியே
சனக் கூட்டம் ஆகலியே

படிப்பகம்

www.padippakam.com



..............

சனத்த நல்லா வெச்சிடுங்க எனக்கு
தாலி கொண்டு வந்த
தருமரைப் போய்ப் பாக்க
குங்குமம் தொந்தியிலே
குத்தம் நல்லா நடக்கலியே
குலக்கேசு ஆகிலியே
குத்தகத்தார் எம்பிறப்பு
கூட்டத்தை விலக்கிடுங்க - எனக்கு
கூரை கொண்டு வந்த
கொற்றவரைப் போய்ப் பார்க்க
எட்டுப் பவுனெடுத் தேன்
நாம் பொறந்த காளைக்கு
எடைக்கு ஒரு கல்லு வச்சேன்
இருந்தா நல்லா.......
எருவாடை வீசுமுன்னு
எமலோகம் பண்ணிடுவேன்

......................

பத்து நல்லாப் பவுனெடுத்தேன்
படுக்க நல்லா மெத்தை செய்தேன்
படந்த நல்ல முகப்பு வச்சேன்
பட்டா நல்வர் மடங்குமின்னு
பனி வாடை விசுமின்னு
பரலோகம் பண்ணிருவேன்
படுக்க எடம் கேட்டியலோ
செங்கப்படிக் கிணறு
செவந்திப் பூ குண்டு முத்து
நாம் பொறந்த சீதையலா - ஒங்கள
தேச்சு நல்லாக் குளிப்பாட்ட - நான்

படிப்பகம்

www.padippakam.com



சீதையா துனிஞ்சேனம்மா
மஞ்ச நல்லப் படிக்கிணறு
மகிளம்பூ குண்டு முத்து - ஒங்கள
மாத்தி நல்லாக் குளிப்பாட்ட - நான்
மகளும் நல்லா துனிஞ்சேனம்மா
பொன்னுங் கடியாரம் - நான்
புள்ளையில்லா ஆவனந்தான்
புண்ணியங்க செஞ்சிருந்த
புண்ணியரே சொல்லி வைக்க
தங்க நல்லோ கடியாரந்தான்
தருமங்க செய்திருந்தா - இன்னக்கி
தம்பியிருப்பான் கொல்லி வைக்க
மறந்திட்டேன்.
அந்தாத் தெரியுது.
அதிமதுரைக் கோபுரந்தான்
ஆவுடையார் சந்நிதி தான்

........................

அமுத மரிக் கொழுந்து
வாசமுள்ள ரோசாப்பூ - நான்
ஓரம் ஒதுங்கியிருக்கிறேனே
இந்தாத் தெரியுது
கடிமதுரைக் கோபுரமும்
என்ன சொல்லி ரெத்தினமும்
என்னிமலை வேடரெல்லாம்
நாம் பொறந்த வாசலிலே
இருந்து விளையாடுறாக - நான்
இருந்தா மரிக் கொழுந்து.

- சீனிவாசகம், நாயனக் கலைஞர், 56 வயது,
இராமநாதபுரம், ரெட்டிப்பாளையம், தஞ்சாவூர், 13-1-81.

***

படிப்பகம்

www.padippakam.com



# தொகையறா

பாரைய்யா இன்னிக்கி
பாப்பாரம் அரமனையாம்
என்னப் பெத்த அப்பா நீங்க
படுத்துறங்கும் பஞ்சாங்கந்தான் சாவடியாம்
பஞ்சாங்கச் சாவடியில்
நேத்துப் பன்னிரெண்டு ஒரு மணிக்கு
படுத்துறங்கும் வேளையிலே - அந்தப்
பலிகாரன் எமன் வந்து - இன்னிக்குப்
பாசக்கயிர் கொண்டு ஒங்களைப்
பாவியத்தான் பிடிக்கலையே - நான்
ஆகாத தோசி - நான்
ஆகாத பெண்ணாள் - நான்
மதுரை மாரியாத்தா கோயிலுக்கு
மங்கை ஒரு மாலை கொண்டு
போயிருந்தேன் போயிருந்தேன் - அந்தச்
சண்டாள வாசல் - ஒரு
பாத்த வகைதான் சொல்லலியே.

படிப்பகம்

www.padippakam.com



# மாரடிப்பாடல்

அங்கே முந்தி முந்தி விநாயகரே
முருகு நல்ல சரஸ்வதியே
கந்தனுக்கு முன் பிறந்த
கணபதியே முன்னடவாய்

பூநாகமே எதிர்ப்படுது
காக நல்ல குறுக்கோடுது
கருநாகமே எதிர்ப்படுது
இத்தனையும் தான் கடந்து
வாருதோ வைத்தியரும்
வ்ந்த நல்ல வைத்தியர்க்கும்
வலது புறம் குறிஞ்சி போட்டார்
வாழைப்பூவாம் கைலெடுத்து
வலது கையத் தாது பார்த்தார்
வாதங்களும் பித்தங்களும்
வம்பு மெத்தை செய்யுதுண்டு
எலுமிச்சங்காய் கைலெடுத்து
எடது கையத் தாது பார்த்தார்
எடது கையைப்பார்க்கும் போது
ஏதுமில்லே என்று சொன்னார்
செத்து நல்லா மடிந்தாரம்மா
சிவலோகமே சென்னாரம்மா
பரம்பக்குடி ரோட்டுலதான்
பாக்குமரம் ரெண்டு மரம்
பாடைக்குத்தான் வேண்டுமின்னு
பாத்து வந்தார் தங்கமகன்

படிப்பகம்

www.padippakam.com



திருமங்களம் ரோட்டுலதான்
தேக்குமரம் ரெண்டு மரம்
தேருக்குத்தான் வேண்டுமின்னு - அங்கே
தேடி வந்தார் தங்கமகன்

வாடிப்பட்டி ரோட்டுலதான்
வாழமரம் ரெண்டுமரம்
அளவுக்குத்தான் வேண்டுமின்னு
வாங்கி வந்தார் தங்கமகன்
மதுரை நல்லா போயிறங்கி
மல்லியப்பூ ஆரங்கட்டி
திருமங்களம் போயிறங்கி
செவந்திப் பூவாம் ஆரங்கட்டி
பெரிய குளம் போயிறங்கி
பிச்சிப் பூவாம் ஆரங்கட்டி
கட்டு வேலக் காரரையும்
கையோடக் கூட்டி வந்தார்
தேரு நல்லா அலங்காரமாம்
தெருவு எல்லாம் சிங்காரமாம்
பூவு நல்லா அலங்காரமாம் - நீங்க
போகுமிடம் சிங்காரமாம்
இடுகாடு போயிறங்கி
இளைய மகசொல்லி வைக்க - அங்கே
சுடுகாடு போயிறக்கி
மூத்த மகன் சொல்லி வைக்க
நீங்க மோச்சலோகம் சேந்தீங்களே

- ரத்தின மேரி, 29 வயது, மைக்கேல் பாளையம்,
நிலக்கோட்டை, அண்ணா மாவட்டம், 11-2-83.

***

"எலுமிச்சங்காய் யட்டெடுத்து, இடது கையும் தாது பாத்து, வாளைப் பூவுப் யட்டெடுத்து, வலது கையும் தாதுபாத்து, தாதுகளும் பேசவில்லே, தந்தி போல ஓடலியே" நாட்டுப்புறப் பாடல்கள் - சமூக ஒப்பாய்வு - வி. சரசுவதி, (ப.அ.க) (மோச்சலோகம் - மோட்ச லோகம், மேலோகம்)


படிப்பகம்

www.padippakam.com



# எழுச்சிமிகு பாடல்கள்

படிப்பகம்

www.padippakam.com



# தொகையறா

பட்ட மரம் பரம்பக் குடி
படந்த மரம் எளையாங்குடி
கூந்தப்பனை தொகவூரு
குயிலிருந்து கூவுதங்கே தன்னன்னே னானே.....

பாடல்

முதலாளிப் பண்ணையிலே தன்னன்னே னானே
முன்னூரு ஏக்கர் களாம் தன்னன்னே னானே
வடக்கே போற ரோட்டிலேயே தன்னன்னே னானே
வாகிக்குமாம் செங்கரும்பு தன்னன்னே னானே
வளஞ்சு நல்லா ஒடிப்பதற்கு தன்னன்னே னானே
வளையலையே ஒன்னுடம்பு தன்னன்னேனானே
(முதலாளி).... (தன்)

கொளத்துக்கு அந்தண்டையே தன்னன்னே னானே
கூவாத தந்தி மரம் தன்னன்னே னானே
குதிச்சு விழுந்ததுன்னா தன்னன்னே னானே
என்னக் கொண்டணைப்பார் யாருமில்லே தன்னன்னே
னானே (தன்)

ஆத்துக்கு அந்தண்டையே தன்னன்னே னானே
அழகான தந்தி மரம் தன்னன்னே னானே
தட்டி நல்லா விழுந்தனுன்னா தன்னன்னே னானே
ஆதரிப்பார் யாருமில்லே தன்னன்னே னானே (தன்)

செம்புல தான் செலையெழுதி தன்னன்னே னானே
செவத்த புள்ளே பேரெழுதி தன்னன்னே னானே
வம்புலதான் தாலி கட்டி தன்னன்னே னானே
வாழுறது எந்த வெதம் தன்னன்னே னானே (தன்)

- **அம்மச்சி**, 53 வயது, சூரண்டான் பாறை,
வீராமதி, புதுக்கோட்டை, 23-8-85.

***

படிப்பகம்

www.padippakam.com



என்னம்மா தேவி சக்கம்மா
ஒலகம் தலை கீழாத் தொங்குதே நாயமா
இப்பச் சின்னஞ் சிறிசெல்லாம் சிகரெட்டுப் பிடிக்குது
சித்தப்பன் மார் கிட்டே தீப்பெட்டி கேக்குது (என்னம்மா)

ஏரப் பிடிச்சவன் ஏழையா ஆயிட்டான்
ஏச்சுப் பொழச்சவன் எஜமானா ஆயிட்டான்
கட்ட ஒடச்சவன் கடனாளி ஆயிட்டான்
காசப் புடிச்சவன் கங்காணி ஆயிட்டான் (எங்)

கட்சி விட்டுக் கட்சித் தாவிக் குதிக்கிறான்
கண்ட கடவெல்லாம் கழுதையா கத்துறான்
கள்ள நோட்டக் கூட அச்சிலடிக்கிறான்
காளியாத்தா கோயிலையே தலைகீழாப்
புடுங்குறான் (என்)

குப்பை உயருது கோபுரம் தாளுது
கோமாளி பாட்டுக்கு பூமாலை போடுது
காலம் மாறிப் போச்சு கோவிந்தா
கால நிலையப் பாரு வைகுந்தா.

- செவந்தியான் (நாயனக் கலைஞர்), மானாமதுரை, 14-2-84.

***

தன்னனே னானானே - தன்னே
னானனே னானானே
தானனை னானைனே - னானே
தானன னானானே

செங்கொடி பறக்குதுங்க - அங்கே
சேலம் சிறைதனிலே
காற்றாய்ப் பறக்குதுங்க - நம்ம
கடலூர் செயிலுக்குள்ளே (தன்)

வேனைக் கொண்டாந்து எங்கள
வெரட்டி அடித்தாலும்

படிப்பகம்

www.padippakam.com



வேனிலே ஏறிடுவோம் - எங்க
வீரத்தை விடமாட்டோம் (தன்)

போலீசு வாசலிலே - எங்களப்
பூட்டி முதல் போட்டாலும்
பூட்டை தெறித்திடுவோம் - எங்க
போட்டிகளை விடமாட்டோம். (தன்)

காரைக் கொண்டாந்து - எங்களக்
காரு மேல ஏத்தினாலும்
காரில் ஏறிடுவோம் - எங்க
கட்சிகள விடமாட்டோம் (தன்)

கச்சேரி வாசலிலே - எங்களக்
கட்டி முதல் போட்டாலும்
கட்டைத் தெறித்திடுவோம் - எங்கள்
கட்சிகள விட மாட்டோம் (தன்)

ஊர் ஊராக் கூட்டங்கூடி - நல்ல
உள்ள தலைவர் திட்டம் போட்டு
உள்ள தலைவரு திட்டத்தினாலே
உயரப் பறக்குது செகப்புக் கொடி.

நாடு நாடாக் கூட்டங்கூடி
நல்ல தலைவர் திட்டம் போட்டு
நல்ல தலைவரு திட்டத்தினாலே
நயமாப் பறக்குது செகப்புக் கொடி (தன்)

வடக்கே மழையும் பேய - நல்ல
வாமடையில் வெள்ளம் வர
வாமடையின் வெள்ளத்திலே - ரெண்டு
வா(ழை)ள மரம் மெதந்து வர (தன்)

- மாரி, மாவிலங்கை, 13-5-81.

***

படிப்பகம்

www.padippakam.com



வாள மரம் ரெண்டெடுத்து - நல்ல
வடநாட்டுக்குப் பாலங்கட்ட - இப்ப
வடநாட்டுக்குப் பாலங்கட்ட - இப்ப
வந்து நிப்பார் நம்ம தலைவர் (தன்)

தெக்கே மழையும் பேய - நல்ல
தேமடையில் வெள்ளம் பர
தேமடையின் வெள்ளத்திலே - ரெண்டு
தேக்குமரம் மிதந்து வர (தன்)

தேக்குமரம் ரெண்டெடுத்து - நல்லா
தென்னாட்டுக்குப் பாலங்கட்ட
தென்னாட்டுக்குப் பாலங்கட்ட - இப்ப
திட்டம் போட்டார் நம்ம தலைவர் (தன்)

அஞ்சுமா நெலத்திலயும் - எங்கள
அறுப்பறுக்கச் சொன்னாக
அறுப்பறுக்கச் சொன்னதுமே - எங்கள
ஆபிசுக்கு வரச் சொன்னாக.

பத்துமா நெலத்திலயும் - எங்களப்
பயிர் நடச் சொன்னாக
பயிர் நட்டு முடிஞ்சதுமே - எங்கள
பஞ்சாயத்துக்கு வரச் சொன்னாக.

- அம்சவள்ளி, 20 வயது,
உறுதிக்கோட்டை, பசு.மு.மா., 17-7-83.

***

முயற்சி எடுக்க வேணும்
முடிவு பண்ணிப் பாக்க வேணும்
மக்களெல்லாம் ஒன்னாச் சேந்து - ராசாக்கா
மனுக் கொடுத்துப் பேச வேணும் - அய்யாக்கா

வாள - வாழை

படிப்பகம்

www.padippakam.com



பள்ளியிலே படிக்க வச்சா
பணம் காசு கேக்குறாக
கையெழுத் துக்கேக்கப் போனா - ராசாக்கா
மக்க கிட்டே
கமிசங்களும் கேக்குறாங்க - அய்யாக்கா

சம்பாவெல ஏறிப் போச்சு
சவுளிப் பாக்கி ஏறிப் போச்சு
பத்துவளிக் கடனுமாச்சு - ராசாக்கா
நம்ம
என்ன பண்ணி வாழுறது - அய்யாக்கா

பத்து மூடை அரிசி வந்தா
பாதி தானே போடுறாக
அஞ்சு மூடை அரிசியத்தான் - ராசாக்கா
மக்களுக்கு
அடையாளமே தெரியவில்லை - அய்யக்கா

கேக்குறதும் கமிசந்தானே
குடுக்குறதும் கமிசந்தானே
காரியங்க நடப்பதில்லே - ராசாக்கா
மக்களுக்கு
கடமையோட ஒழைப்பாரில்லே - அய்யாக்கா

- செயசீலி அம்மாள், வண்டியூர், மதுரை, 11-3-79.

***

னானன்னன னானன்ன னானானே
னானன்னன னானன்ன னானானே
தானன்னே போட்டது நாலுமாசம் - மாமா
நாணயம்மா ஒரு ஏறுகட்டி
ஏரிக்குள்ளே கப்பல் கட்டி
ஏலேலோ கொட்டி என் தோழி

படிப்பகம்

www.padippakam.com



யாரைய்யா வீட்டிலே இருக்கிறது
அன்னக்கிளி வந்து பாருமைய்யா
பாட்டு சொல்லுறேன் கேளுங்கைய்யா
பச்சை நோட்டு இருந்தா போடுங்கைய்யா

நோட்டுக்கேக்குற ராமாயி
நோக்கம் என்னடி வீராயி
கடன் காரன் நான் இருக்கேன்
கஸ்ட்டம் பண்ணாதடி முத்தாயி

ஐயா! மச்சான் வாருங்கைய்யா
அழகுத் திண்ணையில் குந்துங்கைய்யா
சோப்புல இல்லீயா வெள்ளிப் பணம்
சோகம் வந்ததைச் சொல்லுமைய்யா

எருவுக் கடையை நான் சொமந்தேன்
எல்லா வேலையும் நானும் செய்தேன்
சாணிய வாரிக் கொட்டச் சொல்லி
சாதி மதமும் காட்ராண்டீ

சாதி ஏதுடா சின்ன மச்சான்

மதமும் ஏதயா சின்ன மச்சான்
ஏழை பணக்கார சாதி
இரண்டு உண்டுயா சின்ன மச்சான்

முத்து முத்தான் ராமாயி
முன்ன பொறந்தாண்டி வீராயி
படிப்பு இல்லாத காரணத்தால்
பல வேலையும் செய்யுறேண்டீ

- செயசீலி, மதுரை

***

படிப்பகம்

www.padippakam.com



பொன்னாத்தா பொறந்தனுல்லோ
ஏலோ லம்படி ஏலோ
நான் போதுமடி ஒலகத்திலே
ஏலோ லம்படி ஏலோ
காட்ட போயி வீட்ட வந்தா
ஏலோ லம்படி ஏலோ
என்னக் கனைக்குராண்டி என் கணவன்
ஏலோலம்படி ஏலோ

இன்னிக்கிலாம் ஒழைச்சுப்புட்டு
ஏலோலம்படி ஏலோ
பொழுதுந்தான் போயிடிச்சு
ஏலோலம்படி ஏலோ
குனிந்து வேலை செய்யவேணும்
ஏலோலம்படி ஏலோ
நெல் பொறக்கிச் சேக்க வேணும்
ஏலோலம்படி ஏலோ

ஒலக்கையாலே குத்தவேணும்
ஏலோலம்படி ஏலோ
ராச் சோறு முடிந்தவுடன்
ஏலோலம்படி ஏலோ
எடந்தேடி ஒறங்க வேணும்
ஏலோலம்படி ஏலோ
கோழி நல்லா கூவிடுச்சு
ஏலோலம்படி ஏலோ

குனிஞ்சு வேலை செய்ய வேணும்
ஏலோலம்படி ஏலோ
சாணியும் தெளிக்க வேணும்
ஏலோலம்படி ஏலோ
தண்ணி மொடா தூக்க வேணும்
ஏலோலம்படி ஏலோ
கழனிக்குத்தான் செல்ல வேணும்
ஏலோலம்படி ஏலோ

SEELAN BOOKS SIGNATURE NORWAY

படிப்பகம்

www.padippakam.com



நகை நட்டுகளை எடுத்தா
ஏலோலம்படி ஏலோ
ரெண்டு ரூவாக் கூலி தாண்டி
ஏலோலம்படி ஏலோ
அறுப்பறுத்து சுமை அடிச்சா
ஏலோலம்படி ஏலோ
நாலரப்புடி கூலி தாண்டி
ஏலோலம்படி ஏலோ

- செவத்தியம்மாள், 25 வயது, கற்குளம், பசு.மு.மா., 13-2-78.

***

கால் செருப்புக் கட்டுவோம்
காசு நல்லா கட்டுவோம் - நாங்க
காரியமா வீரியமா
வேலையைச் செய்வோம்

தோல் களச் செப்பனிட்டு
வித்து வருவோம் - நல்ல
தோல் செருப்புக்கு
பெல்ட்டு தானுங் கட்டுவோம்

மேலான சாதியின்னு
விளம்பிடுவாங்க - அவுங்க
இடுப்பிலே எங்க
பெல்ட்டைக் கட்டிடுவாங்க

பாழான சாதியின்னு
பேசிப் பேசியே - எங்க
பரவ்த்துக்கு ஆளாகி
நீங்க பேர்காதீங்க

ஓ! சாமி!
ஓ! அய்யா!

- அழகர்சாமி வாத்தியார், 62 வயது,
சாலைக் கிராமம், பசு.மு.மா., 4-3-80.

***

படிப்பகம்

www.padippakam.com



முயற்சி எடுக்க வேணும்
முடிவு பண்ணிப் பாக்க வேணும்
மக்களெல்லாம் ஒன்னாச் சேந்து ராசாக்கா
மந்திரி கிட்டே மனுக் கொடுத்துப் பேசவேணும் - அய்யாக்கா

கேப்பக் கருதுபோல கேட்ட பொண்ணு நானிருக்க
கேடு கெட்ட அத்த மயன் - ராசாக்கா
என்ன கேடுவரப் பேசுறாரே - அய்யர்க்கா

நாளெல்லாம் பாடுபட்டேன்
நல்லகாலம் எனக்குமில்லே
என்னான்னு கேக்கப்போனா - ராசாக்கா
என்ன ஏளனமாப் பேசுறாக அய்யாக்கா

கொத்தமல்லி பாத்திகட்டி
கொடிக்குக் கொடி குஞ்சம் கட்டி
கோவலனப் பெத்தமக ராசாக்கா - இப்ப
கொடிக்குக் கொ்டி வாடலாமா அய்யாக்கா

செடிக்குச் செடி பாத்திகட்டி
செடிக்குச் செடி குஞ்சம்கட்டி
சேவகனப் பெத்தமக - ராசாக்கா - இப்பச்
செவ்வாழையா வாடலாமா அய்யாக்கா

- ஜெயசீலி, வண்டியூர், மதுரை, 3-2-81.

***

"மாமி மகளிருக்க மயில்போல பெண்ணிருக்க, தாராக் குண்டுப் பெண்ணுக்கு தாலிகட்டச் சம்மதமா" என ப. 404, ஈழத்து நாட்டார் பாடல்கள் (மட்டக்களப்பு மாவட்டம்) ஆய்வு நூலில் இளையதம்பி பாலசுந்தரம் குறிப்பிடக் காணலாம்.

படிப்பகம்

www.padippakam.com



# குருவிக்காரன் ஆட்டப் பாடல்

ஏமா என்னம்மா தேவி சக்கம்மா - ஒலகம்
தலை கீழாத் தொங்குதே நாயமா

இப்ப சின்னஞ்சிறிசெல்லாம் சிகரெட்டுப் பிடிக்குது
சித்தப்பன் மார் கிட்டே தீப்பெட்டி கேக்குது (என்னம்மா)

இப்பக் கைவளை எல்லாமே காதிலே தொங்குது
கலிகாலம் பாருங்க தலை கீழாத் தொங்குது (என்னம்மா)

இப்ப கொண்ட முடிச்சவன் கோமாளியாகுறான்
மீசை மொளச்சவன் வீரன்னு சொல்லுறான் (என்னம்மா)

இப்ப கசாப்புக் கடையிலே கால் வைக்க முடியலே
காய்கறிக் கடையிலே தலை நீட்ட முடியலே (என்னம்மா)

இப்ப கண்டாங்கிச் சேலையை கைலின்னு கட்டுறான்
காலத்துக்குத் தோதா கோளாறு பண்ணுறான் (என்னம்மா)

இப்ப கஞ்சித் தண்ணிய காலையில் குடிச்சவன்
காப்பித் தண்ணியிலே காலத்தை ஓட்டுறான் (என்னம்மா)

- பிச்சைமுத்து, 55 வயது, கல்லடிதிடல்,
இராமநாதபுரம், 31-3-85.

படிப்பகம்

www.padippakam.com




1. **அன்னகாமு** : ஏட்டில் எழுதாக் கவிதைகள், கழக வெளியீடு,1987, 4வது பதிப்பு.
2. **இராமநாதன் ஆறு** : நாட்டுப்புறப் பாடல்கள் காட்டும் தமிழர் - மணிவாசகர் நூலகம், சிதம்பரம் - 1982.
3. **இளையதம்பி பாலசுந்தரம்** : ஈழத்தமிழ் நாட்டார் பாடல்கள், தமிழ்ப் பதிப்பகத்தார், 1979.
4. **சண்முக சுந்தரம்.சு.** : தமிழக நாட்டுப்புறப் பாடல்கள், பூம்புகார் பிரசுரம், சென்னை, அக்டோபர் 1978.
5. **சண்முகசுந்தரம், சு.** : நாட்டுப்புற இயல், மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1978.
6. **சாமி பி.எல்.,** : தமிழ் இலக்கியத்தில் நாட்டார் பண்பாடு, வானதி பதிப்பகம், சென்னை, டிசம்பர் - 1983.
7. **சரசுவதி வி.** : நாட்டுப்புறப் பாடல்கள் சமூக ஒப்பாய்வு, பதிப்புத்துறை, மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை, 1982.
8. **தமிழண்ணல்** : தாலாட்டு, செல்வி பதிப்பகம், காரைக்குடி, 1985, 5வது பதிப்பு.
9. **லேனா தமிழ்வாணன்** : நாட்டுப்புற ஒப்பாரிப் பாடல்கள், மணிமேகலைப் பிரசுரம், சென்னை -17, 1986.
10. **வரதராஜன்.மா.,** : தமிழக நாட்டுப்புறப் பாடல்கள், வானதி பதிப்பகம், சென்னை, 1978.
11. **வானமாமலை நா. (தொ.ஆ)** : தமிழர் நாட்டுப் பாடல்கள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-98 அக்டோபர், 1987(இ.ப.).
12. **ராஜமாணிக்கம் (முகவை)** : காதில் விழுந்த கவிதைகள், 14,கரீம் சுபேதார் தெரு, இராயப் பேட்டை, சென்னை, டிசம்பர்-1985.


படிப்பகம்

* * *

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# எமது புதிய வெளியீடுகள்

## சிறுகதைகள்

| | | |
|---|---|---|
| எது நாகரிகம் | - | த. ராசு |
| மிஸ்டர் பார்லிமெண்ட் | - | ஜெகாதா |
| சுவரை நம்பியா சித்திரங்கள் | - | சூரங்குடி அ. முத்தானந்தம் |
| டிசம்பர் - 6 | - | சரோஜாபாண்டியன் |
| நிலவில்லாத இரவு | - | சுமதீந்திரநாடிக் |
| அறிவுரை கூறும் அற்புதக்கதைகள் | - | எம். ஏ. பழனியப்பன் |
| நித்தியமானது | - | பொன்னீலன் |
| ஒரு மிதமிஞ்சிய நாட்குறிப்பு | - | கமலநாபன் |
| ஆட்டு மந்தைகள் | - | சுசீலா கணேசன் |

## நாடகம்

| | | |
|---|---|---|
| சாந்தி | - | ப. வேலுசாமி |
| பேராசிரியர் பிரம்மச்சாரி | - | முனைவர் அ. சிவக்கண்ணன் |
| ஒற்றைக்கால் பறவை | - | கமலவேலன் |
| தாம்பத்யகீதம் - கவிதை | - | சுமதீந்திரநாடிக் |
| கலைவாணர் கண்ட ரஷ்யா - மேடைப்பேச்சு | - | பொ.க. சாமிநாதன்<br>க. பரமசிவன் |
| சிரிப்போம் சிந்திப்போம் - *நகைச்சுவைச் செய்திகள்* | - | மலையமான் |

படிப்பகம்